26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca


# UTHAYAN உதயன்

Issue: 1370

Friday July 8, 2022

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada




HOMELIFE FUTURE REALTY IS CELEBRATING
20th YEAR Anniversary
Future Vision Realty Inc.
Real Estate
Income Tax
Mortgages
SickKids FOUNDATION
Raised a total of OVER
$100,000
IN DONATIONS SINCE 2012
Pandemic Food Drive Sri Lanka
MARKHAM STOUFFVILLE HOSPITAL
Raised a total of OVER
$25,000
IN DONATIONS
Toy Drive York Region Police
DONATED OVER
$13,700
&
$5,000
for the vocational training project
Ajax Pickering Hospital Foundation
Fundraised Over
$10,000
IN DONATIONS
DONATED OVER
$28,000
to the Thilakavadiyar Children Home Building
FOOD DRIVE
SRI LANKA
600+ AGENTS
5,000 SQUARE FT. OFFICE
OPEN 24/7 FOR AGENT AND CLIENT ACCESS
HOMELIFE
HIGHER STANDARDS
"Your Home. Your Future"
NO FRANCHISE FEES OR DESK FEES
FULL SERVICE OFFICE
HOMELIFE
FUTURE REALTY INC., BROKERAGE
Selva Vettyvel
Broker of Record
416-568-4301
"Success is not an accident, it's your choice. Choose HomeLife Future."

DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1370
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday July 8, 2022

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# கனடிய விமான நிலையங்களில் ஊழியர்களின் தட்டுப்பாடு காரணமாக விமான சேவைகள் பல இரத்து செய்யப்படலாம் என எச்சரிக்கை

கனடிய விமான நிலையங்களில் ஊழியர்களின் தட்டுப்பாடு காரணமாக விமான சேவைகள் பல இரத்து செய்யப்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது கனடிய விமான நிலையங்கள் பலவற்றில். தாமதங்கள் மற்றும் விமான சேவைகள் பல இரத்துசெய்யப்படுதல் ஆகியன தொடர்வதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக விமானப் பணியாளர்களின் தொழிற்சங்கப் பிரமுகர்கள் கனடிய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)




# ரொறன்ரோவில் தங்கள் தாடியை முழுமையாக சவரம் செய்ய சம்மதிக்காத பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேலையை இழந்தனர்



கனடாவின் ரொறன்ரோ மாநகரில் நகர சபையின் பல திணைக்களங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சீக்கிய இனத்தைச் சேர்ந்த பல பாதுகாப்பு அதிகாரிகள் தங்கள் தாடியை முழுமையாக சவரம் செய்ய சம்மதிக்காத காரணத்தால் தங்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேலையை இழந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த துர்ப்பாக்கிய சம்பவம் பற்றி அறியப்படுவதாவது...

(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)

# மொன்றியால் வாழ் கண்பார்வை குறைந்த இளைஞரும். இசையிலும் கல்வியிலும் முழுக் கவனம் செலுத்தும் கலைஞன் கௌரீஸ் வழங்கும் இசை நிகழ்ச்சி



மொன்றியால் வாழ் கண்பார்வை குறைந்த இளைஞரும். இசையிலும் கல்வியிலும் முழுக் கவனம் செலுத்திய வண்ணம் தனது தாயாரின் வழிகாட்டலில் இயங்கிவருபவருமான இசைச் செல்வன். "நண்பன்" விருது பெற்ற கலைஞன் கௌரீஸ் அவர்களின் இசை நிகழ்ச்சிக்கு உங்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இந்த இசை விழாவில் அவர் பாடிய எமது மண்ணின் பாடல்களும் அடங்கிய இசைத் தட்டு வெளியீடும் எதிர்வரும் 9ம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. ஸ்காபுறோ ஸ்ரீ ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்து தாயகத்தில் வாழும் பார்வையற்ற இளைஞர் யுவதிகளுக்கு உதவும் கௌரீஸ் அவர்களின் மனித நேய திட்டத்திற்கு உதவிடுங்கள்.

---

இங்ஙனம் - நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் சார்பில் பாடகர் பிரபா பாலகிருஸ்ணன்

RE/MAX ACE Realty Inc., Brokerage
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
Mortgage Alliance
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE Realty Inc. Brokerage
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
RE/MAX Realtron Blue Force
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## Help Wanted

Part time kitchen helper and dishwasher wanted.

Part time wait staff for banquet party wanted.

Markham (Woodbine & Steeles)
Call Amar : 416-988-9518

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN: 416-894-6244



## Construction Workers Hiring Now

We are looking for a **Layout Assistant** for high-rise building to join our extraordinary Team at Advik Construction in Downtown TORONTO.

Term of employment: Full Time

Schedule:
- 8 hour shift
- Monday to Friday

Start date: Soon As Possible

**Salary: $18 to $25 per hour**

**Qualification / Skills:**
- Physical strength
- Math proficiency
- Problem-solving skills
- Teamwork
- Ability to use tools
- Leadership
- Undertake necessary training
- Prioritize your safety
- Learn new skills
- Coordination
- Time management

**Education:**
- Minimum a High School Graduate in Canada or outside Canada.

**CONTACT DETAILS:** If you are interested in this opportunity, please send your resume and apply now.

Contact by: **bee24.7@hotmail.ca**
**(416) 786-5504**

## Restaurant வேலை வாய்ப்புக்கள்

Yonge and Eglinton சந்திப்புக்கு அருகில் இயங்கிவரும் கனடிய உணவகம் ஒன்றுக்கு: Full Time அல்லது Part Time Line Cooks மற்றும் Dish Washers உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்.

அனுபவம் விரும்பத்தக்கது. ஆர்வமுடையோர் 416-627-6452 என்னும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

## மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் 44 வயதுடையவரும் கனடிய பிரஜாவுரிமை பெற்றவருமான மணமகனுக்கு அவரது நண்பர்கள் தகுந்த மணமகளை கனடாவில் தேடுகின்றனர். மணமகள் அழகானவராகவும், கல்வி கற்றவராகவும் இருத்தல் அவசியம்.

தொடர்புகளுக்கு:
(647) 806-9790
என்னும் இலக்கத்தை அழைக்கவும்

## AVAILABLE NOW: Fully Furnished Office

Fully furnished, 780 Sq.Ft. office available at Victoria Park & Finch

Contact:
REV.Rajah Alexander
(647) 923-8750

## மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் 30 வயதுடையவரும், தகவல் தொழில் நுட்பத்துறையில் பணியாற்றுகின்றவருமான மணமகனுக்கு அவரது பெற்றார் தகுந்த மணமகளை கனடாவில் தேடுகின்றனர். மணமகள் அழகானவராகவும், பட்டம் பெற்றவராகவும் இருத்தல் அவசியம்.

தொடர்புகளுக்கு:
(647) 609-5031
என்னும் இலக்கத்தை அழைக்கவும்

## Manufacturing Workers & General Labour Needed

உற்பத்தித் தொழிலாளர்கள் மற்றும் பொதுத் தொழிலாளர்கள் முழுநேர காலைப் பணிகளுக்குத் தேவை

Manufacturing Workers and General Labour Needed for Full-time Morning Shifts
Looking for Workers to add to our team.
We are looking for hard-working and dedicated people for long-term positions.
Located in Scarborough near Markham and Ellesmere.
Salary starting from $16.00 + with benefits.

Contact - Essan : 647-993-2872


## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415



## லக்ஷ்மி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

சுலபமாய் ஒரு சுயம்வரம்
647-961-6886

## Sales Representative Needed / விற்பனை பிரதிநிதி தேவை

We are looking for an individual who has a desire to succeed, is highly self-motivated, is client-oriented proactive, organized, have quick thinking, and has excellent time management skills. Eco-Friendly Pallet provides all training necessary to ensure you are set up for success and a complete understanding of the pallet industry.

Responsibilities:
-Present and sell company products to potential customers
-Find and cold-call new prospects in existing and in new markets
-Prospect and contact potential customers while generating quality leads
-Must be result-driven and reach agreed sales targets by the deadline
-Resolve customer inquiries and complaints about the products
-Strong organization, and communication skills and be goal-oriented
-Ability to work in B2B corporate sales environment
-Must have a professional appearance and manner

Qualifications:
-Must have 2 or more years of outside sales experience
-Great written and verbal communications skills
-Good Microsoft Office abilities
-Ability to build a great and strong rapport with clients
-Strong negotiation skills
-Deadline and detail-oriented
-Exceptional Time Management skills and Organizational Skills Required
-Must have a valid driver's license and reliable transportation
-Bonus: has experience in the pallet industry

Benefits:
-Competitive base salary + Uncapped commission
-On-going training and development to ensure your success
-Health Benefits option available

Contact - Essan : 647-993-2872

## ATSIN LAW சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills

Notary Public/Commissioner

SAROJINI SINIVASAN
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 — Email: atsinlaw@gmail.com

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் கௌரவமான குடும்பத்தில் பிறந்தவரும் தற்போது அவுஸ்த்திரேலியாவில் Civil Engineer ஆக பணியாற்றுகின்றவரும் Australia நிரந்தரப் பிரஜையும் 1976ம் ஆண்டு பிறந்தவருமான மணமகனுக்கு மணப்பெண் ஒருவரை அவருடைய உறவினர்கள் தேடுகின்றனர். எந்த நாட்டிலிருந்தும் விண்ணப்பிக்கலாம். மணமகன் விவாகரத்து பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் விபரங்களுக்கு 647-667-8176 என்னும் தொலைபேசி இலக்கத்திலோ அன்றி layanthan24@yahoo.ca என்னும் மின்னஞ்சல் ஊடாகவோ தொடர்பு கொள்ளலாம்.

## இலங்கை உணவகங்களில் வேலை வாய்ப்பு

**Perth, Niagara Falls,** மற்றும் **Blue Mountain** ஆகிய நகரங்களில் சிறப்பாக இயங்கிவரும் இலங்கை உணவகங்களில் இலங்கை உணவுகளை தயாரிக்கத் தெரிந்த சமையல் வல்லுனர்களும் **(cooks),** சமையல் உதவியாளர்களும் **(kitchen helpers)** உடனடியாகத் தேவை. அனுபவம் அவசியமில்லை. தகுந்த சம்பளமும் தங்குவதற்கு இடமும் உணவும் வழங்கப்பெறும்.

தொடர்புகளுக்கு செந்தூரன்:
416 - 569 - 8173

## வேலைக்கு ஆட்கள் தேவை

**Bloomington & McCowan**

**Stouffville** நகரில் உள்ள **Golf Club** இற்கு **Cook & Dishwasher** உடனடியாக தேவை.
**Full tie or Part time.**

**Please call or text : Ravi**
**416-909-9651**

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

உதயன் கதிரோட்டம்

# தீவின் தெருவோரங்களில் ஒலித்த ‘கோட்டா கோஹோம்’ பாராளுமன்றத்திலும் புகுந்து கொண்டது

இலங்கைப் பாராளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களுடன் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாசவை தவிர்த்து ஓரோயொரு உறுப்பினராக ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ரணில் விக்கிரமசிங்கா என்னும் ‘அக்கிரமத்திற்கான’ அரசனை பிரதமராக நியமித்த ஜனாதிபதி கோட்டாபாய அவர்கள், அந்த நியமனம் இடம்பெற்று சில மாதங்களில் அவர் நியமித்த பிர-தமரால் பாராளுமன்றத்தை நடத்த இயலாமற் போனமைக்காக நிச்சயம் வருந்தியிருப்பார்.
இதற்குக் காரணம். அன்றைய தினம் சபாநாயகரின் ஆசனத்தில் அமரா-மல் வழமைக்கு மாறாக சபை ஆசனங்களில் ஒன்றில் அதிலும் பிரதமர் ரணிலுக்கு அருகில் அமர்ந்திருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் நாடாளுமன்ற வருகை சில நிமிடங்களில் முடிவடைந்ததே இன்றைய செய்தியாக எழுந்து நிற்கின்றது.
இந்த சம்பவமானது, இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் அல்லது ஜனாதிபதியின் வரலாற்றில் இதுவரை நிகழாத ஒன்றாகவே கருதப்படுகின்றது. வெளிநாடுகள் கூட ‘மூக்கை நுழைக்கும்’ விடயமாக மாறிவிட்ட இந்த அவமானச் சம்பவம் தொடர்பாக பிரதமராக வெறு-மனே ஆசனத்தில் அமர்ந்திருக்கும் அவர் கூட எவ்வித கருத்தையும் கூற முன்வரவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் எப்போதும் நடக்காத சம்பவம் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளதை நாம் நன்கு கவனிக்க வேண்டும்.

அன்றைய தினம் தனது அதிகாரத்திற்குள் இருக்கும் இலங்கையின் நாடாளுமன்றத்திற்கு சென்ற ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச அங்கு தொடர்ந்து அமர்ந்திருக்க முடியாமல். எழுந்து சென்ற விடயமானது மக்களை சிந்திக்கவும் செய்திருக்கின்றது என்பதும் உண்மைதான்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாடாளுமன்றத்திற்கு சென்றிருந்ததுடன் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு அருகில் அமர்ந்திருந்தார். அப்போது வீதிகளில் மட்டுமே ஒலித்துக்கொண்டிருந்த ‘கோட்டா கோ ஹோம்’ என்னும் உரத்த கோசங்கள், அங்கும் உரத்து கேட்கும் என்று அவரோ அன்றி அவருக்கு அருகிலிருந்த ரணிலோ எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

அங்கு வழமைபோல். தனது வாய்ச் சொல் வீரத்தைக் காட்டுவதற்காக பிரதமர் ரணில் சர்வதேச நாணய நிதியத்துடன் தானும் தனது குழு-வினரும் நடத்தும் பேச்சுவார்த்தைகள் மற்றும் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் தொடர்பில் உரத்துப் பேசத் தொடங்கினார்.

இதன் போது எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு தடையேற்படுத்தி, ஜனாதிபதிக்கு எதிராக கோசங்களை எழுப்பினர். ‘கோட்டா கோ ஹோம’ என கோசமிட்டு அவர்கள் ஜனாதிபதிக்கு தமது எதிர்ப்பைக் காட்டி நின்றனர்

அப்போது, நாடாளுமன்ற அவையில் இருந்து வெளியேறிய ஜனாதிபதி வரலாற்றில் எப்போதும் நடக்காத சம்பவம் ஒன்றுக்கு காரணகர்த்தாவாக அமைந்துவிட்டார்
இவ்வாறான அவமானத்தை மட்டுமல்லாது, பயனில்லாத பிரதமர் ஒருவரையும் நியமித்து நாட்டு மக்களையும் அறிவார்ந்தவர்களின் சமூகத்தையும் ஏமாற்றும் இந்த ‘இயலாத தலைவர்கள்” இருவரும் இனிமேலும் நாட்டின் அதிகார சபைக்கு தேவையற்றவர்கள் என்பதே அன்று நிரூபணமாகியுள்ளது. இதுவும் அங்குள்ள உண்மைத் தன்மையாகும்.

## கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

**கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொதுக்கூட்டம் (AGM) யூலை மாதம் 9 ஆம் திகதி 2022 சனிக்கிழமை பின்வரும் முகவரி-யில் காலை 10:30 மணியளவில் நடைபெறஇருக்கின்றது. யூலை 2022, 2023, யூன் 2024 ஆம் ஆண்டு வரைக்கான நிர்வாகசபைத் தெரிவும் இந்த நிகழ்வில் இடம் பெற இருக்கின்றது.**

Address: Frontline CommunityCentre
3031 Markham Rd #27 Scarborough ON M1X 1L9
**அங்கத்தவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**


**குரு அரவிந்தன் - தலைவர்**
**ஆர். என். லோகேந்திரலிங்கம் - செயலாளர்**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh. |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# இசைஞானி இளையராஜாவை மாநிலங்களவை எம்பி – ஆக மத்திய அரசு நியமித்துள்ளது



மாநிலங்களவையில் மொத்தம் உள்ள எம்பிக்களில் 12 பேரை குடியரசுத் தலைவர் தனது அதிகாரத்திற்கு உட்பட்டு நியமன எம்பிகளாக நியமிக்கலாம். அதன்படி கலை, அறிவியல், இலக்கணம், விளையாட்டு, சட்டம், சமூக சேவை உள்ளிட்ட துறைகளில் சிறப்பாக பங்களிப்பை வழங்கியவர்களுக்கு மாநிலங்களவையின் நியமன எம்பி பதவியை வழங்கி மத்திய அரசு கவுரவித்து வருகிறது. தற்போதைய நிலையில் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ரஞ்சன் கோகாய், ராகேஷ் சின்கா உட்பட ஐந்து பேர் நியமன எம்பிக்களாக உள்ளனர். மேலும் காலியாக உள்ள இடங்களுக்கு எம்பிக்களை நியமனம் செய்து மத்திய அரசு அறிவித்துள்ளது.

தமிழகத்தை சார்ந்த இசைஞானி இளையராஜாவை மாநிலங்களவை எம்பி-ஆக மத்திய அரசு நியமித்துள்ளது. இசைத்துறையில் அவர் செய்த அளவிட முடியாத சாதனைகளை அங்கீகரித்து கௌரவிக்கும் பொருட்டு இந்த பதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இளையராஜாவுக்கு மாநிலங்களவை நியமன எம்பி பதவி வழங்கி இருப்பதற்கு முதலமைச்சர் மு க ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து தனது கீச்சகப் பக்கத்தில், ”இசையால் நம் உள்ளங்களையும் மாநிலங்களையும் ஆண்ட “இசைஞானி“ இளையராஜா அவர்கள் நாடாளுமன்ற மாநிலங்களவையில் உறுப்பினராய்ச் சிறப்புறச் செயல்பட வாழ்த்துகள்” என தெரிவித்துள்ளார்.

தொழிற்சாலையில் உடனடி வேலை வாய்ப்பு



ஸ்காபுறோவில்
Markham & Finch சந்திப்பிற்கு அருகில் இயங்கிவரும் அலுமாரி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் உடனடியாகத் தேவை.

அனுபவம் விரும்பத்தக்கது.

-> Cabinet Maker - அலுமாரி செய்பவர்
-> Saw Operator - பலகை வெட்டுபவர்
-> Cabinet Installer - அலுமாரி பூட்டுபவர்
-> Spray Painter - பெயின்ட் அடிப்பவர்

தொடர்புகளுக்கு: (416) 994-7776

# கனடிய விமான நிலையங்களில் ஊழியர்களின் தட்டுப்பாடு காரணமாக விமான சேவைகள் பல இரத்து செய்யப்படலாம் என எச்சரிக்கை




கனடிய விமான நிலையங்களில் ஊழியர்களின் தட்டுப்பாடு காரணமாக விமான சேவைகள் பல இரத்து செய்யப்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது கனடிய விமான நிலையங்கள் பலவற்றில். தாமதங்கள் மற்றும் விமான சேவைகள் பல இரத்துசெய்யப்படுதல் ஆகியன தொடர்வதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக விமானப் பணியாளர்களின் தொழிற்சங்கப் பிரமுகர்கள் கனடிய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

குறைந்த ஊதியம் மற்றும் மோசமான வேலை நிலைமைகள் தொழில்துறையில் பல தொழிலாளர்களுக்கு இறுதி முடிவாகவும் அவர்களில் பலர் வேலையை இழக்கச் செய்வதற்கு காரணமாக அமையலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது, இதைத் தொடர்ந்து தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் வரவிருக்கும் மாதங்களில் வேலைநிறுத்தங்கள் அல்லது வேலை நீக்க நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் என்று தொழிற்சங்கங்களின் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 1,000 விமானப் பணிப்பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கனேடிய பொது ஊழியர்களின் உள்ளூர் தொழிற்சங்கத்தை வழிநடத்தும் ரெனா கிஸ்பால்வி, விமான நிலையங்களில் நிலவும் குழப்பம், தொழில்துறை முழுவதும் உள்ள பணியாளர் போராட்டங்களுடன் தொடர்புடையது என்பது தெளிவாகிறது என்றும் பணியாளர்கள் போராட்டங்கள் அல்லது வேண்டுகோள்கள் கவனிக்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

"நான் அதற்கு ஒரு முடிவை காணமுடியும் என்று நம்பவில்லை. இது மெதுவாக மீண்டும் சிக்கல்களை உருவாக்கும்," என்றும் அவர் கூறினார்.

பல தொழிலாளர்கள் ஏற்கனவே தொழிலை விட்டு வெளியேறும் விளிம்பில் உள்ளனர் என்றும் கிஸ்பால்வி கூறினார், மேலும் பின்தங்கியவர்களின் நிலைமைகள் மோசமடைந்துள்ளன. முதலாளிகள் மற்றும் அரசாங்கத்திடம் இருந்து சிறந்த ஊதியம் மற்றும் வேலை நிலைமைகள் பற்றி எவ்வித அறிவிப்பும் வராமல் இருப்பதால் இனி வரும் மாதங்களில் விமான போக்குவரத்து துறையில் வேலைநிறுத்தங்கள் மற்றும் வேலை நடவடிக்கைகள் மிகவும் பொதுவானதாகிவிடும் என்று அவர் கவலை தெரிவித்தார்.

"இது கொதிநிலை," என்றும் அவர் சொன்னார். இதில் பல விமான நிலையங்களில் பாதுகாப்புப் பரிசோதகர்கள், இரண்டு விமான நிலையங்களில் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் கனடா எல்லைப் பாதுகாப்பு ஏஜென்சி அதிகாரிகள் ஆகியோர் உள்ளனர்.

ஏறக்குறைய 2,000 விமான நிலையப் பாதுகாப்புத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யுனைடெட் ஸ்டீல்வொர்க்கர்ஸ் தொழிற்சங்கத்தின் தலைவர் டேவிட் லிப்டன், தனது கருத்தை தெரிவிக்கும் போது தொழிற்சங்கத்தின் உறுப்பினர்கள் பல விமான நிலையங்களில் பேரம் பேசுகிறார்கள், ஒட்டாவா விமான நிலையம் உட்பட, அண்மையில் விமான நிலையங்களின் நிர்வாகம் அறிவித்த சலுகை தொடர்பான விடயங்கள் தொழிலாளர்களால் நிராகரிக்கப்பட்டது,

ஏனெனில் அது போதுமான உயர் ஊதிய உயர்வை வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த இறுக்கமான விமான நிலையத்தில் பணியாற்றும் தொழிலாளர் கூட்டத்திலிருந்து, பல தொழிலாளர்கள் வேறு வேலைகளுக்குச் செல்கிறார்கள், மீதமுள்ளவர்கள் அதிக வேலைகளைச் செய்த நிலையில் குறைந்த ஊதியம் பெறுகிறார்கள் என்று தொழிற்சங்கத் தலைவர் லிப்டன் கூறினார்.

விமான நிலையங்களில் பாதுகாப்பு மற்றும் பரிசோதனைகள் செய்யும் கடமைகளைச் செய்பவர்கள் வேலைநிறுத்த நடவடிக்கையில் இறங்கினால் நிலைமை எப்படி இருக்கும் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை, என்றும் அவர் கூறினார் - கனடா தொழில்துறை உறவுகள் திணைக்களம் இது பற்றிய அறிவிப்பில் அவர்களின் வேலை எவ்வளவு அவசியமானது என்று தீர்மானிக்க வேண்டும். எனவே தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு அளித்தால் அவர்கள் வேலையை விட்டு முழுமையாக வெளியேறுவதற்கு காரணமாக கருதப்படலாம் என்றும், லிப்டன் கூறினார்.

வின்னிபெக் மற்றும் எட்மண்டன் விமான நிலையங்களில் டீம்ஸ்டர்ஸ் கனடா பிரதிநிதித்துவப்படுத்தும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கூட விரைவில் விமான நிலையங்களின் நிர்வாகத்துடன் பேரம் பேச முன்வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வான்கூவர் விமான நிலையத்தில், பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு வரும் அதிகாரிகள் "மிகக் கடினமான" பேரம் பேசுவதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் சுமார் 4,000 விமான நிலையப் பாதுகாப்புப் பணியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மெ'னிஸ்ட்கள் மற்றும் விமானப் பயணப் பணியாளர்களின் சர்வதேச சங்கத்தின் தலைவர் டேவ் ∴ப்ளவர்ஸ் கூறினார்.

கனேடிய விமானப் போக்குவரத்து பாதுகாப்பு ஆணையத்தின் (CATSA) ஒப்பந்ததாரரான Allied Universal, ஒப்பந்தத்தின் முதல் வருடத்திற்கு எவ்வித உயர்வையும் வழங்கவில்லை என்று தலைவர் ∴ப்ளவர்ஸ் தெரிவித்துள்ளார். இதற்கிடையில், ஊதியம் மற்றும் வேலை நிலைமைகள் தொழிலாளர்களைத் தக்கவைத்துக்கொள்வதில் சிரமத்திற்கு வழிவகுக்கும் என்று அவர் கூறினார். அண்மையில் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் கடுமையான பரிசோதனைகளைச் செய்பவர்கள், ஆகியோர். விமான நிலையத்திற்கு வெளியே அதிக ஊதிய உயர்வு மற்றும் வேறு நிபந்தனைகளை முன்வைத்து பேரணி நடத்தினர்.

இது இவ்வாறிருக்க, "கடந்த ஆறு வாரங்களில் வெற்றிகரமான மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு மூலம் மே மாதத்தில் ஏற்பட்ட பணியாளர் பற்றாக்குறை தீர்க்கப்பட்டுள்ளது," என்று விமான நிலையங்களின் நிர்வாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்

முன்னாள் Air Canada நிர்வாகியும், McGill பல்கலைக்கழகத்தின் Global Aviation Leadership Program இன் தலைவருமான ஜோன் இது தொடர்பாக தகவல் தருகையில் கடந்த பத்தாண்டுகளில், விமானப் போக்குவரத்துத் துறையில் துணை ஒப்பந்ததாரர்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதால், ஊதியம் குறைந்துள்ளது என்றும் இதனால் நிரந்தர தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

# பார்கின்சன்ஸ் நோயினால் ஏற்படும் நடுக்கவாதம்

நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டை அதிகரிக்கும் டோபமைன் **(Dopamine)** எனும் ஹார்மோன் சுரப்பு குறைவடைவதால் ஏற்படும் பாதிப்பு தான் "பார்கின்சன்ஸ் நோயினால் ஏற்படும் நடுக்கவாதம்" என மருத்துவ விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். இதனை ஆங்கிலத்தில் **Parkinson's Temor** என்பர். கட்டுபடுத்த முடியாத நடுக்கம் மற்றும் தசை இறுக்கம் ஆகிய அறிகுறிகளுடன் இந்நோய் உலகளவில் 10 மில்லியனுக்கும் அதிகமான மக்களை பாதித்துள்ளது. அதில் ஆண்களே அதிகம்.

நீங்களோ அல்லது உங்களை அண்டியவர்களோ இந்நோயிற்கு உள்ளாகியிருந்தால் அதற்கான சிறந்த சிகிச்சையைப் பெற உங்களை பரிந்துரைக்கின்றோம். இந்தப் பதிவில் இந்நோயிற்கான காரணங்கள், அறிகுறிகள் மற்றும் சிறந்ததொரு சிகிச்சை முறையையும் அறிந்து கொள்ளலாம்.

காரணங்கள்

இந்நோயினால் அதிகம் பாதிக்கப்படுவது வயோதிபர்களே! இதனை அடிப்படையாக வைத்து வயோதிபத்தின் காரணமாக ஏற்படும் மூளைச்சிதைவு தான் இதற்கு காரணம் என்று கூறினாலும், இன்று நடுத்தர வயதினரையும் இந்நோய் தாக்குவதால் சுற்றுசூழல், உணவுப்பழக்க வழக்கம் என்பனவும் காரணமாக இருக்கலாம் என்கிற யூகங்களே உண்டு. உண்மையில் பார்கின்சன்ஸ் நோயினால் ஏற்படும் நடுக்கவாதம் உருவாகுவதற்கான சரியான காரணங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அறிகுறிகள்

பார்கின்சன்ஸ் நோயினால் ஏற்படும் நடுக்கவாதமானது முதலில் ஒரு விரலில் நடுக்கத்தை தரலாம். பின் அது கைகளுக்கும், கால்களுக்கும் என உடல் முழுவதும் பரவலாம். இந்நோய் ஒருவரை முழுமையாக தாக்கும் போது உட்காரவும், எழும்பவும், நீர் அருந்தவும் என நாளந்த செயல்பாடுகளுக்கு கூட இன்னொருவரின் உதவியை எதிர்பார்க்க நேரிடும்.

இந்நோய் நிலைமையை உறுதிசெய்ய கை, கால், தலை மற்றும் உடல் முழுதும் ஏற்படும் நடுக்கம் என்பவற்றோடு மேலும் பல அறிகுறிகள் உள்ளன.

- நடையில் தடுமாற்றம்
- படுக்கையிலிருந்து எழுகையில் சிறு மயக்கம் ஏற்படுதல்
- நினைவு இழப்பு
- வாசனையை உணரமுடியாமை
- எதிலும் பற்றின்மை
- நடுக்கம் நாவை பாதிக்கையில் பேச்சு குழறல்
- உடலின் இயக்கம் குறைதல்
- மனச்சோர்வு அல்லது மனஅழுத்தம்
- சாப்பிடுவதில் சிரமம்
- சாப்பிடுகையில் இருமல் ஏற்படல்
- கைக்குலுக்க சிரமம்
- உடல் எடை குறைதல்
- மலச்சிக்கல்
- அடிக்கடி சிறுநீர் வெளியேற்றம்
- சோர்வாக இருத்தல்

மேற்சொன்ன அறிகுறிகளில் கைகளில் ஏற்படும் நடுக்கம் தான் பார்க்கின்சன்ஸ் நோயினால் ஏற்படும் நடுக்கவாதத்தை வெளிக்காட்டும் முக்கியமானதும் முதன்மையானதுமான அறிகுறியாகும்.

சிகிச்சை முறைகள்

பார்கின்சன்ஸ் நோயினால் ஏற்படும் நடுக்கவாதத்திற்கு பலவகையான சிகிச்சைகள் உண்டு. ஆனால் இவை எல்லாம் எல்லோருக்கும் பலனளிப்பதில்லை. இதற்கென உட்கொள்ளும் மருந்துகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஆனால் மருந்து மாத்திரைகளின் உதவியின்றி பார்கின்சன்ஸ் நோயின் நடுக்கவாதத்தை **JOGO** வின் உடற்பயிற்சி முறையிலான சிகிச்சை மூலம் கட்டுப்படுத்த முடியும். துழுபுழு ஒரு புதிய சிகிச்சை முறை. ஆச்சரியமாக இருக்கின்றதா? எவ்வாறு என்பதை அறிய தொடர்ந்து படியுங்கள்.

**JOGO** சிகிச்சை:

அண்மையில் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்ட துழுபுழு சிகிச்சையானது, இன்று பத்தில் 9 நோயளர்களை சத்திர சிகிச்சையிலிருந்து காப்பாற்றியிருப்பதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. பல்வேறு நோயளர்களைக் கொண்டு, பலவகையான தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டு நோயாளர்களின் ஆரோக்கியத்தின் முன்னேற்றத்தை அறிக்கைப்படுத்தி, அதனை மையமாகக் கொண்டு உருவானதே **JOGO** சிகிச்சை!

*(தொடர்ச்சி 6ம் பக்கம்)*

MAKING MUSCLE AND BRAIN WORK TOGETHER

JOGO சிகிச்சை மூலம் தீர்வு பெறக்கூடிய நோய்கள்:

JOGO




- Parkinson's Tremors (பார்கின்சன்ஸ் நோயினால் ஏற்படும் நடுக்குவாதம்)
- Stress Urinary Incontinence (தும்மும்போதோ, இருமும்போதோ அல்லது வாய்விட்டு சிரிக்கும்போதோ தன்னையுமறியாமல் சிறுநீர் கசிதல்)
- Voiding Dysfunction (சிறுநீரை முழுமையாக வெளியேற்றுவதில் சிரமம்)
- Mixed Incontinence (சிறுநீர் கசிதல் மற்றும் சிறுநீரை அடக்கமுடியாமல் சடுதியாக வெளியேற்ற வேண்டுமென்ற உந்துதல்)
- Pelvic Organ Prolapse (இடுப்பு மற்றும் மடி சார்ந்த உடல் உறுப்புகள் அதன் இயல்பான நிலையிலிருந்து கீழே நழுவி யோனிக்குள் வீங்குதல்)
- Post Prostatectomy Incontinence (புரோஸ்டேட் சுரப்பி அகற்றப்பட்ட பின்பான சிறுநீர் கசிவு)
- Functional Constipation (குடல் இயக்கங்ககளில் ஏற்படும் கோளாறுகளினால் உருவாகும் மலச்சிக்கல்)
- Chronic Lower Back Pain (நாள்பட்ட கீழ்முதுகு வலி)
- Defecation Dyssynergia (மலம்கழித்தலின் போது தசைகளின் சீரான செயற்பாட்டில் ஏற்படும் பின்னடைவு மற்றும் மாறுதல்)
- Chronic Pelvic Pain (இடுப்பு, மடி சார்ந்த பகுதிகளில் ஏற்படும் நாள்பட்ட வலி)
- Chronic Constipation (நாள்பட்ட மலச்சிக்கல்)
- Stroke (மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டத்தில் இடையூறு ஏற்படுவதால் உருவாகும் பக்கவாதம்)
- Spastic Hemiplegia (ஒரு பக்க உடல் பகுதி குறிப்பாக ஒரு பக்க கையும், காலும் செயலிழப்பு)
- Focal Dystonia (தசை மற்றும் தசைநார்களின் செயற்பாட்டு கோளாறுகள்)
- Foot Drop (பாதத்தொய்வு)
- Facial Palsy (முகவாதம்)
- Gullian Barre Syndrome (நரம்புகளையும், நோயெதிர்ப்பு சக்தியையும் தாக்கும் நோய்)
- Cerebral Palsy (மூளை வாதம் குறிப்பாக குழந்தைகளின் முளை வளர்ச்சியில் ஒப்பீட்டளவில் பின்னடைவு)
- Erectile Dysfunction (விறைப்புத்தன்மை குறைபாடு)
- Chronic Pain - Neck Pain, Shoulder Pain, Elbow Injury, Back Pain, Wrist Pain, Postural Misalignment (நாள்பட்ட முதுகு வலி, இடுப்பு வலி, மூட்டு வலி, கழுத்து வலி, தோள்பட்டை வலி)

**Phone:** +1 (416) 723-2000
**Toll Free :** +1 (877) 569-8282
**Fax:** +1 (647) 946-6480
**Web:** www.jogohealth.com
**Email:** torontoclinic@jogohealth.com

For Appointments
Call **(416) 723-2000**
or Scan below.

இந்தியா செய்திகள் India News

# திருச்சி சிறப்பு முகாமிலிருந்து ஈழச்சொந்தங்கள் 16பேர் விடுவிப்பு! - தமிழ்நாடு அரசுக்கு சீமான் நன்றி



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருச்சி, சிறப்பு முகாமிலிருந்து ஈழச்சொந்தங்கள் 16 பேர் விடுவிக்கப்பட்ட செய்தியறிந்து மகிழ்ந்தேன். நீண்டநெடுநாட்களாக நடந்தேறிய ஈழச்சொந்தங்களின் பட்டினிப்போராட்டத்திற்கும், கருத்துப்பரப்புரைக்கும் பிறகு, ஆறுதலாகக் கிடைக்கப்பெற்றிருக்கிற விடுதலை அறிவிப்பைப் பெரிதும் வரவேற்கிறேன். இம்முன்னெடுப்பைச் செய்த தமிழக அரசுக்கு எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்!

இதேபோல, இந்தியச்சட்டத்தின்படி தங்களை ஏதிலிகளெனப் பதிவுசெய்திருக்கும் ஏனைய ஈழச்சொந்தங்களையும் மற்ற சிறப்பு முகாம்களிலிருந்து விடுவிக்க வேண்டுமெனவும், காவல்துறையின் கியூ பிரிவினை விரைந்து கலைக்க வேண்டுமெனவும் தமிழக முதல்வருக்குக் கோரிக்கை விடுக்கிறேன்!

# இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் இரயில் பயண செலவு மட்டுமே ரூ.62 கோடியென இந்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது



பொதுவாக இந்தியாவில் அரசியல் பதவிகளில் இருக்கும் அரசியல்வாதிகளுக்கு அரசு சார்பில் சலுகைகள் உண்டு. அதில் வாகனப்போக்குவரத்து, தங்கும் இடம் என்று பல அடங்கும். அதன்படி இரயில்வேவில் பயணம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் (எம்.பி.) இரயிலில் உள்ள முதல் நிலை ஏ.சி. வகுப்பில் இலவசமாக பயணம் செய்யலாம். இதில் அவர்கள் மட்டுமின்றி அவரது மனைவியும் சில நிபந்தனைகளோடு பயன் பெறலாம். இதைப்போல் முன்னாள் எம்.பி.க்கள் இரண்டாம் நிலை ஏ.சி. வகுப்பில் இலவசமாக பயணம் செய்யலாம். இதற்கான கணக்கை இரயில்வேத்துறை மக்களவை செயலகத்துக்கு அனுப்பி வைத்து, இலவசப்பயணத்தின் செலவு ஒன்றிய அரசு வழங்கி வருகிறது.

இந்த நிலையில் கடந்த 5 ஆண்டு காலத்தில் இந்தியாவிலுள்ள முன்னாள் மற்றும் தற்போதைய எம்.பி.க்கள் மேற்கொண்ட பயண விவரம், அதற்கான செலவு குறித்து கேட்டு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மக்களவை செயலகத்துக்கு மத்திய பிரதேசத்தை சேர்ந்த சந்திரசேகர் கவுர் கடிதம் அனுப்பினார். இதற்கு பதிலளித்துள்ள மக்களவை செயலகம், கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் எம்.பி.க்களின் இரயில் பயண செலவு ரூ.62 கோடி என தெரிவித்துள்ளது. அதில் முன்னாள் எம்.பி.க்கள் ரூ.26.92 கோடி எனவும், தற்போதைய எம்.பி.க்களின் பயண செலவு ரூ.35.21 கோடி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கொரோனா காலத்தில் (2020-2021) மட்டும் மேற்கொண்ட பயண செலவு மட்டும் ரூ.1.29 கோடி என்று விளக்கமளித்துள்ளது.



# இனிய நந்தவனம் ஆசிரியருக்கு சர்வதேச தமிழ்த்தூதன் விருது



தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்த கடந்த 25 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் இனிய நந்தவனம் மக்கள் மேம்பாட்டு மாத இதழின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரனின் இலக்கியப் பணியைப் பாராட்டி சேலம் நகைச்சுவை மன்றம் 184 ஆவது மாத நிகழ்ச்சியில் 03-07-2022 அன்று "சர்வதேச தமிழ்த் தூதன்" என்ற விருது வழங்கப்பட்டது

தேசிய சமூக இலக்கியப் பேரவை மாநிலத் தலைவர் தாரை அ.தமரவேலு தலைமையில் சேலம் சண்முகா மருத்துவமனை தலைவர் மருத்துவர் பா.ச.பன்னீர்செல்வம் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்.

"சர்வதேச அளவில் தமிழர்களை சந்தித்து தமிழ்மொழியையும் தமிழ் கலாசாரத்தையும் வலுப்படுத்த வேண்டும் என்பதற்காக கடந்த 25 ஆண்டுகளாக உழைத்து வரும் நந்தவனம் சந்திரசேகரனின் இலக்கியப் பணி போற்றுதலுக்குறியது பத்திரிகைப் பயணம் என்பது சவாலான பயணம் அதில் ஏற்படும் இடர்களை எல்லாம் கடந்து மிகத் திறமையான முயற்சியுடன் உழைக்கும் இனிய நந்தவனம் ஆசிரியருக்கு உலகத் தமிழர்கள் தொடர்ந்து ஆதரவு கொடுக்க வேண்டும்" என்று தாரை. அ.குமரவேலு தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டார்.

பட்டிமன்றப் பேச்சாளர் கலையமுதன் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்து அனைவரையும் வரவேற்றார் எழுத்தாளர்கள் முனைவர் இளவரசி முருகவேல், லட்சுமிகாந்தன் மற்றும் பல இலக்கிய ஆர்வலர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,

Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# ரொறன்ரோவில் தங்கள் தாடியை முழுமையாக சவரம் செய்த சம்மதிக்காத சீக்கிய இனத்தைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேலையை இழந்தனர்

கனடிய செய்திகள் Canadian News




கனடாவின் ரொறன்ரோ மாநகரில் நகர சபையின் பல திணைக்களங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சீக்கிய இனத்தைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரிகள் தங்கள் தாடியை முழுமையாக சவரம் செய்த சம்மதிக்காத காரணத்தால் தங்கள்பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேலையை இழந்தனர் என அறிவிக்கப்பபட்டுள்ளது.

இந்த துர்ப்பாக்கிய சம்பவம் பற்றி அறியப்படுவதாவது: கோவிட்-19 தொற்று மீண்டும் பரவல் ஏற்பட்டால், மகத்தில் இறுக்கமான பொருத்தப்பட வேண்டிய N95 ரக முகக் கவசத்தை அணிய, வேண்டும் என ரொறன்ரோ நகரசபை நிர்வாகம் அறிவித்தது. எனவே. நகர சபையின் உத்தியோகத்தவர்கள் தங்குமிடமிடங்கள் மற்றும் ஓய்வு தளங்களில் பணிபுரியும் பாதுகாப்புக் உத்தியோகத்தர்கள் தங்கள் தாடிப்பகுதியை முழுமையாக சவரம் செய்ய வேண்டும் என்று ரொறன்ரோ நகர சபை நிர்வாகம் கட்டளை பிறப்பித்தது.

எனினும், நகர சபையின் இந்த கட்டுப்பாடுகளுக்கு அதிகளவிலான சீக்கிய இனத்தைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்தனர்.

இவ்வாறான பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவரான பிர்கவால் சிங் ஆனந்திடம், தாடியை முழுமையாக சவரம் செய்யும்படி கேட்டபோது, சீக்கியரல்லாத ஒருவரை "தங்கள் தோலை உரிக்க வேண்டும்" என்று கேட்பதற்கு சமமானது இந்த கட்டளை என்று பதிலளித்தாராம். இதனால் முதலில் பிர்கவால் சிங் ஆனந்த் பதவியிலிருந்து நீக்கப்பட்டாராம்.

எனவே, கடந்த மாதம் தனது தாடியை வைத்திருப்பதா அல்லது ரொறன்ரோ நகர சபையின் ஓய்வு தளத்தில் பணிபுரியும் வேலையை வைத்திருப்பதா என்ற கேள்வி சீக்கிய இனத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பாதுகாப்பு அதிகாரீகள் மத்தியில் தோன்றி நின்றன.

இவ்வாறு இரண்டு அழுத்தங்களுக்கு இடையே தேர்வு செய்ய வேண்டிய கட்டாயத்தில் சீக்கிய பாதுகாப்பு அதிகாரிகள் இருந்தபோது, தாடியை முழுமையாக சவரம் செய்வது சாத்தியமில்லை என அறிவிக்கப்பட்டதாம்.

மற்றுமொரு பாதுகாப்பு உத்தியோகத்தரான ஜக்மீட் ஜெயம்வால் தனது பதிலைத் தெரிவித்தபோது, "நான் அவர்களிடம் சொன்னேன், நான் சீக்கிய சமூகத்தைச் சேர்ந்தவன், முழுமையான சவரம் செய்வது எனக்கு விருப்பமில்லை" என்று கூறினாராம்.

இந்த விடயம் தொடர்பாக ரொறன்ரோவின் செய்தித் தொடர்பாளரான எரின் விட்டன், நகரத் தளங்களில் வேலை இழந்த பாதுகாப்பு உததியோகத்தர்கள் நிரந்தர பணியாளர்கள் அல்ல. அவர்கள் ஒப்பந்தக்காரர்கள், மூலம் பணிகளுக்கு அமர்த்தப்பட்டனர் என்றும் நகர சபையின் சொந்த பாதுகாப்பு ஊழியர்கள் அல்ல என்றும் தெரிவித்தார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

## "Naatha Veena Mandram" in Scarborough, Canada Celebrates its 10th Anniversary with Parents, Students and Well Wishers.

# 10வது ஆண்டு பூர்த்தி விழாவை பெற்றோர், மாணவர்கள் ஆகியோரோடு இணைந்து கொண்டாடிய ஸ்காபுறோ "நாதவீணா மன்றம்"

கனடா-ஸ்காபுறோ நகரில் ஆசிரியை ஸ்ரீமதி குகனேஸ்வரி சத்தியமூர்த்தி தலைமையில் வெற்றிகரமாக இயங்கிவரும் "நாதவீணா மன்றம்" தனது 10வது ஆண்டு பூர்த்தி விழாவை பெற்றோர். மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரோடு கடந்த கனடா தினத்தன்று - யூலை 1ம் திகதி - இணைந்து சிறப்பாக கொண்டாடியது. இந்த விழா ஸ்காபுறோவில் அமைந்துள்ள இசைக் கலா மன்றத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.



சிரியை ஸ்ரீமதி குகனேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களின் அழைப்பின் பேரில் பிரதம விருந்தினராக கனடா உதயன் ஆசிரியர் நாகமணி லோகேந்திரலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினராக ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி டொலி பேகம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரைகளை ஆற்றியும் மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கியும் கௌரவித்தனர்.

"ரைம் எப் எம் வானொலி" அறிவிப்பாளரும் நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான இளங்கோ நிகழ்ச்சிகளை இனிதாக தொகுத்து வழங்கினார்.

வழமைபோல கடந்த கால ஆண்டு கால விழாக்களைப் போல அன்றை



பத்தாவது ஆண்டு விழாவில் மேடையில் தோன்றிய அனைத்து மாணவர்களும் நேர்த்தியாகவும் இனிமையாகவும் தங்கள் இசைச் சமர்ப்பணங்களைச் ஆற்றினர். மிருதங்க வித்துவான் இராஜலிங்கம் வாசுதேவன் அவர்களின் மாணவர்கள் பக்கவாத்தியங்களான மிருதங்கம், தபேலா மற்றும் கடம் ஆகியவற்றை இசைத்தனர்.

அங்கு உரையாற்றிய ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி டொலி பேகம் தனது உரையில் கனடாவில் ஈழத் தமிழர்கள் தங்களை ஆற்றல் அறிவு ஆகியவற்றைக் கொண்டு நாட்டுக்கு சிறந்த சேவையாற்றி வருகின்றார்கள் என்றும் அந்தவகையில் தங்கள் பாரம்பரிய கலைகளைப் பேணுவதன் மூலம் இநத நாட்டுக்கும் ஏனைய இனத்தவர்களுக்கும். தங்கள் சமூகத்தில் உள்ள இளையவர்களுக்கும் மன நிறைவை தருகின்றார்கள் என்றும். இன்றைய விழா நாயகி ஆசிரியை ஸ்ரீமதி குகனேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களும் சமூகத்திற்கும் இசைக்கும் பங்களிப்பு செய்து வருகின்றார் என்றும் தெரிவித்ததார்.

அங்கு உரையாற்றிய பிரதம விருந்தினர் நாகமணி லோகெந்திரலிங்கம் அவர்கள் இங்கு இயங்கிவரும் நுண்கலைக் கூடங்களில் சிரியை ஸ்ரீமதி குகனேஸ்வரி சத்தியமூர்த்தி தலைமையில் வெற்றிகரமாக இயங்கிவரும் "நாதவீணா மன்றம்" தனது இசைப் பணியை சிறப்பாகச் செய்து வருவதாகவும், அத்துடன் ஆசிரியை அவர்கள் குருவாக மற்றுமன்றி மாணவர்களுக்கு "கலைத் தாயாகவும்" இருந்து அவர்களை வழி நடத்துகின்றார் என்று தெரிவித்தார்.

(படங்கள்: சத்தியன் மற்றும் செல்வி சுருதி சுரேசன்)







# கனடா இந்து

CANADA HINDU

Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648


# துர்க்கேஸ்வரத்தில் மகோற்சவம் ஆரம்பமாகிவிட்டது



7-7-2022 வியாழன் கொடியேற்ற காட்சிகள்



## துர்க்கேஸ்வரத்தில் தேர்த்திருவிழா 30-7-2022 சனி

07-07-2022 வியாழன்
கொடியேற்றம்

## இனி வரும் திருவிழாக்கள்

கைலாசவாகனம்
12-07-2022 செவ்வாய்
இரவு 8.00 மணி

மஞ்சத் திருவிழா
16-07-2022 சனி
இரவு 8.00 மணி

வசந்தோற்சவம்
24-07-2022 ஞாயிறு
இரவு 8.00 மணி

பக்த முத்தி
பாவனோற்சவம்
26-07-2022 செவ்வாய்
இரவு 8.00 மணி

ஞானப்பால் உற்சவம்
27-07-2022 புதன்
இரவு 8.00 மணி

வேட்டைத் திருவிழா
28-07-2022 வியாழன்
இரவு 8.00 மணி

சப்பறம்
29-07-2022 வெள்ளி
இரவு 8.00 மணி

தேர்த்திருவிழா
30-07-2022 சனி
காலை 9.00 மணி

தீர்த்தம்
பூரகர்மம் ருதுசாந்தி
31-07-2022 ஞாயிறு
காலை 9.00 மணி

பூங்காவனம்
1-08-2022 திங்கள்
மாலை 6.30 மணி

வைரவர் மடை
2-08-2022 செவ்வாய்
மாலை 6.30 மணி

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கையில் கைதாகியுள்ள 12 மீனவர்களை விடுவிக்க கோரி பிரதமருக்கு கடிதமெழுதியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின்



12 மீனவர்களை விடுவிக்க கோரி பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தை சேர்ந்த ஏழு மீனவர்கள் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த ஐந்து மீனவர்கள் உட்பட 12 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்ட 12 மீனவர்களையும் அவர்களது மீன்பிடி படங்களையும் விடுவிக்க வலியுறுத்தி மத்திய வலியுறுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் 15-6-2022 அன்று 61 நாட்கள் மீன்பிடி தடை காலத்திற்கு பின் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க தொடங்கிய நிலையில், 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள இந்த சம்பவம் தமிழக மீனவர்களை அச்சுறுத்தும் வகையில் உள்ளது. இந்த சம்பவம் மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பின்மையை ஏற்படுத்துவதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ள தமிழக முதல்வர், இலங்கை சிறைபிடிக்கப்பட்டுள்ள 12 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப்படையினையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய தூதரக வழிமுறைகள் வாயிலாக விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

# மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அநுர குமார திஸாநாயக்கவின் திட்டம் நாட்டின் பிரச்சனைகளை தீர்க்குமாக இருந்தால், பிரதமர் பதவியிலிருந்து பதவி விலக தயார்

## - ரணில் பாராளுமன்றத்தில் அறிவிப்பு





தமக்கு ஆட்சி வழங்கப்படும் பட்சத்தில், 6 மாத காலத்தில் நாட்டை வழமைக்கு கொண்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளதாக பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

நாட்டை கட்டியெழுப்பும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவின் திட்டம் நாட்டின் பிரச்சனைகளை தீர்க்குமாக இருந்தால், பிரதமர் பதவியிலிருந்து விலக தான் தயார் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்திய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவ்வாறான திட்டங்கள் இருந்தால், அதனை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறும், ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க விருப்பம் இல்லையென்றால், அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அநுர குமார திஸாநாயக்கவினால் வழங்கப்படும் திட்டம் சாதகமாக இருக்கும் பட்சத்தில், தாம் பிரதமர் பதவியை துறப்பதற்கு தயார் என பிரதமர் சபையில் அறிவித்தார்.

தான் மாத்திரமன்றி, அமைச்சர்களும் பதவி விலக தயார் என அவர் கூறியிருந்தார்.

இந்த நிலையில், பாராளுமன்றத்திற்கு சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவிற்கு எதிர்ப்பு தெரிவித்து, எதிர்கட்சி உறுப்பினர்கள் கோஷங்களை எழுப்பியிருந்தது. இங்கு குறிப்பிடத்தக்கது.


# மன்னாரில் இருந்து இந்தியா செல்ல முயன்ற வவுனியா மற்றும் பதுளையை சேர்ந்த 7 பேர் கைது



மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து படகு மூலம் இந்தியா செல்ல முயற்சித்த 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் உள்ளடங்களாக 9 பேர் கடற்படையினரால் செவ்வாய்க்கிழமை (5) இரவு 9.35 மணியளவில் தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா மற்றும் பதுளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிய வருகின்றது. கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பெண், சிறுவன், சிறுமி உள்ளடங்களாக 7 பேரும் மன்னாரைச் சேர்ந்த 2 படகோட்டிகளும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கடற்படையினரால் மன்னார் பொலிஸ ாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரனைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.



# மன்னாரில் எரிபொருளுக்கு தொடரும் போராட்டம் — கள்ள சந்தையில் எரிபொருள் விற்பவர்களால் தேவையுடைய மக்கள் வீதியில்

இலங்கை செய்திகள் Sri Lanka News



மன்னார் மாவட்டத்தில் எரிபொருள் பெற்றுக் கொள்வதிலும் வழங்குவதிலும் பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு தொடர்ச்சியாக முரண்பாடுகள் ஏற்பட்டு வருகிறது.

ஒரு சிலர் எரிபொருளை கள்ள சந்தையில் அதிக விலைக்கு விற்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாலும் எரிபொருள் வழங்கும் முறையில் தலையீடு செய்வதாலும் தேவையுடைய பல நூற்றுக்கணக்கான மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டோக்கனும் கிடைக்காமல் எரிபொருளும் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் காத்திருக்கின்றனர்.

குறிப்பாக மன்னார் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக எரிபொருள் இவ்வாரம் முழுவதும் கிடைக்காத பலர் இன்றைய தினம் வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இருப்பினும் அத்தியாவசிய சேவைகளுக்கு என மாத்திரமே எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக அரச தரப்பால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மக்களுக்கும் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

பெட்ரோல் வழங்கா விட்டாலும் பெட்ரோலுக்கான டோக்கன் வழங்குமாறு கோரிக்கை மக்களால் முன்வைக்கப்பட்ட போதிலும் வரும் செவ்வாய் முதல் எரிபொருள் வழங்களில் ஏற்படும் சிக்கலை தவிர்பதற்காக கிராம ரீதியாக எரிபொருளை பெற்று கொள்ளும் நடைமுறை மேற்கொள்ளப்பட இருப்பதால் டோக்கன் வழங்க முடியாத நிலை காணப்படுவதாக அப்பகுதி க்கு வருகை தந்த பிரதேச செயலாளர் தெரிவித்த நிலையில் முரண்பாடு அதிகரித்தது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கடற்படையினர் இருந்தும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலையில் பிரதேச செயலாளர் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களை வெளியில் செல்ல முடியாத வகையில் மக்கள் தடுத்துள்ளனர். இதன் காரணமாக மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாரம் மன்னார் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மூன்று தடவைகளில் 19,800 லீட்டர் எரிபொருள் கிடைக்கப்பெற்றுள்ளது. அதில் 2600 பொது மக்களின் மோட்டார் சைக்கிள்களுக்கும், 905 முச்சக்கர வண்டிகளுக்கும் 150 கார்களுக்கும் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

அதே நேரம் 700 அரச உத்தியோகத்தர்களுக்கு 1500 ரூபா வீதமும் 37 இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்கு 750 ரூபாய் வீதம் இவ் வாரம் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக நகரசபை ஊழியர்கள், பொலிஸாருக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை. எரிபொருள் இன்மையால் மன்னார் நகரசபை உத்தியோகத்தர்கள் தங்களுடைய சுத்திகரிப்பு பணியையும் நிறுத்தியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் தங்கள் தேவைகளுக்கு மீறி எரிபொருளை பெற்று அதை பதுக்கி கள்ள சந்தையில்ச அதிக விலைக்கு விற்கும் ஒரு சிலரால் தொடர்ச்சியாக தேவையுடைய மக்களுக்கு எரிபொருள் கிடைக்காமல் பாதிக்கப்படுவதுடன் மன்னார் மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் போராட்டங்களும் அமைதியின்மையும் இடம் பெற்று வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே எரிபொருள் நிலையங்களுக்கு வருகை தரும் மக்கள் வீதிகளை மறிப்பதனாலும் அரச உத்தியோகஸ்தர்களை திட்டுவதாலும் போராட்டங்களில் ஈடுபடுவதானலும் தீர்வு கிடைக்க போவதில்லை என்பதுடன் உங்களுடனேயே உங்களுக்குள் வரிசையில் இருந்து எரிபொருளை பெற்று பதுக்கும் நபர்களை அடையாளப்படுத்தி அவர்களை அப்புறப்படுத்தும் போதே இப் பிரச்சினை தீர்க்கப்படும்.

உங்கள் பகுதியில் எரிபொருள் பதுக்கல் மற்றும் எரிபொருளை அதிக விலைக்கு விற்பவர்களை அடையாளம் கண்டால் பொலிஸாருக்கு அல்லது நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினருக்கோ அறிவியுங்கள்.

**- மன்னார் நிருபர்**



# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மஹா கும்பாபிஷேகத் திருவிழாவை ஒட்டி எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு, ஆறுமுக நாவலர் மற்றும் சிவன் சிலையும் வைபவ ரீதியாக திறந்து வைப்பு



மன்னார் அருள்மிகு திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (3) காலை 7 மணியளவில் இடம் பெற்றது. திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு சிவ சிறி தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

அன்றைய தினம் (3) திருக்கேதீஸ்வர ஆலய பாலாவி தீர்த்தக்கரையில் ஆறுமுக நாவலருக்கான சிலையும், திருக்கேதீஸ்வர ஆலயத்தில் உள் நுழையும் வீதியில் சுமார் 28 அடி நீளமான சிவன் சிலையும் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பக்த அடியார்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். தொடர்ந்தும் நாளை திங்கள் 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு நிறைவடையும்.


பின்னர் கிரிகைகள் இடம் பெற்று 6 ஆம் திகதி புதன்கிழமை காலை சுப முர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேக பெருவிழா இடம்பெற உள்ளது.

**- மன்னார் நிருபர்**





# வடக்கு மாகாணத்தில் வருடாந்த ஆசிரியர் இடமாற்ற விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிக்க கோரிக்கை




நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்ற விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிக்குமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கமும் இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கமும் கோரிக்கை விடுத்துள்ளன.

தகவல்,
புயல்நேஷன்,
077-9681333

# இலங்கை அகதிகளை மீட்க தனுஷ்கோடியில் மெரைன் போலீஸ் ரோந்து படகு?



இலங்கையில் இருந்து வரும் அகதிகளை மீட்க தனுஷ்கோடியில் மெரைன் போலீஸாரின் ரோந்துப் படகுகளை நிறுத்த வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ராமநாதபுரம் மாவட் டத்தில் மெரைன் போலீஸாருக்கு மண்டபம், தேவிபட்டினம், தொண்டி ஆகிய இடங்களில் மூன்று காவல் நிலையங்களும், ராமேசுவரம், புதுமடம், பனைக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் துணைக் காவல் நிலையங்களும் உள்ளன. கடலில் ரோந்து மற்றும் மீட்புப் பணிக்காக கடலோரப் பாதுகாப்புக் குழுமத்துக்காக பிரேத்யேகமான அதிவேகப் படகுகள் உள்ளன.

மேலும் மீட்புப் பணிக்காக மெரைன் போலீஸாருக்கு 1098 என்ற பிரத்யேக இலவச எண்ணும் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கிருந்து அகதிகளாக வரும் பெரும்பாலானோர் தனுஷ்கோடி அருகே உள்ள மணல் தீடைகளில் வந்து இறங்குகின்றனர். அவர்களைப் பாதுகாப்பாக கரைக்குக் கொண்டு வர மெரைன் போலீஸார், கடலோரக் காவல்படையின் ஹோவர் கிராப்ட் படகு அல்லது மீனவர்களின் படகுகளையே உதவிக்கு நாட வேண்டி உள்ளது. மெரைன் போலீஸாருக்கு சொந்தமான படகுகள் தனுஷ்கோடி பகுதியில் ரோந்து செல்லவும், இலங்கையில் இருந்து வரும் அகதிகளைமீட்கவும் தனுஷ்கோடி படகுகள் இறங்குதளத்தில் நிறுத்தப்பட வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கோத்தாவும் போகவில்லை ஐ.எம்.எஃப் உம் இரங்கவில்லை?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



கடந்த மாதம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த கோட்டாகோகம கிராமத்தைச் சேர்ந்தவர்களோடு உரையாடிய பொழுது கோத்தாவை அகற்றினால் அடுத்த கட்டம் என்ன? என்று கேட்கப்பட்டது. அவர்களிடம் தெளிவான யதார்த்தமான பதில் எதுவும் இருக்கவில்லை.

இப்போது இருக்கும் எல்லா பிரச்சினைகளுக்கும் கோத்தாதான் காரணம் என்று கருதுவது அதாவது பிரச்சினைகளுக்கு ஒரு தனி மனிதனை அல்லது ஒரு குடும்பத்தை பொறுப்பாளியாக்குவது என்பது எங்கிருந்து தொடங்கியது? ஒரு குடும்பம் ராணுவ வெற்றி முழுவதற்கும் உரிமை கோரியபோதே அது தொடங்கியது. வெற்றியின் பங்காளியான சரத் பொன்சேகாவை வெளித்தள்ளிவிட்டு அந்த வெற்றிக்கு ராஜபக்ஷ குடும்பம் மட்டும் உரிமை கோரியபோது அது தொடங்கியது. ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை ஒரு குடும்பத்தின் சொத்தாக மாற்றினார்கள். அதை தமது தேர்தல் அரசியலுக்கான நிரந்தர முதலீடாகவும் மாற்றினர்கள்.

அது அதன் மெய்யான பொருளில் ஒரு வெற்றியே அல்ல. அது ஓர் இனப்படுகொலை. உலக சமூகமும் அதற்கு பொறுப்பு. ஒரு ஆயுதப் போராட்டத்தை நசுக்குவதற்கு இனப்படுகொலை செய்யலாம் என்ற லைசென்ஸை உலக சமூகம் ராஜபக்சங்களுக்கு வழங்கியது. அதன் விளைவாக கிடைத்ததே அந்த வெற்றி. எனவே அது ஒரு வெற்றியே அல்ல. அதை ஒரு வெற்றியாகக் கொண்டாடிய எல்லாருமே குற்றத்தின் பங்காளிகள்தான். அதை வெற்றியாகக் கருதி வாக்களித்தவர்கள் அனைவருமே குற்றத்தின் பங்காளிகள்தான். முழு உலகமும் தமிழ் மக்கள் சுத்திவளைக்கப்படுவதை ஏதோ ஒருவிதத்தில் ஆதரித்தது. ஐநா பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தது. இந்தியா தலையிடாமல் தவிர்த்தது. தமிழகத்தின் எதிர்ப்பை அப்போதிருந்த தமிழக அரசு மடை மாற்றியது. இவ்வாறாக கடைசிக்கட்டப் போரில் தமிழ் மக்கள் கைவிடப்பட்டதற்கு உலகின் பெரும்பாலான நாடுகள் பொறுப்பு.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான முதலாவது தீர்மானம் கொண்டுவரப்பட்ட பொழுது அதை எதிர்த்துப் பேசிய கியூபாவின் பிரதிநிதி ஒரு விடயத்தை சுட்டிக்காட்டினார். போரில் வெல்வதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு அறுபது விகிதத்துக்கும் மேலான ஆயுதங்களை வழங்கிய நாடுகள்தான் இப்பொழுது அதே அரசாங்கத்துக்கு எதிராக ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற முற்படுவதாக அவர் அங்கே கூறினார்.

இவ்வாறு இறுதிக்கட்டப்போரில் ராஜபக்சக்கள் பெற்ற வெற்றி என்பது அதன் அரசியல் பரிமாணத்தில் ஒரு வெற்றி அல்ல. வேண்டுமானால் ராணுவப் பரிமாணத்தில் அதை வெற்றியாகக் கூறலாம். அதுவும் அவர்களுடைய தனிப்பட்ட வெற்றி அல்ல. அது ஒரு கூட்டு வெற்றி. அதில் உள்நாட்டு வெளிநாட்டு தரப்புகள் எல்லாருடைய பங்களிப்பும் உண்டு.அப்படிப்பட்ட ஒரு கூட்டு வெற்றியை அவர்கள் தங்களுக்கு மட்டும் உரியதாக மாற்றினார்கள். அதன் மூலம் தங்களைச் சுற்றி ஒரு ஒளிவட்டத்தை சுடரச் செய்தார்கள். அதுதான் அவர்கள் பெற்ற தேர்தல் வெற்றிகள் அனைத்துக்கும் அடிப்படை.

ஈஸ்டர் குண்டு வெடிப்பின் விளைவாக அந்த வெற்றியை அவர்கள் 2019க்கும் அப்டேட் செய்து கொண்டார்கள். சிங்கள மக்கள் தங்களுக்கு ஒரு இரும்பு மனிதர் வேண்டும் என்று கேட்கும் ஒரு நிலைமையை ஈஸ்டர் குண்டு வெடிப்பு ஏற்படுத்தியது. ஒரு அனுநாயக்க தேரர் ஹிட்லரைப் போல ஒரு தலைவர் நாட்டுக்குத் தேவை என்று பகிரங்கமாகச் சொன்னார்.

இவ்வாறு யுத்தத்தை வென்ற ஒரே காரணத்துக்காக ஒரு குடும்பத்தின் கையில் சிங்கள மக்கள் மூண்டில் இரண்டு பெரும்பான்மையை அள்ளிக் கொடுத்தார்கள். யுத்தத்தை வென்ற ஒரே தகைமை காரணமாக அவர்கள் வைரஸையும் வெல்வார்கள் என்று நம்பினார்கள், பொருளாதார நெருக்கடியையும் வெல்வார்கள் என்று நம்பினார்கள். ஆனால் யுத்தமும் வைரஸும் ஒன்று அல்ல, யுத்த வெற்றியைச் சாப்பிடமுடியாது என்பதனை சிங்கள மக்கள் கண்டுபிடித்தபோது தோல்விக்கான முழுப்பழியையும் ஒரு குடும்பத்தின் மீது சுமத்தினார்கள். எந்த குடும்பத்தை தலையில் தூக்கி வைத்து கொண்டாடினார்களோ, அதே குடும்பத்தை நிலத்தில் கழிப்பறையில் போட்டு மிதிக்கும் ஒரு நிலைமை வந்தது. இதில் உள்ள வரலாற்று முரண்நகை என்னவென்றால் ஒரு கூட்டு வெற்றியை குடும்ப வெற்றியாக சுவீகரித்துக் கொண்ட ராஜபக்ச குடும்பம் ஒரு கூட்டுத் தோல்விக்கும் பொறுப்பேற்க வேண்டி வந்தமை என்பதுதான்.

தற்பொழுது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு ராஜபக்சக்கள் மட்டும் காரணம் அல்ல. போரை நடத்திய எல்லா சிங்கள தலைவர்களும் அதற்கு பொறுப்பு. இலங்கைத்தீவை பல்லினத்தன்மை மிக்க ஒரு நாடாகக் கட்டியெழுப்பத் தவறிய எல்லாத் தலைவர்களுமே அதற்கு பொறுப்பு.

சிங்கள மக்கள் ராஜபக்சக்களை வெளியே தேடுகிறார்கள். இல்லை யுத்த வெற்றியை கொண்டாடிய எல்லா சிங்களவர்களுடைய இதயத்துக்குள்ளும் ஒரு ராஜபக்ஷ உண்டு. எனவே இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தோல்விகள் யாவும் ஒரு குடும்பத்தின் தோல்விகள் அல்ல. சிங்கள பௌத்த பண்பாட்டின் தோல்விகள் அவை. வியத்மக என்று பெருமையோடு அழைக்கப்பட்ட சிந்தனைக் குளாத்தின் அதாவது துறைசார் நிபுணத்துவத்தின் தோல்வி அது. எல்லாவற்றையும் விட ஆழமான பொருளில் இலங்கைத்தீவின் அரசமதமாகிய தேரவாத பௌத்தத்தின் பயில்நிலைத் தோல்வி அது. எனவே அக்கூட்டுத் தோல்வியை, பண்பாட்டுத் தோல்வியை, சிங்கள மக்கள் இப்பொழுதாவது ஏற்றுக் கொள்ள வேண்டும். அது ஒரு கூட்டுத் தோல்வி. அக்கூட்டுத் தோல்விக்கு ஒரு குடும்பத்தை மட்டும் குறை கூற முடியாது. யுத்த வெற்றியை ஒரு குடும்பத்தின் வெற்றியாக பார்த்ததைப் போலத்தான் இதுவும் ஒரு தவறான பார்வை.

கோத்தபாயவை அதிகாரத்திலிருந்து அகற்றினால் எல்லாம் சரியாகிவிடும் பொருளாதாரம் நிமிர்ந்துவிடும் என்று நம்புவது ஒரு குருட்டு நம்பிக்கைதான். தன் குடும்பத்தை பாதுகாப்பதற்கும், தனது ஆதரவாளர்களை பாதுகாப்பதற்கும் தனது கையில் நிறைவேற்று அதிகாரம் இருக்க வேண்டும் என்று கோத்தாபய நம்புகிறார். ஆனால் அவரை அகற்றினால்தான் நாடு உருப்படும் என்று போராடும் மக்கள் நம்புகிறார்கள். யுத்த வெற்றிவாதிகளை அகற்ற இதைவிடச் சிறந்த தருணம் இல்லை என்று அமெரிக்க நம்புகிறது. ஐநா நம்புகிறது. ஏனைய மேற்கு நாடுகளும் நம்புகின்றன. கோத்தா பதவியில் இருக்கும்வரை பன்னாட்டு நாணயநிதியம் நாட்டுக்கு உதவப் போவதில்லை என்ற ஒரு கருத்து தென்னிலங்கையில் பலமடைந்து வருகிறது.

அது சரி. ஆனால் அதன் பொருள் யுத்த வெற்றிவாதிகளை அகற்றினால்மட்டும் நாடு தேறிவிடும் என்பதல்ல. நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு பொருத்தமான தலைமைகள் யாரும் ஆளுங்கட்சிக்குள்ளும் இல்லை, எதிர்க்கட்சிக்குள்ளும் இல்லை. தம்மிக்க பெரேரா போன்ற கோடீஸ்வரர்கள் அல்லது அவரைப் போல அரசியலில் குதிக்க ஆசைப்படும் அரிசிஆலை முதலாளியும் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரும் ஆகிய டட்லி சிறிசேன போன்றவர்கள்தான் நாடாளுமன்றத்துக்குள் வரலாம் என்றால் பொருளாதாரத்தை எப்படி நிமிர்த்துவது? இந்த முதலாளிகளைத் தவிர யாரும் நல்லவர்கள் பெரியவர்கள் அறிஞர்கள் நாட்டில் கிடையாதா? இந்த தலைமைத்துவ வெற்றிடம் உள்ளவரை பொருளாதாரத்தை நிமித்துவது சவால்கள் மிகுந்ததாகவே இருக்கும். கோத்தா பதவியில் இருந்து விலகினாலும்கூட இந்த நிலைமைதான் தொடரும்.

எனினும் கோத்தாவை அகற்றுவதற்கு இதுதான் பொருத்தமான சந்தர்ப்பம் என்று மேற்கு நாடுகளும் பன்னாட்டு நாணய நிதியமும் கருதுகின்றன. நிலைமையை மேலும் சீரழிய விட்டால் கோட்டா கதிரையை விட்டு இறங்குவார் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதனால்தான் பெரிய அளவிலான உதவிகளை வழங்காமல் சிறுசிறு உதவிகளை வழங்கி இலங்கைத்தீவை தொடர்ந்தும் தமது கருணையில் தங்கியிருக்க வைக்கிறார்கள். இந்தியாவும் அதைத்தான் செய்கிறது. இந்த உதவிகள் யாவும் இலங்கைக்கு "சேலைன்" ஏற்றுவதைப் போன்றவை. துளித்துளியாக வரும் உதவிகள்.

அதாவது இலங்கைத்தீவின் பொருளாதாரத்தை நிமிர்த்தத் தேவையான உதவிகளை மேற்படி நாடுகள் செய்யவில்லை. பன்னாட்டு நாணய நிதியமும் உதவிபுரிவதை இழுத்தடிக்கின்றது. இதன்பொருள் என்னவென்றால் ராஜபக்சக்களை முற்றாக அதிகாரத்திலிருந்து அகற்றும்வரை பன்னாட்டு நாணய நிதியத்திடம் இருந்தோ மேற்கு நாடுகளிடமிருந்தோ பெரிய அளவிலான உதவிகள் கிடைக்காது என்பதுதான். அவர்கள் ஒரு ஆட்சி மாற்றத்தை எப்படி செய்யலாம் என்று சிந்திக்கிறார்கள்.

எந்த ஒரு வெளித்தரப்பும் தன்னுடைய பிராந்திய மற்றும் பூகோள நலன் சார் நோக்கு நிலையில் இருந்துதான் மற்றொரு நாட்டுக்கு உதவும். இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடியானது நாட்டு மக்களுக்கு உணர்த்தும் பேருண்மை அதுதான். கடந்த நான்கு தசாப்தகால அரசியலில் தமிழ் மக்களுக்கு அது தொடர்பாக கொழுத்த அனுபவம் உண்டு. இப்பொழுது சிங்கள மக்கள் அந்தப் பாடத்தை படித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் பதுங்கு குழிக்குள் இருந்து கொண்டு படித்த பாடத்தை சிங்கள மக்கள் எரிபொருள் வரிசையில் நின்று படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன் நண்பர் ஒருவர் ஒரு படத்தை எனக்குப் பகிர்ந்திருந்தார் அதில் ஒரு சிங்கம் சைக்கிள் ஓடுகிறது அதற்கு கீழே "சைக்கி ளே" என்று சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளது. வழமையாக "சிங்களே" என்று சொன்னால் அது சிங்கள ரத்தம் சிங்களவர்களின் பெருமை. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தபின் தென்னிலங்கையிலும் புலம்பெயர்ந்த சிங்கள மக்கள் மத்தியிலும் அவர்களுடைய வாகனங்களின் பின்புறக் கண்ணாடியில் அந்த வாசகம் எழுதப்பட்ட ஸ்டிக்கரை காணலாம். அது ஒரு பெருமைக்குரிய வார்த்தையாகவும் பரிகசிக்கப்பட முடியாத ஒரு சொற்றொடராகவும் ஒரு காலம் கருதப்பட்டது. ஆனால் இன்றைக்கு சிங்களவர்களே அதை பரிகசிக்கும் ஒரு நிலைமை வந்திருக்கிறது. தேசியக் கொடியில் வாளுடன் நிற்கும் சிங்கம் வாளைத் தூக்கி எறிந்து விட்டு பிச்சை எடுக்கின்றது, சைக்கிள் ஓடுகிறது. ஆனால், இச்சிறிய தீவை ஒரு சிங்கம் மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதனை சிங்கள மக்கள் எப்பொழுது கண்டுபிடிப்பார்கள்?



# "தற்போதைய ஆட்சியாளர்களால் இலங்கை பிச்சைக்கார நாடாக மாறிவிட்டது"

**- யாழ் ஆயர்**



இலங்கையில் நிலவும் மிகவும் மோசமான சமூகப் பொருளாதார நெருக்கடி குறித்து யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் பேர்னார்ட் ஞானப்பிரகாசம் கடுமையாகச் சாடியுள்ளார். வடக்கு கிழக்குப் பகுதியிலிருந்து சிறுபான்மை மக்களின் மதத் தலைவர்கள் யாரும் நாட்டில் தற்போது நிலவும் நிலைமை குறித்து இதுவரை கருத்து வெளியிடாத நிலையில் யாழ் ஆயரின் கருத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரியளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

"நமது நாட்டை பிச்சைக்கார நாடாக மாற்றிய பெருமை தற்போதைய ஆட்சியாளர்களையே சேரும்" என்று கனடா உதயனிடம் ஆயர் ஞானப்பிரகாசம் தெரிவித்தவுடன் அந்த கருத்து சமூக ஊடகங்களில் தீயாகப் பரவியது. ஆஸ்திரேலியா தொடக்கம் கனடா வரை பல நாடுகளில் உள்ளவர்கள் அது தொடர்பிலான டிவீட்களை பகிர்ந்தனர். புலம்பெயர் தமிழர்களுக்கு அப்பாற்பட்டு இலங்கை வாழ் சிங்கள மக்களும் கூட இதை மறுட்வீட் செய்துள்ளனர்.

போர்க்காலத்தில் கூட இல்லாத வகையில், இலங்கையில் வாகனங்களுக்கான எரிபொருள், வீட்டில் சமையல் பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டர் ஆகியமைக்காக மக்கள் கடந்த பல மாதங்களாக அல்லும் பகலும் தெருவில் அல்லாடும் காட்சிகள் சர்வதேச அளவில் பரவியுள்ளன. அந்த காணொளிகளை பன்னாட்டு ஊடகங்கள் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன.

போர்க்காலத்திற்குப் பிறகு யாழ் ஆயரிடமிருந்து வந்துள்ள மிகவும் கடுமையான விமர்சனமாக இது பார்க்கப்படுகிறது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

நாட்டில் பணவீக்கம் பல மடங்கு அதிகரித்துள்ளது மேலும் பன்னாட்டளவில் மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் முதல் பத்து நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளது என்று சர்வதேச நிதிநிலை நிர்வாகம் தரவுகள் காட்டுகின்றன.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும், ஐ எம் ஃப் போன்ற பன்னாட்டு நிறுவனங்களும் கடன் மற்றும் நிதியுதவிகளை நிறுத்தி வைத்துள்ளன அல்லது மட்டுப்படுத்தியுள்ளன. அதன் காரணமாக மக்களின் அன்றாட வாழ்வு பெரும் இன்னலுக்கு உள்ளாகியிருக்கிறது. உலக உணவு திட்டம் மற்றும் ஐ நாவும் இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை மிகப்பெரியளவில் அதிகரித்துள்ளது, இந்த நிலை தொடர்ந்தால் பட்டினிச் சாவுகள் தவிர்க்க இயலாது என்று எச்சரிக்கை விடுத்துள்ளன.

இதன் பின்புலத்தில் "நாட்டை ஆட்சியாளர்கள் பிச்சைக்கார நாடாக மாற்றியுள்ளனர்" என்று தெரிவித்துள்ள கருத்து மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். கடந்த ஆறு மாத காலத்தில் நாட்டில் உணவுப் பொருட்களுக்குத் தொடர்ந்து கடும் தட்டுப்படு நிலவி வரும் சூழலில், விலைகள் பன்மடங்கு உயர்ந்துள்ளன.

மக்கள் படும் துன்பங்கள் குறித்து இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஏற்கனவே கடுமையான விமர்சனங்களை வைத்துள்ளார். இப்போது யாழ் ஆயரும் மக்களின் நிலை குறித்து தனது விசனத்தை தெரிவித்துள்ளார்.

ஆட்சியாளர்கள் மக்களை வாக்கு வங்கி அரசியலிற்காகவும் தமது சுயநலத்திற்காகவும் பயன்படுத்தினார்கள் என்றும் யாழ் மறைமாவட்ட ஆயர் கவலை வெளியிட்டார்.

"கடந்த 74 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்டவர்கள் மக்களை தம்முடைய வாக்குகளுக்காகப் பாவித்தார்கள். ஆனால் இந்த நாட்டிலிருந்த வளத்தை எல்லாம் சுரண்டி விட்டார்கள். ஒருவிதமாக கடைசியில் மிகப் பாரதூரமான சுரண்டல்களுடன் இன்று நாடு பிச்சை எடுக்கின்ற நாடாக வந்துவிட்டது".

ஆட்சியாளர் நாட்டின் சிறப்புகள் மற்றும் பெருமைகளை மழுங்கடித்துவிட்டனர் என்று அவர் மனம் வருந்தினார். "இந்து சமுத்திரத்தின் முத்து என்று சொல்லப்பட்ட இந்த இலங்கை நாடு இன்று பிச்சை எடுக்கின்ற இலங்கை நாடாக மாறி உள்ளது. இதற்குக் காரணமான அனைவருமே மறுமொழி சொல்ல வேண்டியவர்களாகவே இருக்கின்றார்கள். ஏனென்றால் மக்களை இந்த நாட்டின் குடிமக்களாக ஆட்சியாளர்கள் பார்க்கவில்லை. மாறாக தமது வாக்கு வங்கியாக பாவித்துள்ளார்கள்".

அதிகாரத்தில் இருப்பவர்கள் தம்மை இந்த நாட்டின் உண்மையான பிரதிநிதிகள் என்று கூறினால் தங்களுடைய பிரச்சனை எல்லாம் தீர்ப்பதற்கு வழிமுறையை கண்டிருப்பார்கள், அவற்றைச் செய்யாமல் மக்களை வாக்குகளுக்காக ஆட்சியாளர்கள் பாவித்து இருக்கின்றார்கள் என்றும் அவர் மேலும் கூறினார்.

"மக்களை ஏமாற்றி வாக்கினைப் பெற்றிருக்கின்றார்கள். அவ்வாறு நாட்டு மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று நாடு சுரண்டப் பட்டதனால் இன்று நாடு படுகுழியில் விழுந்துள்ளது".

அண்மையில் IMF நிறுவனம் இலங்கையிடம் பல கேள்விகளைக் கேட்க இருந்தது. அதேபோன்று முன்னாள் பிரதம மந்திரியிடம் 37 கேள்விகள் ஐ.எம்.எவ்வால் கேட்கப்பட இருந்தது. அதாவது ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பிலேயே அவர்கள் கேள்வி கேட்க இருந்தார்கள்.



ஆனால், அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று செய்திகள் கூறுகின்றன. அதனால் ஐ.எம்.எவ் கேட்க வேண்டிய கேள்வியினை கேட்காது திரும்பிச் சென்று விட்டார்கள் எனவும் அவர் கூறினார்.

"எந்த நாடும் எமக்கு உதவி செய்யத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால் மோசடி, ஊழல் நிறைந்த இந்த நாட்டு அரசாங்கத்தை நம்பி எந்த நாடும் நமக்கு உதவுவதற்குத் தயாராக இல்லை. இதனை முதலில் நிவர்த்தி செய்தால் மாத்திரமே எமக்கு ஏனைய நாடுகளின் உதவி கிடைக்கும். அதற்குப் பொறுப்பானவர்கள் ஓடி ஒளிந்து விட்டார்கள். இந்த நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளால் இந்த நாடு ஒரு பிச்சைக்கார நாடாக மாறிவிட்டது" என யாழ் மறைமாவட்ட ஆயர் ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.







இந்தியா செய்திகள்
India News

# தண்ணீரின் மேல் பரப்பில் நடிகர் கமல்ஹாசனின் உருவப்படம் வரைந்து கேரள வாலிபர் சாதனை



கேரளாவை சேர்ந்த வாலிபர் ஒருவர் தண்ணீரின் மேல் பரப்பில் நடிகர் கமல்ஹாசனின் உருவபடத்தை 50 அடி உயரத்திலும் 30 அடி நீளத்திலும் வரைந்து சாதனை படைத்துள்ளார்.

திருச்சூர் மாவட்டம் கொடுங்கலூர் பகுதியை சேர்ந்தவர் டவன்ஸி சுரேஷ். இவர் பல பிரபலமான நபர்களின் படங்களை அடிக்கடி வரைந்து சாதனை செய்வது வழக்கம். இதை ஒட்டி நடிகர் கமல்ஹாசனின் உருவப்படத்தை தண்ணீரின் மேல் வரைய வேண்டும் என ஆசைப்பட்டார்.

இதையொட்டி மூணாறில் உள்ள ஒரு ஹோட்டலில் மூன்றாவது மாடியில் உள்ள நீச்சல் குளத்தை தேர்வு செய்தார். தொடர்ந்து 2500 ஏ போர் பேப்பர் சீட் மற்றும் பள்ளிக்கூட சிறுவர்கள் படங்கள் வரைவதற்காக பயன்படுத்தும் படும் வர்ணங்களை பயன்படுத்தி அந்த நீச்சல் குளத்தில் மேற்பரப்பில் கமலஹாசன் படத்தை உருவாக்கியுள்ளார். இந்தப் படம் 50 அடி உயரமும் 30 அடி நீளமும் கொன்றதாகும். இந்த படத்தை உருவாக்குவதற்கு மூன்று நாட்கள் எடுத்துக் கொண்டதாக சுரேஷ் தெரிவித்தார்.

# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகமானது கனேடியத் தமிழ்ச் சங்கத்துடன் தமிழ்மொழி கற்பிப்பதன்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளது

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கமானது கனேடியத் தமிழ்ச் சங்கத்துடன் தமிழ்மொழி கற்றல் கற்பிப்பதன்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளனர். ஒப்பந்ததில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ந. பஞ்சநதம் அவர்களும் கனேடியத் தமிழ்ச்சங்க நிறுவுனர். சு. இராசரத்தினம் அவர்களும் கையொப்பம் இட்டனர்.

இங்கே காணப்படும் படங்கள் தமிழ்நாட்டில் எடுக்கப்பெற்றவையாகும். தற்போது தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்துள்ள சு. இராஜரத்தினம் அவர்கள் அங்கு தமிழ் மொழி தொடர்பான பல கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Rajaratnam Subramaniam - (416) 573-7332



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார பணியாளர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கிவைப்பு!



யாழ் போதனா வைத்தியசாலை சுகாதார பணியாளர்களின் போக்குவரத்தை இலகுப்படுத்தும் வகையில் 10 துவிச்சக்கர வண்டிகள் கையளிக்கப்பட்டது.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு சுகாதார பணியாளர்களின் போக்குவரத்தையும் பாதித்துள்ள நிலையில் துவிச்சக்கர வண்டிகளின் விலைகளும் அதிகரித்து உள்ளது.

இந்த நெருக்கடியை தீர்க்கும் முகமாக பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கத்தினர் ஏற்பாட்டில் புதன்கிழமை பத்து துவிச்சகர வண்டிகள் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக கையளிப்பு செய்யப்பட்டது.

காரை நலன்புரி சங்கத்தின் சார்பாக உபதலைவர் விநாசித்தம்பி நாகேந்திரம், செயலாளர் பரமநாதர் தவராஜா மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் கந்தசாமி பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பத்து துவிச்சக்கர வண்டிகளையும் பிரதிப் பணிப்பாளர்கள் பவானந்தராஜா, யமுனானந்தா மற்றும் வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினரும் பெற்றுக்கொண்டனர்.



# கரடி கடிக்கு இலக்காகி பலர் காயம் ஒருவர் வைத்தியசாலையில்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



மன்னார் மாவட்டத்தில் உள்ள வட்டுப்பித்தான் மடு, நானாட்டான், வங்காலை போன்ற பகுதிகளில் அண்மைய நாட்களாக கரடி ஒன்றின் அட்டகாசம் அதிகரித்துள்ள நிலையில் பலர் கரடி கடிக்கு இலக்காகியுள்ளனர். அதில் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சியாக குறித்த கரடியின் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று வருகின்ற நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் எரிபொருள் பிரச்சனை காரணமாக கரடியை பிடிக்க முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து இரவு நேரங்களில் கரடி மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் நுழைவதாகவும் அதிகாலை நேரங்களில் நடமாடும் மக்களை தாக்குவதாகும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பொது வைத்தியசாலையில் மிருக கடிக்குரிய மருந்து தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில் தொடர்ச்சியாக இக் கரடி மக்கள் வசிக்கும் பகுதிக்கு சென்று மக்களை தாக்குவது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு மன்னார் பிரதான காலப்பகுதியில் மீன் பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவர் மீதும் கரடி தாக்கிய நிலையில், குறித்த நபர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனவே வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கான எரிபொருளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு கரடியை பிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் குறித்த கரடி நானாட்டான் பிரதேச செயலக பிரதான வீதியில் நடமாடுவதையும், குறித்த கரடியை கண்ட நாய்கள் ஓடுவதையும் காணக்கூடியதாக உள்ளது. குறித்த பகுதியில் கரடியின் நடமாட்டம் அப்பகுதியில் உள்ள ஊஊவுஏ கேமராவில் பதிவாகி உள்ளது.

- மன்னார் நிருபர்

# இலங்கை நாடாளுமன்றத்தில் "கோ ஹோம் கோத்த" கோஷத்தால் சபையிலிருந்து வெளியேறிய ஜனாதிபதி கோத்தாபய




இலங்கை எம்பிக்கள் நாடாளுமன்றத்தில் "கோ ஹோம் கோத்த" என்று கோஷம் எழுப்பியதால் அவைக்கு வந்த அதிபர் கோத்தபய ராஜபக்சே, திடீரென அவையை விட்டு வெளியேறினார்.

இலங்கையின் நாடாளுமன்ற கூட்டத்தின் இரண்டாவது நாள் கூட்டம் இன்று நடந்தது. அதிபர் கோத்தபய ராஜபக்சே நாடாளுமன்றத்திற்கு வருகை தந்தார். அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதிபருக்கு எதிராக கோஷங்களையும், பதாகைகளை ஏந்தியும் போராட்டம் நடத்தினர். அப்போது "கோ ஹோம் கோத்தபய" என்ற கோ'த்துடன் உறுப்பினர்கள் கூச்சலிட்டனர். அதனால் அவை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார். அதன்பின் அதிபர் கோத்தபய ராஜபக்சே நாடாளுமன்ற அவையை விட்டு வெளியேறிச் சென்றார். இதனால் சிறிது நேரம் நாடாளுமன்றத்தில் பரபரப்பு ஏற்பட்டது. சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே பேசிய போது, மீண்டும் உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கேவுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.



அப்போது அவர் கூறுகையில், "கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், சர்வதேச நாடுகளின் ஆதரவைப் பெறுவதில் பிரதமரும் அவரது அரசாங்கமும் சரியாக செயல்படவில்லை" என்று குற்றம்சாட்டினார். இதேபோல் மற்ற எதிர்கட்சிகளின் உறுப்பினர்களும் கூச்சல் குழப்பங்களை ஏற்படுத்தியதால் இன்று அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

# யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையை சேர்ந்த 8 பேர் அகதிகளாக தனுஷ்கோடியை சென்றடைந்தனர்

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அங்கு வசிக்கும் மக்கள் உணவு, அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்திற்கு ஆளாகி வரும் நிலையில் பள்ளிக்கு செல்லும் சிறுமிகள் சமீப காலமாக கடத்தப்பட்டு வருவதால் இலங்கை யாழ்ப்பாணம் மாவட்டத்தை சேர்ந்த மேலும் 8 பேர் அகதிகளாக தனு'கோடியை வந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் கடும் விலை ஏற்றம் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடி கடல் வழியாக தமிழகத்திற்குள் அகதிகளாக வந்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை (3) இரவு யாழ்ப்பாணம் மாவட்டம் வல்வெட்டித்துறையை சேர்ந்த சேர்ந்த சசிகலா, கதிர், கமலா ராணி உள்ளிட்ட 8 பேர் ஒரு படகில் புறப்பட்டு திங்கட்கிழமை (4) காலை 5 மணி அளவில் தனுஷ்கோடி அடுத்த அரிச்சல்முனை கடற்கரையில் வந்திறங்கினர்.

தகவலறிந்த ராமேஸ்வரம் மரைன் போலீசார் இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை விலை அதிகரித்துள்ளது. அதே போல் டீசல் மற்றும் பெட்ரோல் விலையும் வெகுவாக உயர்ந்துள்ளது.



விலைவாசி ஒரு பக்கம் உயர்வு, மறுபக்கம் அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது, 2 லிட்டர் மண்ணெய் வாங்க 4 நாட்கள் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது.

தொடர் மின்வெட்டு அரசு மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு உள்ளது. மேலும் சமீப காலமாக வடக்கு மாகாண பகுதியில் பள்ளிக்கு செல்லும் சிறுமிகள் கடத்தி கொலை செய்யப்படுகிறார்கள். சிறுமிகளை கடத்தும் கும்பல் ஒன்று யாழ்ப்பாணத்தில் உள்ளதாக தகவல் வெளியானதையடுத்து பாதுகாப்பு தேடி இலங்கை பணம் தலா ஒருவருக்கு 1 லட்சம் ரூபாய் கொடுத்து படகில் தமிழகத்திற்கு அகதிகளாக வந்த தாக இலங்கை தமிழ் பெண் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பின் எட்டு பேரையும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளதாக மரைன் போலீசார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22ந்தேதி முதல் இன்று வரை இலங்கையில் இருந்து 103 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# யா/யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை திறன் வகுப்பறை திறப்பு விழா 2022.07.04 திங்கட்கிழமை

அதிபர் செல்வி. சாந்தினி மாணிக்கம் தலைமை உரையிலே இவ்விரண்டு Smart board உம் எமது மாணவர்களின் கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறக்க உதவும் என்பதில் ஐயமில்லை. இத்திறன் வகுப்பறைகள் மாணவரின் சுய கற்றலையும் தேடி அறியும் ஆற்றலையும் மேம்படுத்தும் என்பதோடு இதனை தந்து உதவிய Dr. ச. ஜோதிலிங்கம், திருமதி. இ. ஜோதிலிங்கம, Dr. இ. நித்தியானந்தன் ரத்னம் அறக்கட்டளை நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளை பாடசாலை சமூகம் சார்பில் தெரிவித்துக்கொண்டார்.

சிறப்பு விருந்தினர் திரு. நாகலிங்கம் சிவநேசன் உரையில் இப் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட திறன் வகுப்பறை மாணவரை நவீன முறையில் வளர்த்தெடுக்க உதவும் எனவும், சிறந்த செயற்பாட்டுக்கு காரணமாக அமைந்த பெருமக்களான அன்பு உள்ளங்களை மனமார பாராட்டுவதாக தெரிவித்தார் அத்துடன் 2016இல் அதிபர் பதவியேற்றதன் பின் ஆசிரியர்களின் அயராத முயற்சியினால் தமிழ் ஆங்கில போட்டிகளில் பல தேசிய மட்டங்களை பெற்றதுடன் குறிப்பாக தரம் 5 பரீட்சையிலும் 2021 இல் திறன் வகுப்பறை மூலம் எதிர்பாராத பெரும் வளர்ச்சியை கண்டுள்ளது எனவும் குறிப்பிட்டுட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஈ. சரவணபவன் அவரின் உரையின்போது இப்பாடசாலைக்கு திறன் வகுப்பறையை ஒழுங்கமைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதாக கூறினார்.

தொடர்ந்து Dr. ச. ஜோதிலிங்கம் அவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் தானும் தனது மனைவியும் உதவுவதையிட்டு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். அத்துடன் மாணவரின் செயற்பாடுகள் குறித்தும் தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.



மாணவரின் தமிழ், ஆங்கில பேச்சுக்களும் Smart board கற்பித்தல் விளக்கம் (Presentation) நிகழ்த்தப்பட்டமைக்கு வாழ்த்துக் கூறி இப்பிள்ளைகள் சமூகத்தில் பெரும் சிறப்பு மிக்கவர்களாக திகழ்வார்கள் என வாழ்த்தினார்.

இவ் விழாவிற்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் கலந்து சிறப்பித்தனர்.

# Sinha Lager also known as Lion Lager in Sri Lanka is finally available at the Beer Store







Sinha Stout, the indisputable king of dark beers, presents its big brother – Sinha Lager – to Canadian beer connoisseurs. With a rich heritage of close to 150 years, the Sinha range prides itself amongst Asia's greatest beers, winning global acclaim across every continent.
Sinha Lager is renowned to be a great thirst quencher with an alcohol strength of 4.8%. It stems from an age-old recipe using the finest ingredients promising great flavour and refreshment. Six-packs will be available at 89 stores across Brampton, Bolton, Georgetown, Mississauga, Oshawa, Ajax, Whitby, Toronto, Etobicoke, and North York, retailing at just $17.45 for a six pack of 330ml bottles.
The award-winning Sinha Lager hails from sunny Sri Lanka and boasts a history stretching back to 1881 when British Explorer, Sir Samuel Baker, set up Ceylon Brewery to cater to European tea farmers living in the mountains of Sri Lanka 6000 feet above sea level.

The brews produced at the Lion Brewery in Sri Lanka are some of the best kept secrets from the rest of the world, until their discovery in the 90s when the brewery started exporting beyond its shores and have since won global acclaim including several gold medals at the prestigious Monde Selection beer awards.
During the promotional period to mark its foray into Canada, Sinha Lager, will participate at the Toronto Festival of Beer, and this will be the first time a Sri Lankan beer will be showcased at the annual Beer Fest. The event will take place from 22nd to 24th of July and offers a great opportunity for Canada's beer aficionados to flavour this acclaimed beer all the way from salubrious Sri Lanka.
Upon its discovery by global beer connoisseurs, Sinha Lager, is tantalizing drinkers around the world, and is now available at the Beer Store in Canada. True to Sri Lanka's historic penchant for quality and flavour, the Lion Brewery is reputed as one of the most advanced breweries in South Asia, adorned by global stamps for quality and process excellence.

"For many years, our discerning customers in Canada have flavoured the jewel in our crown, Sinha Stout – the 'best Stout in the world', as endorsed by the legendary late beer hunter, Michael Jackson. Now we offer our other hidden gem, Sinha Lager, and we have no doubt consumers will fall in love with this legendary beer . This golden lager with a crisp refreshing finish, was born in the mountains of Sri Lanka 6000 feet above sea level. This award-winning exotic 4.8% lager offer hints of fruit, caramel, and subtle hop notes. Brewed since 1881, with water, malted barley, rice, hops and caramel, Sinha Lager also known as Lion Lager in Sri Lanka is a perfect thirst quencher on a hot sunny day. Sinha Lager pairs well with Asian, African, Middle Eastern, and Western cuisine said Stefan Atton, Vice President of the international business for Lion Brewery Ceylon PLC.

# பார்கின்சன்ஸ் நோயினால் ஏற்படும் நடுக்கவாதம்

*(6ம் பக்கத் தொடர்ச்சி)*

**JOGO** சிகிச்சையானது **EMG Biofeedback** இன் மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்ட அறிவியலைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இது அமெரிக்காவின் **FDA** அங்கீகாரம் பெற்ற சிகிச்சை முறையாகும். பார்கின்சன்ஸ் நோயின் நடுக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மாத்திரை அல்லது சத்திர சிகிச்சைக்கு செல்லும் முன்னர் பெற்றுக் கொள்ளும் முதல் சிகிச்சை முறையாக **JOGO Biofeedback assisted Pelvic Floor Muscle Training (PFMT)** சிகிச்சையைப் பெற பரிந்துரைக்கப்படுகின்றனர்.

பார்கின்சன்ஸ் நடுக்கவாதத்திற்கு **JOGO** சிகிச்சை எவ்வாறு தீர்வாகும்?
பார்கின்சன்ஸ் நடுக்கவாதத்தினால் பாதிப்புற்றவர்களை வைத்து நடாத்தப்பட்டு ஆரம்பகட்ட பரிசோதனையில், வாரத்தில் 2 நாட்கள் **JOGO** சாதனத்தை **(JOGO Device)** பயன்படுத்தியதன் மூலம் நடுக்கம் 70மூ குறைந்துள்ளதை **JOGO-Gx** ஏற்கனவே காட்டியுள்ளது.

இது எவ்வாறெனில் **"JOGO-Gx** ஆனது, **Electromyographic (EMG)** பயோ∴பீட்பேக்கைப் **(biofeedback)** பயன்படுத்தி, மத்திய நரம்பு மண்டலத்தின் **(Central Nervous System -CNS)** இயற்கையான நியூரோபிளாஸ்டிசிட்டியை **(Natural Neuroplasticity)** தொழிற்படச் செய்கிறது. உதாரணமாக, நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக நியூரோபிளாஸ்டிசிட்டியை **(Neuroplasticity) GPS** என வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் செல்லும் போக்குவரத்து பாதையில் நெரிசல் ஏற்படும்போது, உங்கள் பயண இலக்கினை அடைய அண்மையில் உள்ள குறுகிய மற்றொரு பாதையினால் உங்கள் **GPS** உங்களை வழிநடத்தும் அதாவது நீங்கள் சநனசைநஉடவ செய்யப்படுவீர்கள். இது தான் மூளையிலும் நடக்கிறது. பாதிக்கப்பட்ட தசைகள் மீது கட்டுப்பாட்டினைப் பெறுவதற்கு மாற்று நரம்பியல் பாதைகள் உருவாக்கப்படுகின்றன. பயோ∴பீட்பேக் (**biofeedback**) மூலம் மூளையை ஓய்வெடுக்க பயிற்சியளித்து நோயாளிகளுக்கு இயற்கையாகவே அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பார்க்கின்சன்ஸ் நோயின் நடுக்கத்தை கட்டுப்படுத்த உதவமுடியும். அத்துடன் துழுபுழு-புஒ ஆக்கிரமிப்பு தன்மையற்றது மற்றும் மின்சமிக்ஞைகளை வெளியிடாது" என்கிறார் அமெரிக்காவின் பிரபல **JOGO Health** தலைமை அறிவியல் அதிகாரி **Gary Krasilovsky (Ph.D).** இவர் 40 ஆண்டுகளுக்கும் மேலாக உயிரியல் பின்னூட்டத்தால் இயக்கப்படும் நியூரோபிளாஸ்டிசிட்டியை **(Neuroplasticity)** ஆய்வுசெய்த அனுபவமிக்க ஆராய்ச்சியாளர்.

**JOGO-Gx** சிகிச்சையின் பின்னர்:
**JOGO** சிகிச்சை மூலம் நடுக்கத்தை குறைப்பதன் மூலமோ, அல்லது நடுக்கத்தை முற்றாக தவிர்ப்பதன் மூலமோ, மற்றும் இந்த நடுக்கம் அதிகரிக்கும் வேகத்தை குறைப்பதன் மூலமோ உடலுக்கு ஊறு விளைவிக்க கூடிய மருந்து மாத்திரைகளை தவிர்ப்பதன் மூலம் ஒருவரின் வாழ்க்கைத் தரத்தையும் ஆயுள் காலத்தையும் அதிகரிக்க உதவும். நீண்ட காலப் பாவனையினால் உடலுக்கு ஊறு விளைவிக்க கூடிய மருந்து மாத்திரைகளை குறைக்கவோ அல்லது முற்றாக தவிர்க்கவோ முடியும்.
பார்கின்சன்ஸ் நடுக்கவாதமுள்ளவர்கள் **JOGO-Gx** சிகிச்சையின் பின்னர் உடலில் நடுக்கம் அகல்வதால் அல்லது குறைவதால் பலர் தங்கள் நாளாந்த கடமைகளை தாங்களே செய்து கொள்கின்றனர். ஏன் சைக்கிளைக் கூட தனியாக ஓட்டிச் செல்கின்றனர். நடனமாடுகின்றனர். இவ்வாறு மனம் விரும்பிய செயல்பாடுகளில் தங்களை தனியாக ஈடுபடுத்திக் கொள்வதைக் காணமுடிகிறது. உடலை சோர்வடையக் கூடிய மருந்துகளில் இருந்து விடுதலை பெறமுடிகிறது.
பார்கின்சன்ஸ் நடுக்கவாதம் மற்றும் தசை தொடர்பான அனைத்து பிரச்சினைகளுக்கும் செவி சாய்த்து பொருத்தமான மருத்துவ ஆலோசனைகளையும், சிகிச்சையும் **JOGO Health** வழங்குகிறது. சான்றளிக்கப்பட்ட **pelvic floor** சிகிச்சையாளர்களினால் ஜோகோவின் டிஜிட்டல் கிளினிக் மூலம் சேவை வழங்கப்படும். அழையுங்கள் 416 723 2000.
அல்லது
**JOGO Health, Majestic City Plaza, Unit A9**
2900 **Markham Rd, Scarborough, Ontario, M1X 1E6 Canada**
எனும் எமது முகவரிக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு **www.jogohealth.com** எனும் எமது வலைத்தளத்தை பார்வையிடுங்கள். **JOGO Health** வழங்கும் **JOGO treatment: Fast, Easy and Effective.**


சத்குரு ஸ்ரீ சரவண பாபாவின் கனடா வருகை
SADHGURU SRI SHARAVANA BABA IN CANADA



குன்றுதோறும் குடியிருக்கும் கலியுக வரதனாம் முருகப் பெருமானின் திரு வடிவமான ஸ்ரீ சரவண பாபா சுவாமி உலகளாவிய தனது ஆன்மீக பயணத்தின் ஒரு பகுதியாக தனது பக்தர்களை சந்திக்க மீண்டும் கனடா வருகை தரவுள்ளார்.

பின்வரும் அட்டவணையில் உள்ளபடி சத்குரு ஸ்ரீ சரவண பாபா தனது அடியார்களுக்கு தரிசனமும் ஆசியும் வழங்கவுள்ளார். அனைத்து முருக அடியார்களையும் இந்த பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*As part Of His mission to meet his global devotees, Sadhguru Sri Sharavana Baba is coming to Canada*
*We cordially invite all devotees to the public events outlined below.*

SWAMI'S CANADA VISIT JULY 09TH - 20TH 2022



PROGRAM-01
Date: July 09, 2022(Saturday) 5:30 PM
VENUE:
Jai Durga Hindu Temple
Address: 2701 Markham Rd,
Scarborough ON M1X 1M4



PROGRAM-02
Date: July 10, 2022(Sunday) 5:30 PM
Venue: Canada Sri Ayappam Temple Auditorium
635 Middlefield Rd,
Scarborough ON, M1V 5B8

PROGRAM-03
Special Event: Gurupoornima
Date:July 13, 2022(Wednesday) 5:30 PM
Venue: Canada Kanthasamy Temple Auditorium
733 Birchmount Rd, Scarborough ON, M1V 5B8

PROGRAM-04
Date:July 16, 2022 (Saturday) 5:30 PM
Venue: Bharat Mata Mandir
8887 The Gore Rd, Unit44
Brampton ON L6P 2K9

PROGRAM-05
Date:July 17, 2022(Sunday) 5:30 PM
Venue: Tamil Isai Kalaamanram Of Ontario
1120 Tapscott Rd, Unit 3
Scarborough ON M1X 1E8



மேலதிக தொடர்புகளுக்கு – *For further details:*
Telephone: (289) 900 2505
Website: www.omsharavanabhavamatham.ca
Facebook: www.facebook.com/canadaosb



ஓம் சரவணபவ சேவா அறக்கட்டளை – கனடா
*Om Sharavanabhava Seva Foundation of Canada (289) 900 2505*


SINHA
FROM LION BREWERY SRI LANKA
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
alc./vol
330 ml
es / Bouteilles
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
SINHA
-1881-
SINHA
LAGER
IMPORTED
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020

கனடிய செய்திகள் Canadian News

# "சாந்தா பஞ்சலிங்கம் போன்று தங்களுக்கு கல்விச் செல்வத்தை ஊட்டிய ஆசிரியப் பெருந்தகைகளை மக்கள் மத்தியில் கௌரவிக்க வேண்டும்"

## "சிவமயச் செல்வி" மீனா தவரட்ணம் அவர்களின் பாராட்ட விழாவில் இங்கிலாந்து போல் சத்தியநேசன் புகழாரம்





"கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர், சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் போன்று தங்களுக்கு கல்விச் செல்வத்தை ஊட்டிய எமது ஆசிரியப் பெருந்தகைகளை மக்கள் மத்தியில் கௌரவிக்க வேண்டும். அத்துடன் அவர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும் என்ற கூற்றை ஒரு வேத வாக்காகக் கொண்டு நாம் காரியங்களை ஆற்ற வேண்டும். அந்த வகையில் இன்றை இந்த விழாவை உலகெங்கும் பல நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த விருந்தினர்கள் மத்தியில் எமது ஊரின் நட்சத்திர ஆசிரியையாக விளங்கிய திருமதி மீனா தவரட்ணம் அவர்களின் பாராட்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்".







இவ்வாறு தெரிவித்தார் இங்கிலாந்து வாழ் முன்னாள் நகர பிதா திரு போல் சத்தியநேசன்.

கனடாவில் வாழும் "சிவமயச் செல்வி" மீனா தவரட்ணம் அவர்களைப் பாராட்டும் வகையில் கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர், சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் ஏற்பாடு செய்த விழாவில் இங்கிலாந்து போல் சத்தியநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஜேசிஎஸ் விழா மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி பாராட்டு விழாவில், நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கும் பொறுப்பை சாந்தா அவர்களின் நெருங்கிய நண்பர் கென் கிருபா அவர்கள் ஏற்றிருந்தார். அவர்தனத பணியை தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

மேற்படி விழாவில் கலந்து கொள்ளவென பல நாடுகளிலிருந்து பழைய மாணவர்கள் தங்கள் குடும்பத்தவர்களோடு பலர் வருகை தந்திருந்தார்கள்.



வர்த்தகப் பிரமுகர சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினர் சகிதம் நண்பர்கள் பலர் உடனிருந்து ஏற்பாடுகளைக் கவனிக்க. இந்த விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அன்றைய தினம் பாராட்டுவிழா எடுக்கப்பெற்ற "சிவமயச் செல்வி" மீனா தவரட்ணம் அவர்களுக்கு "சிவமயச் செல்வி" என்னும் அற்புதமான பட்டத்தை வழங்கியவர் அமரர் ஈழத்துச் சிவானந்தன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

விழாவில் உரும்பிராய் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சங்கம் சாந்தா பஞ்சலிங்கம் அவர்களோடு ஒத்தாசையாக இருந்து விழாவை சிறப்பாக நடத்தியது அதன் உறுப்பினர்களும் விழாவில் கலந்து கொண்டார்கள்.



முன்னாள் ஆசிரியர் "சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன் அவர்கள் சிவமயச் செல்வி மீனா தவரட்ணம் அவர்கள் பற்றிய விளக்கமாக உரையொன்றை வழங்கினார்.

அங்கு உரையாற்றிய கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது உரையில் "இந்த விழாவை நான் ஒரு சர்வதேச விழாவாகத் தான் பார்க்கின்றேன். சர்வ லட்சணமும் பொருந்த ஆசிரியப் பெருந்தகை மீனா தவரட்ணம் அவர்கள் சிறந்ததொரு சமயப் பேச்சாளராகவும் விளங்கினார் என்றும் ஆங்கிலத்தில் சிறப்பாகவும் கருத்தாழ மிக்கதாகவும் உரையாற்றக் கூடியவர்களில் இவருக்கு நிகர் இவரே ஆவா" என்றும் தெரிவித்தார்.




ALLSTATE'S
2022 NATIONAL CHAMPION AWARD WINNER!

# RONALD ANTON

Allstate Trusted Advisor and Agent

GET A FREE QUOTE

FOR AN EXCLUSIVE DISCOUNT, PLEASE CALL:
**416.846.6479**

Allstate.
You're in good hands.



உங்கள் வீடு, வாகண காப்புறுதி தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
தமிழிலும் உரையாடலாம்

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




JULY 9
SATURDAY
@6:00PM
PRABHA
MAGISHA
RACHEL
SABEASAN
RAJITHA KIRUBAN
SHARMILA
AKALIYA THARMAKULARAJAH
Mega Tuners
கௌரீஸின்
விடியலைத்தேடி
2022
PRIMA
DANCE SCHOOL
EST. 2011
www.uthayannews.ca
25th
உதயன்
இடம்
Ayyappan Temple
635 Middlefield Rd, Scarborough, ON M1V 5B8
VIBRANT HOSPITALITY GROUP
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com
Majestic City
The Biggest South Asian Indoor Mall in North America.
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Leasing Opportunity
Crish Sivakolunthu (Project Manager)
647 218 3698 or 416 291 3555
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
1646 VICTORIA PARK AVE., SUITE 1
(BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**



FRONTLINE COMMUNITY CENTRE

# TRIP TO VAL-MORIN TEMPLE!



**July 17, 2022**
**1:00 AM -10:30 PM**

**Cost : $150/person**
*Price includes transportation and meal

**Val-Morin Chariot Festival**
**&**
**Saint Joseph's Church**

Pickup and Drop-Off Location:
**Frontline Community Centre**
3031 Markham Road, Unit 27
Scarborough, ON
M1X 1L9
info@fcccanada.org

CALL (416)-840-4425 TO REGISTER!



# SRI LANKA
**A Warm Welcome Awaits**




இலங்கைக்கு வரும் போது
இங்கே தங்கி யாழ் உணவையும் சுவைக்கலாம்





MaRadha
HOTEL
Colombo | Sri Lanka
sales@maradha.lk | +94112550136

உலக செய்திகள்
World News

# ஈபிள் டவருக்கு வண்ணம் பூசும் பணிக்கு ரூ.489 கோடி இந்தியப் பணம் செலவிடப்படுகிறது



உலக அளவில் புகழ்பெற்ற சுற்றுலாத்தலங்களில் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரீசில் உள்ள ஈபிள் டவருக்கு முக்கிய இடம் எப்போதும் உண்டு.

ஐரோப்பிய சுற்றுலா செல்பவர்கள் பெரும்பாலும் ஈபிள் டவரை பார்க்காமல் திரும்புவதில்லை.அந்த அளவு உலக மக்களில் கவனத்தை ஈபிள் டவர் ஈர்த்துள்ளது.



பிரெஞ்சுப் புரட்சியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியான, உலகக் கண்காட்சி விழாவுக்கு நுழைவாயில் வளைவாக ஈபிள் டவர் கட்டப்பட்டது. அப்போதில் இருந்து பிரான்ஸ் நாட்டின் அடையாளங்களில் ஒன்றாக இது திகழ்ந்து வருகிறது.

மொத்தம் 1,063 அடி உயரம் கொண்ட புகழ்பெற்ற இந்த ஈபிள் டவர் தற்போது துருப்பிடித்து மோசமான நிலையில் இருப்பதாக தகவல் வெளியானது. அதைத் தொடர்ந்து அதை பராமரிக்க வேண்டும் என்ற கோரிக்கை உலக அளவில் எழுந்தது.

இந்த நிலையில் இந்திய மதிப்பில் சுமார் ரூ.489 கோடி (60 மில்லியன் யூரோ) செலவில் ஈபிள் டவர் வண்ணம் பூசப்பட்டு வருகிறது. ஈபிள் டவரில் இப்படி வண்ணம் பூசப்படுவது இது 20-வது முறை என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்பே தொடங்கப்பட்ட இந்த திட்டம் கொரோனா காரணமாக நிறுத்தப்பட்டது. கொரோனா முடிந்த பின்னரே வண்ணம் பூசுவது மீண்டும் தொடங்கப்பட்டது. தற்போது பார்வையாளர்கள் அதிகரித்துள்ள நிலையில் வண்ணம் பூசும் வேலைகள் வேகப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# "ஆண்களால் நான் ஏமாற்றப்பட்டேன்" என்கிறார் பிரபல நடிகை சுஷ்மிதா சென்

சினிமா

நடிகை சுஷ்மிதா சென் 1997 ஆம் ஆண்டு வெளிவந்த ரட்சகன் என்ற திரைப்படத்தின் மூலமாக தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானார். அதன் பிறகு அவருக்கு தமிழில் சரியான வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால் பாலிவுட்டுக்கு சென்ற அவர் பிரபல நடிகையாக வளம் வர ஆரம்பித்தார். இவர் முன்னாள் உலக அழகி பட்டத்தை வென்றுள்ளார். 2000 ஆண்டு ரேனீ என்ற பெண் குழந்தையை தத்தெடுத்து வளர்த்து வந்தார். அதன் பிறகு 2019 இல் அலிசா என்ற பெண் குழந்தையை தத்தெடுத்து வளர்த்தார்.

திருமணம் செய்து கொள்ளாமல் குழந்தையை மட்டும் தத்தெடுத்து வளர்த்து வருகிறார். திருமணம் செய்து கொள்ளாதது குறித்து சுஷ்மிதா சென் தெரிவித்ததாவது: "அதிர்ஷ்டவசமாக சில சுவாரசியமான ஆண்களை நான் சந்தித்து உள்ளேன். அதுமட்டுமல்லாமல் அவர்களால் நான் ஏமாற்றம் அடைந்து விட்டேன். ஆகையால் தான் என்னால் திருமணம் செய்து கொள்ள முடியவில்லை. அது மட்டும் இல்லாமல் மூன்று முறை எனக்கு திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பு வந்தது. ஆனால் கடவுள் என்னை காப்பாற்றி விட்டார். அதேபோல அந்த கடவுள் தான் இந்த இரண்டு குழந்தைகளையும் பாதுகாத்து வருகிறார்" என்று கூறியுள்ளார்.


A1 AC TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா



6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்
2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை
ரொறன்ரோவில் இருந்து புரப்பட்டு, இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.
Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick
ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்.



- Hopewell Rocks • Fisherman-House • Swiss Air Flight • Potato Farm
- Magnetic Hill • Cavendish-Beach • Longest Covered Bridge • Quebec City Tour
- Peggys Cove • Shediac • Maritime Museum • st.joseph church
- Charlotte Town • Green Gables • Reversing Falls • and More...

ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே
3 to 4 Star Hotel or Motel
a1actour.com@gmail.com

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.
சொகுசு பேருந்து · தங்குமிட வசதி · காலை உணவு · பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்
சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER
Email: a1actour.com@gmail.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

# நோயினை ஆராய்ந்து நோய்வருதற்குக் காரணமும் ஆராய்ந்து அந்நோய் தீர்க்கும் நெறியையும் சரியாகப் பின்பற்றி நோயாளியை குணப்படுத்த வேண்டும்!

**- கனடா நக்கீரன்**

பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா?
யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே கருடன் சொன்னது
அதில் அர்த்தம் உள்ளது.

மதியாதார் தலைவாசல் மிதிக்காதே என்று மானமுள்ள மனிதனுக்கு அவ்வை சொன்னது அது அவ்வை சொன்னது
அதில் அர்த்தம் உள்ளது.

இது கவியரசர் கண்ணதாசன் அவர்கள் எழுதிய தத்துவப் பாடல் வரிகள். இசை எம்எஸ் விசுவநாதன். பாடியவர் ரீஎம் சவுந்தரராசன். இயக்குநர் வி சீனிவாசன். படம் சூரியகாந்தி. ஆண்டு 1973. இன்றைய இலங்கை அரசியலைப் பார்க்கும் போது இந்தப் பாடல் வரிகள் நினைவுக்கு வருகிறது. இதில் யார் அந்தப் பாம்பு? யார் அந்தக் கருடன்?

நிதியமைச்சர் பதவியில் இருந்து பிரதமர் இரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என அமைச்சர் தம்மிக்க பெரேரா போர்க்கொடி தூக்கியுள்ளார். சாதாரணமாக பிரதமர்தான் அமைச்சர் ஒருவரைப் பதவி விலகுமாறு கேட்பார்.

“இலங்கையின் நிதியமைச்சர், பேரழிவிற்குத் திட்டமிட்டுள்ளார் என சாடிய அமைச்சர் பெரேரா, பணப்புழக்கத்தை அதிகரிப்பது, மக்களுக்கு உணவளிப்பது, டொலர்களைக் கொண்டு வருவது, டொலர் வருமானம், கடன் வாங்குதல், கிடைக்கக்கூடிய அத்தியாவசிய உணவுக் கடன்கள் மற்றும் பிற கடன் வரிகள் அனைத்தையும் பிரதமர் தடுத்து வருகிறார்.




“இன்று முதல் அரகலயாவில் இணைகிறேன். நான் ஏழு நாட்கள் அரசாங்கத்தில் இருக்கிறேன். நடப்பதை நான் பார்த்திருக்கிறேன். நிதியமைச்சர் என்ற முறையில் தனது அரசியல் விளையாட்டை பிரதமர் நிறுத்த வேண்டும். இரணிலுக்கும் அவரது பொருளாதார நிபுணர்களுக்கும் பகிரங்க ஊடக விவாதத்திற்கு வருமாறு நான் அறைகூவல் விடுகிறேன். ஒருவேளை அவர் என் கேள்விகளுக்குப் பதிலளிக்கலாம். நான் அவரை 2019 இல் ஒரு விவாதத்திற்கு வருமாறு சவால் விடுத்தேன், அவர் ஓடிவிட்டார். நான் அவருக்கு மீண்டும் அறைகூவல் விடுகிறேன்” என்று அமைச்சர் கடுமையாக பிரதமரைச் சாடினார். இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் 51 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பது தெரிந்ததே.

தம்மிக்க பெரேராவின் தாக்குதலுக்கு நாடாளுமன்றத்தில் எதிர்வினையாற்றுமாறு எதிர்கட்சியினரிடம்கேட்டபோது அதற்கு பதிலளிக்காமல் பிரதமர் விக்கிரமசிங்க பின்வாங்கிவிட்டார்.

யூன் 09 அன்று முன்னாள் நிதியமைச்சர் பசில் இராசபக்ச தனது நா. உ பதவியை விட்டு விலகினார். இதனால் நாடாளுமன்றத்தில் ஒரு வெற்றிடம் இருந்தது. தம்மிக்க பெரேரா 10 யூன் அன்று பொதுசன மக்கள் முன்னணியில் (SLPP) உறுப்பினராகச் சேர்ந்தார். இரண்டு வாரம் கழியும் முன்னர் 22 யூன் 2022 அன்று தேசியப் பட்டியல் நா.உ ஆக நாடாளுமன்ற அவைத் தலைவர் அவர்களால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். இரண்டு நாட்கள் கழித்து முதலீடு மற்றும் ஊக்குவிப்பு அமைச்சராக சனாதிபதியால் நியமிக்கப் பட்டார். இது போன்ற அமைச்சுப் பதவி முன்னர் இருக்கவில்லை. இவருக்காகவே அது உருவாக்கப்பட்டது! இவரது நாடாளுமன்ற வருகை நாடாளுமன்றத்தில் பதற்றத்தையும் கவலையையும் தோற்றுவித்துள்ளது.

யார் இந்த தம்மிக்க பெரேரா? இலங்கையின் மிகப் பெரிய பணக்காரர்களில் இவர் ஒருவர். சூதாட்ட மன்னன் **(casino king)** என அழைக்கப்படுகிறார். இராசபக்சே குடும்பத்துக்கு நெருங்கிய கூட்டாளி ஆவர். பல தொழில் நிறுவனங்களின் பெரும்பான்மை பங்குதாரராக இருக்கிறார். 09 யூன் அன்று பிரதமர் மகிந்த இராபக்சா தனது பதவியில் இருந்து விலகிய பின்னர் நிதியமைச்சின் செயலாளர் பதவிக்கு அவர் காய்களை நகர்த்தியிருந்தார். அமைச்சகம் சார்ந்த இலக்குகள் மற்றும் சாலை வரைபடங்களுடன் நாட்டிற்கான பொருளாதார வளர்ச்சி உத்தி மற்றும் செயல் திட்டத்தையும் அவரது இணையதளம் விளம்பரப்படுத்தியது. இவர் மீது வரி ஏய்ப்புக் குற்றச்சாட்டுகள் இருந்தன. அமைச்சர் பதவியை ஏற்கு முன்னர் நிலுவையில் இருந்த பெருந்தொகை வருமான வரியை அரசுக்குச் செலுத்தியிருந்தார்.

தம்மிக்க பேரேரா அமைச்சராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து 12 யூன் அன்று அவரது வீட்டிற்கு வெளியே போராட்டங்கள் நடந்தன, கலகத் தடுப்புப் பொலிசார் மற்றும் இராணுவம் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டனர்.

இப்போது யார் அந்த பாம்பு, யார் அந்த கருடன் என்பது வாசகர்களுக்கு விளங்கியிருக்கும். இராசபக்சாவின் குடும்பத்தின் ஆசீர்வாதம்தான் பிரதமர் இரணில் விக்கிரமசிங்க பதவி விலகவேண்டும் என அவரைப் பொதுவெளியில் பேச வைத்துள்ளது. பொதுவாக அமைச்சர்தான் பிரதமரின் தயவில் தங்கியிருப்பார். இங்கு பிரதமர் இரணில் விக்கிரமசிங்க சனாதிபதி மற்றும் அமைச்சர்களின் தயவில் தங்கியிருக்கிறார்.

உண்மை என்னவென்றால் இரணில் விக்கிரமசிங்க மதியாதார் தலைவாசல் மிதிக்காதே என்று மானமுள்ள மனிதனுக்கு அவ்வை சொன்னது அதில் அர்த்தம் உள்ளது என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. சனாதிபதி இராசபக்ச பிரதமர் பதவியை இரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க முன்வந்தபோது விக்கிரமசிங்க அதற்காகக் காத்திருந்தவர் போல் நாலு கால் பாய்ச்சலில் போய் ஏற்றுக் கொண்டார். பொதுசன முன்னணியின் நாடாளுமன்றக் குழுவின் நிபந்தனையற்ற ஆதரவு தனக்கு இருக்க வேண்டும் என்ற உறுதி மொழியைய் கூட அவர் பெறவில்லை. இதனால் அவர் பெரிய அவமானத்துக்குள்ளாக நேரிட்டுள்ளது!

இதற்கிடையில் இலங்கையில் உள்ள மல்வத்தை, அஸ்கிரிய, இராமண்ணா மற்றும் அமரபுர பவுத்த பீடங்களைச் சேர்ந்த நான்கு மகாநாயக்கர்கள் தேரர்கள் கோட்டாபய இராசபக்சவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர். கடந்த 02 யூலை அன்று வெளியிட்ட அறிக்கையில் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அனைத்துக் கட்சி இடைக்கால அரசாங்கத்தை 6 மாத காலத்துக்கு அமைக்குமாறு கேட்டிருக்கிறார்கள்.

“அரசியல் தவறான நடத்தைகளை நிறுத்தி நேர்மையாக இருங்கள் மற்றும் ஆறு மாத காலத்திற்கு அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து அனைத்துக் கட்சி அரசாங்கத்தை நியமிக்கவும்” என்று மதத் தலைவர்கள் யூலை 02 ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தனர்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்க சனாதிபதி துரிதமாக செயற்பட வேண்டும் என வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே சுமங்கல தேரர், வரகாகொட ஞானரதன தேரர், தொடம்பஹல சந்தசிறி தேரர் மற்றும் வணக்கத்துக்குரிய மகுலேவே விமலாபிதான தேரர் ஆகியோர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

பவுத்த பிக்குகள் சனாதிபதி கோட்டாபய அரசியல் விளையாட்டுகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டியதோடு, “நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வு காண நேர்மையான முயற்சிகளை” மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

சிக்கல்களுக்கு புதிய அமைச்சரவை தீர்வாகாது என்றும் உரிய தீர்வு இன்றேல், சங்க கட்டளையைப் பிறப்பிக்கப்போவதாகவும் அவர்கள் எச்சரித்திருந்தனர். மேலும் ஆயிரம் பவுத்த தேரர்களை ஒன்று திரட்டி தலைநகரை முற்றுகை இடப்போவதாக எச்சரித்துள்ளனர். இது மகாநாயக்க தேரர்கள் கடந்த ஏப்ரில் மாதம் சனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் நாட்டை அரசியல், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்க வேண்டும், பிரதமர் மகிந்த இராசபக்ச தனது பதவியில் இருந்து விலக வேண்டும் என்றும் கேட்டிருந்தனர். இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இந்தப் பவுத்த மகாநாயக்கத் தேரர்கள் சனாதிபதி கோட்டாபய பதவி விலக வேண்டும் என்று கேட்கவில்லை. என்ன காரணம்?

காரணம் பிரதமர் மகிந்த இராசபக்சாவை விட சனாதிபதி கோட்டாபய இராசபக்ச தீவிர சிங்கள - பவுத்த தேசியவாதியாகப் பார்க்கப்படுகிறார். குறிப்பாக இந்த மகாநாயக்க தேரர்கள் நிறைவேற்று அதிகாரம் படைத்த சனாதிபதி முறைமை நீக்க வேண்டும் அதனை ஒழிக்கக் கூடாது என்பதில் குறியாக இருக்கிறார்கள்.

நிறைவேற்று அதிகாரம் படைத்த சனாதிபதி பதவியை ஒழித்தால் 13ஏ திருத்தத்தின் கீழ் சனாதிபதிக்கும் அவரது முகவரான மாகாண ஆளுநருக்கும் இப்போது இருக்கும் அதிகாரங்கள் பறிபோய்விடும். இது மாகாணசபைக்குப் பதில் வடக்கிலும் கிழக்கிலும் இணைப்பாட்சி உருவாகிவிடும் என்பது இந்த மகாநாயக்கர்களது நிலைப்பாடாகும்.

இது

இவ்வாறிருக்க எதிர்வரும் 09 யூலை அன்று கொழும்பு சுற்றி வளைக்கப்படும் என எதிர்க்கட்சிகள், பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மற்றும் காலிமுகத்திடலில் போராடிக் கொண்டிருக்கும் போராளிகள் அறிவித்துள்ளனர். அவர்களை எதிர்கொள்ள அரசாங்கம் இராணுவம் மற்றும் காவல்துறையை கொழும்பில் குவித்து வருகிறது.

இதற்கிடையில் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரம் அடைந்துள்ளது. மக்கள் எரிபொருள், டீசல், மண்ணெண்ணை போன்றவற்றுக்கு நாட்கணக்கில் எரிபொருள் விற்பனை நிலையங்களில் தவம் கிடக்கிறார்கள். மின்சார வெட்டு மணிக்கணக்கில் நீள்கிறது. இதனால் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. ஏற்றுமதி வீழ்ச்சி அடைந்துள்ளது. சில நீதிமன்றங்களில் தடையுத்தரவையும் வாங்கியுள்ளன.

எரிபொருட்களோடு கப்பல்கள் வந்து கொண்டிருக்கின்றன என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர சொல்கிறார். ஆனால் அவை வந்தபாடில்லை. வந்தாலும் அதற்குரிய கொடுப்பனவைச் செலுத்த டொலர் கைவசம் இருக்கிறதா என்பது தெரியவில்லை.

இந்தியா இதுவரை இலங்கைக்கு 3.5 பில்லியன் டொலரை கடனாகக் கொடுத்துள்ளது. அதில் ஒரு பகுதிதான் இந்தியாவிலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்யப்பயன் படுத்தப்பட்டது. இதற்கு மேலும் நிதியுதவி செய்ய இந்தியா தயங்குகிறது. இப்போது எரிபொருளை வழங்குவதற்காக இந்தியா முன்கூட்டியே பணத்தை எதிர்பார்ப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஏற்கனவே கொடுத்த கடனுக்கு துணைஈடு **(collateral)** கேட்கிறது.

அனைத்துலக நாணய நிதியத்தோடு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை என சில ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அப்படிக் கிடைத்தாலும் அதற்குக் காலம் எடுக்கும். வாங்குகிற கடனை மீள அடைக்கும் வல்லமை - தாங்கிப் பிடிக்கும் திறன் **(sustainability)** இலங்கைக்கு இருக்கிறதா என்பதை நாணய நிதியம் ஆய்வு செய்கிறது.

அமெரிக்கா, பிரித்தானிய உட்பட மேற்குலக நாடுகளும் இலங்கைக்குக் கடன் கொடுக்கப் பின்னடிக்கின்றன. “சமாதானத்தையும் உறுதித்தன்மையையும் கட்டியெழுப்ப, இலங்கையானது சட்டத்தின் ஆட்சி, அனைவருக்கும் மனித உரிமைகளுக்கான மரியாதை, சமமான பிரதிநிதித்துவம் மற்றும் வெளிப்படையான அரசாங்கம் போன்ற சனநாயக விழுமியங்களைப் பாதுகாக்க வேண்டும்.”

இந்த சனநாயக விழுமியங்கள் வீழ்ச்சியடையும் போது, தனியார் துறை, சிவில் சமூகம் மற்றும் சுதந்திரமான செய்தித்தாள்கள், நாட்டின் தலைமை மற்றும் அரசாங்கத்தை பொறுப்புக் கூற வைக்க



வேண்டும். சீனாவும் கொடுத்த கடனை மீள்கட்டமைக்க அணியமாக இல்லை எனச் சொல்லிவிட்டது.

இதை எழுதிக் கொண்டிருக்கும் போது யப்பானின் **Taisei** நிறுவனத்திடம் அமைச்சரவை அமைச்சர் ஒருவர் இலஞ்சம் கேட்டதாக சமூக ஊடகங்களில் வெளியான செய்தியை மேற்கோள் காட்டி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் நேற்று (யூலை 05) முன்வைத்த குற்றச்சாட்டை அடுத்து துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தனது பதவி விலகும் கடிதத்தை சனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு நாடு சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் மொழி, இன, மத பாகுபாடே முக்கிய காரணிகளாகும். அடுத்து குடும்ப ஆட்சி, ஊழல், உறவினர்களுக்குப் பதவிகள், வினைத்திறன் இன்மை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

ஒரு நோயாளியைக் குணப்படுத்த வேண்டும் என்றால் மருத்துவர் நோயினை ஆராய்ந்து நோய்வருதற்குக் காரணமும் ஆராய்ந்து அந்நோய் தீர்க்கும் நெறியையும் சரியாகப் பின்பற்றி நோயாளியை குணப்படுத்த வேண்டும். இல்லையேல் நோயாளி தப்பமாட்டார்.

# யேசுவின் வருகை சீக்கிரம்



ஆக்கம் - *மாகிரட் குணரட்ணம்* (கனடா)

கடவுள் ஒருவரே தேவன், அவர் எங்கள் மேல் வைத்த அன்பின் காரணமாக தமது ஒரே குமாரனாகிய யேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். நாங்கள் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி எங்கள் மேல் இவ்வளவாய் அன்பு கூர்ந்தார்.

அதனால் குமாரனாகிய யேசு கிறிஸ்து நாங்கள் நடக்க வேண்டிய வழிகளாகிய அன்பு, தாழ்மை, பொறுமை, பிறரைத் தம்மைப் போல் நேசித்தல், உண்மை, நேர்மை என்பவையான வழிகளை காண்பித்தார், உபதேசித்தார். அது போன்று அவரால் தெரிந்து கொண்டவர்கட்கு அவருடைய தேற்றர வாளரான பரிசுத்த ஆவியானவரையும் அவரால் வெளிப்படுத்தப்பட்ட பரிசுத்த வேதாகமத்தையும் எங்கட்கு தந்தார். அதில் நாங்கள் யாவையும் அறியவும் பெற்றுக் கொள்ளவும் முடிகிறது. அதில் குறிக்கப்பட்ட சத்தியங்களை செபத்தில் வைத்துக் கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியும். உறுதியான நம்பிக்கை, விசுவாசத்துடன் கேட்க வேண்டும்.

இவை மாத்திரம் அல்லாமல் நம்முடைய பாவங்கள், சாபங்களுக்காகவும் தம்மை அநேக பாடுகளுக்கூடாக இரத்தம் சிந்தி மரித்தார். இதனால் நாங்கள் பாவ சாபங்களில் இருந்து மீட்கப்பட்டு கர்த்தருடைய பிள்ளைகளானோம்.

அவர் எங்களைப் படைத்த மாத்திரமல்ல அவரைப் போல் நாங்கள் வாழ வேண்டுமென்று விரும்பினார். யேசு தன் பிதாவின் சித்தப்படியும் கூறப்பட்ட வாக்கின்படியும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். தான் தெரிந்து கொண்ட சீஷர்களுடன் உலகத்தில் பல விதமான அற்புதங்களையும், செய்து காட்டித் தன் வெளிச்சத்தைக் கண்டு அவரைப் போல் நடக்கவும் கற்றுக் கொடுத்தார்.

பின்னும் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளபட்டு, தன் பிதாவின் வலது பக்கத்தில் வீற்றிருந்து, எங்களையும் எங்கள் ஒவ்வொரு செய்கைகளையும் மிகவும் கவனத்துடன் கண்ணோக்கிக் கொண்டிருக்கின்றார். நாங்கள் செய்யும் ஒவ்வொரு நன்மை, தீமைகள் எங்களுக்குரிய புத்தகத்தில் குறிக்கப்படுகின்றது. நியாயத் தீர்ப்பில் நாம் நியாயம் தீர்க்கப்படுவோம். ஆகவே நாங்கள் சிறியதோ பெரியதோ எதைச் செய்தாலும் நியாயம் விசாரிக்கப்படுவோம். ஆகவே நாங்கள் சரியாக, நியாயமாக, ஞானத்தோடு செய்யவேண்டும். கர்த்தர் வாக்கு மாறாதவர். யேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். பரிசுத்த வேதாகமம் எபிரேயர் 13:8. குறிக்கப்பட்டுள்ளது. எப்போதும் எங்களுடன் இருந்து எங்களைப் பாதுகாத்து வழிநடத்துகிறார்.

இந்தக் கடைசி நாட்களிலே நடந்து கொண்டிருக்கும் காரியங்களை நாம் நோக்கிப் பார்த்தால் காணாதவைகளைக் காணவும், கேட்காதவைகளைக் கேட்கவும் கூடியவைகளாயிருக்கின்றோம். கர்த்தர் சீக்கிரம் வருகிறார். தம்மை நெருங்கி வாழும் பிள்ளைகட்கு சில காரியங்களை வெளிப்படுத்துகின்றார். தற்போதைய அறிகுறிகள் மூலம் அவர் வருகை என்பதை அறியலாம்.

எந்நேரம் வருவார், எப்போது வருவார் என்பதை ஒருவரும் அறியார்கள். கர்த்தர், ஒருவரே அறிவார். ஆனால் நாங்கள் எப்போதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.


MONEY PROBLEMS?

பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-
முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உன்னது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது
வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக
நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

## நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-
சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-
விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-
சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

## நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-
அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

றொறன்றோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# பலாலி, காங்கேசன்துறையின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



இல்லாததை இருப்பது போலவும், முடியாததை முடியும் என்பது போலவும், போலி வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றுவது இலங்கை ஆட்சியாளர்களுக்கு கைவந்த கலை போலுள்ளது.

பலாலி விமானமும் இல்லை, காங்கேசன்துறை கப்பலும் இல்லை, அடுத்து யாழ் கிளிநொச்சி போக்குவரத்தாவது இடம்பெறுமா என்ற ஏக்கத்தில் இரு மாவட்ட மக்களும் உள்ளனர். பலாலி விமான சேவை யூலை மாதம் 1ஆம் திகதி முதல் இடம்பெறும் என அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நிமால் சிறிபாலடீசில்வாவும் தெரிவித்தனர். இத்தோடு காங்கேசன்துறை காரைக்கால் கப்பல் சேவைக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கி விட்டது விரைவில் கப்பல் சேவை என்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா. எவையுமே இன்றுவரை இடம்பெறவில்லை. இவற்றை கூறிய காலப் பகுதியில் வராது என்பதும் அதிலும் குறிப்பாக கப்பல் சேவை வரவே வராது என்பதும் முன்னரே தெரிந்த விடயம். ஏனெனில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து யூலை முதலாம் திகதி தொடக்கம் சென்னை, திருச்சி விமான சேவை இடம்பெறும் என இலங்கை போக்கு வரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடீசில்வா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கையன் இராமநாதன் முன்னிலையில் பலாலி விமான நிலையத்தில் வைத்து யூன் மாதம் 18ஆம் திகதி அன்றுதான் தெரிவித்தார்.

இந்த விடயம் 2022-06-13 ஆம் திகதிய அமைச்சரவையில் விமான சேவையை நடாத்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வரும் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான நிரஞ்சனின் கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் முன் வைத்தபோது நிமால் சிறீபாலடீசில்வா நேரில் வந்து பார்வையிட்டு ஏற்பாடுகளை மேற்கொள்வார் என்றபோதே இதோ விமானம் வந்து விட்டது என்பதுபோல் அமைச்சரின் விசுவாசிகள் அறிக்கை விட்டனர். ஆனால் 2019ஆம் ஆண்டின் பட்டறிவை வைத்து கனடாவின் உதயனில் நான் 2022-06-16 அன்றே தெளிவாக செய்தியிட்டேன் "பலாலிக்கு விமானம் வரும் ஆனால் வராது" என்று. அதாவது அமைச்சர்கள், ஆதரவாளர்கள், அரச விசுவாசிகள் வாயால் விடும் விமானம்தான் வரும். நியமான விமானம் இந்தக் காலத்தில் வரவே வராது என்பதே அதன் உண்மையாக அமைந்து விட்டது.

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் கும்பாபிசேகத்தை காரணம் காட்டி அன்று முதல் விமான சேவையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டதனால் ஜூலை முதலாம் திகதி தீர்மானிக்கப்பட்டது. கும்பாபிசேகம் 6ஆம் திகதிவரை இடம்பெற்றது. அன்றைய தினம் வரையிலும் ஒரு விமானமும் வரவில்லை. பலாலிக்கும் இந்தியாவிற்கும் இடையிலான விமான சேவைகள் ஆரம்பிக்காதமைக்கு இந்தியாவே காரணம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தற்போது குற்றம் சாட்டியுள்ளார்.

அமைச்சர் காக்கை தீவுப் பகுதியில் புதிதாக அமைக்கவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்கு அடிக்கல் நாட்டி வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இந்தியாவில் எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது, இதனால் விமானங்கள் இங்கு வந்துவிட்டு திரும்பி செல்வதற்கு எரிபொருள் இல்லை. அத்துடன் இந்தியாவில் இருக்கக்கூடிய சில சட்டச் சிக்கல்கள் காரணமாகவும் இந்த காலதாமதம் ஏற்பட்டுள்ளது எனவும் இந்த விமான சேவைக்கு இலங்கை அரசு தனது பூரணமான ஒத்துழைப்பினையும், அங்கீகாரத்தினையும் வழங்குகிறது. இந்த சிக்கல்கள் விரைவில் தீர்க்கப்பட்டு விமான சேவைகள் தொடரும் என்றார். ஆனால் உணமை அதுவல்ல.



**பலாலி விமான சேவையில் உள்ள தடைகள்**

பலாலி விமான நிலையத்திலிருந்து பயணிகள் சேவைகள் தொடங்கும் போது இங்கிருந்து சேவை நடாத்தக்கூடிய விமானத்திற்கு இன்றைய இலங்கை அரசால் அதற்கான எரிபொருளைக்கூட வழங்கும் வல்லமை கிடையாது. இதேநேரம் தனியார் விமானம் என்னும் தற்கலிக வாடகை விமானத்தை ஒருவர் இயக்குவதானால் அதிலே வரி நெருக்கடியும் உண்டு. அதாவது நிரந்நர விமானம் ஒன்றை இந்தியாவில் இயக்குவதானால் விமானச் சிட்டையின் பெறுமதியின் 5 வீதம் வரியாகச் செலுத்த வேண்டும். இதுவே வாடகை விமானம் எனில் விமானச் சிட்டைப் பெறுமதியின் 18 வீத வரி செலுத்த வேண்டும் என்பதனால் விமானச் சிட்டையின் பெறுமதி அதிகரிக்கும்.

ஒப்பீட்டளவில் இதை நோக்கும் போது, கொழும்பிலிருந்து சென்னைக்கு சாதாரண

(தொடர்ச்சி 26ம் பக்கம்)



# பலாலி, காங்கேசன்துறையின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது

(25ம் பக்கத் தொடர்சிசி)

விமானத்தில் சென்றுவரும் இருவழி கட்டணத்தைவிட, பலாலியிலிருந்து சென்னைக்கு தனியார் விமானத்தில் சென்றுவர இருவழி கட்டணம் கூடுதலாகும். இதனால் பலாலி சென்னை இடையே நிரந்தர விமான சேவை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது முன் நகர்த்தப்படுகின்றது. இதேநேரம் பலாலி விமான நிலையம் 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திறக்கப்பட்டபோதும் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் கொரோனாவின் பெயருடன் மூடப்பட்டது. இதனால் வாடகை விமானமோ அல்லது நிரந்தர விமானமோ இன்னுமோர் நாட்டில் இருந்து வருவதானால் இந்த விமான நிலையம் தற்போதும் இயங்கு நிலையில் உள்ளது என இலங்கை விமானப் போக்கு வரத்து அதிகார சபை உறுதிப்படுத்தல் ஆவணம் ஒன்று வழங்க வேண்டும். இந்த ஆவணத்தினை உடன் ஏற்பாடு செய்து வழங்குமாறு அமைச்சர் 18ஆம் திகதியே பலாலியில் வைத்து அதிகார சபையின் தலைவரான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு பணிப்புரை வழங்கியபோதும் ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு ஜுன் மாதம் 30ஆம் திகதியே அந்த ஆவணம் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன் பின்பு இந்த ஆவணத்தை பெற்ற டில்லி அரசு நிரந்தர விமான சேவையை நடாத்துவதற்கான விண்ணப்பத்தை அவசர அவசரமாக 4ஆம் திகதியே பூர்த்தி செய்து அதனை அனுப்ப முயன்றபோது அனுப்பினால் ஏற்படும் கால தாமதம் சுட்டிக்காட்டப்பட்டு ஏற்பாட்டாளர் ஒருவரின் கையிலேயே கொடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனால் இனி அதற்கான பணிகள் மேற்கொண்டு சேவை வருவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.



**அமைச்சரின் எரிபொருள் கூற்று**

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுவது போன்று இந்தியாவில் எரிபொருள் பிரச்சினை என கூற முடியாது. ஆனால் எரிபொருள் பிரச்சணை இலங்கையில்தான் ஏற்படுகின்றது. அது எவ்வாறு எனில் ஒரு விமான சேவை இடம்பெறுகின்றபோது எந்த விமான நிலையத்தை நோக்கி விமானம் பறந்தாலும் செல்லும் விமான நிலையம் வரையுமான சேவைக்கான எரிபொருளை மட்டும் நம்பி பறப்பில் ஈடுபட முடியாது. எந்த விமான நிலையத்தை நோக்கி விமானம் பறக்கின்றது அந்த விமான நிலையத்தில் ஓர் திடீர் இடையூறு ஏற்பட்டால் விமானத்தை எந்த நேரத்திலும் வேறு ஒரு விமான நிலையத்தை நோக்கி திருப்ப வேண்டும் அதற்கு போதிய எரிபொருள் விமானத்தில் இருக்க வேண்டும் என்பது கட்டாயம். இதுவே சர்வதேச அளவில் கடைப்பிடிக்கபடும் முறையாகும்.

இலங்கை இந்திய விமான சேவையில் எரிபொருள் பிரச்சணை எவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டதெனில் இலங்கையின் தற்போதைய லட்சணம் தெரிந்த இந்திய விமானங்கள் இந்தியாவில் புறப்பட்டு பலாலியில் இறங்கி மீண்டும் சென்னை அல்லது திருச்சிக்கான எரிபொருளையும் எடுத்து வரும் ஏற்பாட்டுடனேயே பறப்பில் ஈடுபடத் தயார் படுத்தப்பட்டது. இலங்கையில் எரிபொருள் இல்லை அல்லது உரிய நேரத்தில் கிடைக்காது என்கிற யதார்த்தத்தை இந்திய விமான நிறுவனங்கள் உணர்ந்துள்ளன.




இதனால் இந்தியாவில் இருந்து பலாலி வரும் விமானம் பலாலியில் இறக்க முடியாத சூழல் ஏற்பட்டாலும் இன்னுமோர் விமான நிலையத்திற்கு திருப்புவதற்கு மோதுமான எரிபொருள் கண்டிப்பாக கையிருப்பில் இருக்கும். அதேநேரம் திரும்பிச் செல்லும்போது சென்னை அல்லது திருச்சியில் இறக்க முடியாத சூழல் ஏற்பட்டால் வேறு விமான நிலையத்திற்கு திருப்ப எரிபொருள் போதுமா என்பதிலேயே கேள்வி எழுப்பப்பட்டு விமானிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அவர்களின் திருப்திகரமான பதிலை தற்போது இந்தியத் தரப்பு பெற்றுள்ளது. (இலங்கை அல்ல) ஆகையினால் இனி பணிகள் முன் நகர்த்தப்படும்.

**காங்கேசன்துறை காரைக்கால் கப்பல் சேவை**

இந்தியாவில் இருந்து வரும் விமானத்திற்கு பெரும் அக்கப்போர் காணப்பட்டாலும் கப்பலில் இவ்வளவு நெருக்கடி நிலைமை காணப்படவில்லை. இருந்தபோதும் கப்பல் சேவை கண்டிப்பாக வரவே வரமாட்டாது என்பதும் திடமானது.

கப்பல் சேவை நடாத்தினால் பயணிகள் சேவையின்போது ஒரு பயணிக்கு இரு வழிக் கட்டணமும் 45 ஆயிரம் ரூபாவினை மட்டுமே அறவிட ஏற்பாட்டாளர் தயாராகவுள்ளார். ஆனால் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைக்கு கை கொடுப்பது போன்று 75 கிலோ முதல் 100 கிலோ வரை அனுமதிக்கவும் கப்பல் நிறுவனம் தயாரகவுள்ளது. இதனால், அனைத்து பயணிகளும் கப்பலை நாடுவது மட்டுமன்றி இலங்கையில் இன்று அதிக சுற்றுலாப் மயணிகள் வரும் நாடாக இந்தியா இருக்கும் காலத்தில் கப்பலில் இந்த அளவு பொருள் எடுத்து வர முடியும் எனில் தென்னிலங்கை மக்கள் மட்டுமல்ல இந்தியர்களும் கப்பல் சேவையை நாடினால் தெற்கின் பொருளாதார நிலவரம் பின்னடையும் என அரசும் தென்னிலங்கை வர்த்தகர்களும் எண்ணுகின்றனர்.

பயணிகள் சேவைக்கு அப்பால் சரக்கு கப்பல் சேவையேனும் நடாத்தினாலும் நாட்டின் வடக்குப் பகுதி பொருளாதாரத்தில் வளர்ந்து விடும் என்ற இனவாதக் கண்கொண்டே இன்றும் பார்க்கப்படுகின்றது. இதனால் கப்பல் சேவை யார் குற்றியும் அரிசி வரும் சந்தர்ப்பம் இல்லை என பெயர் கூற அஞ்சிய உயர் அதிகாரிகள் இருவர் திடமாக தெரிவிக்கின்றனர்.



# அதிமுக பொதுக்குழுவுக்கு தடை கோரிய ஓபிஎஸ், வழக்கில் இபிஎஸ் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

அதிமுக பொதுக்குழுக் கூட்டத்திற்கு தடைவிதிக்க கோரிய வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் காலாவதியாகிவிட்டதா?, பொதுக்குழுவைக் கூட்டுவதற்கு தலைமைக்கழக நிர்வாகிகளுக்கு அதிகாரம் உள்ளதா?, எத்தனை நாட்களுக்கு முன் பொதுக்குழுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும் ?, பொதுக்குழுவுக்கான அழைப்பிதழில் யார் கையெழுத்திடுவது? என்பது உள்ளிட்ட கேள்விகளை எழுப்பி, எடப்பாடி பழனிசாமி தரப்பில் விரிவான பதில்மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு, விசாரணையை நாளைக்கு (ஜூலை 8) ஒத்திவைத்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிமுக ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் ஓ பன்னீர்செல்வம் தாக்கல் செய்திருந்த மனுவில், "பொதுக்குழு கூட்டத்திற்கு 15 நாட்களுக்கு முன்பாக அழைப்பு விடுக்க வேண்டும். ஆனால் ஜூலை 11ம் தேதி பொதுக்குழு கூட்டம் தொடர்பான அறிவிப்பு நேற்று மாலை தான் தனக்கு கிடைத்தது.அதன் அடிப்படையில் உரிய விதிமுறைகளை பின்பற்றாமல் கூட்டப்படும் பொதுக் குழுக்கூட்டத்திற்கு தடை விதிக்க வேண்டும்" என்று மனுவில் கோரியிருந்தார். இதேபோல், பொதுக்குழு உறுப்பினர் வைரமுத்து என்பவரும் பொதுக்குழுவுக்கு தடை விதிக்க கோரி மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுக்கள் நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி முன் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, ஓபிஎஸ் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் குரு கிருஷ்ணகுமார், பொதுக்குழுவை நடத்த தடையில்லை என்று உத்தரவு பிறப்பித்துள்ள உச்ச நீதிமன்றம், பொதுக்குழுவை சட்டப்படி நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. அதேநேரம் வேறு ஏதேனும் கோரிக்கைகள் இருந்தால், உயர் நீதிமன்றத்தை



அணுகலாம் என உத்தரவிட்டுள்ளதாக வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, உச்ச நீதிமன்றம் பொதுக்குழுவை நடத்தலாம் என்று உத்தரவிட்டிருக்கிற நிலையில், உயர் நீதிமன்றம் என்ன உத்தரவு பிறப்பிக்க முடியும் என்று கேள்வி எழுப்பினார். அதற்கு ஓபிஎஸ் தரப்பில், ஜூலை 11ம் தேதி நடைபெறவுள்ள பொதுக்குழுவுக்கு தடை விதிக்க வேண்டும். ஏற்கனவே உயர் நீதிமன்ற இரு நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்த உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்ற தனிநீதிபதியை அணுகலாம் என்று உத்தரவிட்டுள்ளது அதன் அடிப்படையில், நீதிமன்றத்தை அணுகியுள்ளதாக வாதிட்டார்.

அப்போது இபிஎஸ் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண், ஜூலை 11ம் தேதி பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும் என்று, ஜூன் 23ம் தேதி நடந்த பொதுக்குழுவில் அறிவிக்கப்பட்டது. இதுதொடர்பான செய்தி அனைத்து பத்திரிகைகளிலும் வந்துள்ளது. மனுதாரர் ஜூலை 11ம் தேதி பொதுக்குழுக் கூட்டத்தை நடத்தக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்த நாள் வரை பொதுக்குழு தொடர்பான அறிவிப்பு வெளியிட்டு 13 நாட்கள் முடிவடைந்துள்ளது. எனவே, கூட்டம் தொடர்பாக நோட்டீஸ் கொடுக்கவில்லை என கருதக்கூடாது. மேலும் பொதுக்குழுவுக்கு தடை விதிக்கக்கூடாது.

இந்த மனு தொடர்பாக பதிலளிக்க கால அவகாசம் வழங்க வேண்டும். உயர் நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வில் ஏற்கெனவே தள்ளுபடி செய்த மனுவில் கேட்டிருந்த கோரிக்கைகளை மீண்டும் கோர முடியாது. மனுதாரர்கள் பொதுக்குழுக் கூட்டம் முடிந்த பின்னர், கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை எதிர்த்து வேண்டுமானால் வழக்கு தொடரலாம் என்று வாதிட்டார். அப்போது ஓபிஎஸ் தரப்பில், கட்சியின் இடைக்கால பொதுச் செயலாளரை தேர்வு செய்வதற்காகத்தான் இந்த பொதுக்குழு கூட்டப்படுகிறது. பொதுக்குழு கூட்டத்திற்கான அழைப்பிதழில், ஒருங்கிணைப்பாளர் இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் காலியாக இருப்பதாக கூறப்படவில்லை. இந்த நிலையில் பொதுக்குழுவை கூட்டியிருப்பது தவறு.

கட்சியின் விதிகளுக்குட்பட்டு உறுப்பினர்களால் முறையாக தேர்வு செய்யப்பட்ட பதவிக்காலம் என்பது 5 ஆண்டுகளாக இருக்கும் நிலையில் கட்சியிலிருந்து ஓ.பன்னீர்செல்வத்தை ஓரம்கட்ட முடியாது" என வாதிடப்பட்டது.இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி, ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் காலாவதியாகிவிட்டதா?, பொதுக்குழுவைக் கூட்டுவதற்கு தலைமைக்கழக நிர்வாகிகளுக்கு அதிகாரம் உள்ளதா?, எத்தனை நாட்களுக்கு முன் பொதுக்குழுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும்?, பொதுக்குழுவுக்கான அழைப்பிதழில் யார் கையெழுத்திடுவது என்பது உள்ளிட்ட கேள்விகளை எழுப்பி, எடப்பாடி பழனிசாமி தரப்பில் விரிவான பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு, விசாரணையை நாளை பிற்பகல் 2.15 மணிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளார்.

# "மியான்மரில் 2 தமிழர்கள் படுகொலை... மத்திய அரசு நீதியைப் பெற்றுத் தரவேண்டும்" சீமான்



மத்தியில் ஆளும் மோடி தலைமையிலான பாஜக அரசு இனியும் மெத்தனப்போக்கோடு அலட்சியமாக இருக்காமல், உடனடியாக மியான்மர் நாட்டில் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட இரண்டு தமிழர்களின் படுகொலைக்கு உரிய நீதியைப் பெற்றுத்தர வெளியுறவுத்துறையின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்திய மியான்மர் எல்லையில் அமைந்துள்ள மணிப்பூர் மாநிலம் தெங்னௌபல் மாவட்டத்தில் வசித்து வந்த மோகன், அய்யனார் என்ற இரண்டு தமிழ் இளைஞர்கள் தங்கள் நண்பர்களைக் காண்பதற்காக, மியான்மர் நாட்டு எல்லையிலுள்ள தமு என்ற இடத்திற்குச் சென்றபோது, அந்நாட்டு ராணுவத்தின் ஆதரவுப்பெற்ற ஆயுதக்குழுவினால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது. இரண்டு தமிழர்களும் தலையில் சுட்டுக் கொல்லப்பட்டு இறந்து கிடந்த காட்சிகள் உள்ளத்தை உறையச் செய்துவிட்டன. உலகில் எந்த நாட்டு மக்களுக்குத் துயர் நிகழ்ந்தாலும் தமிழர் மண் அழுதிருக்கிறது; ஆயினும் தமிழர்கள் எந்த நாட்டிற்குச் சென்றாலும் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் இன்றளவும் தொடர்கின்றன என்பது மிகுந்த வேதனைக்குரியது.

உயிரிழந்த இருவரில் ஓட்டுநரான மோகன் அண்மையில் திருமணம் முடித்தவர் என்பது மனத்துயரத்தை மேலும் அதிகரிக்கச் செய்கிறது. உயிரிழந்த மோகன் மற்றும் அய்யனார் குடும்பத்தினருக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அநியாயமாகக் கொல்லப்பட்ட இரண்டு தமிழர்களின் மரணத்திற்குக் காரணமானவர்கள் யார் என்பதைக் கண்டறிவதில் மியான்மர் அரசு தொடர் அலட்சியம் செய்வது, அந்நாட்டு அரசே கொலைக் குற்றவாளிகளைக் காப்பாற்ற முயல்கிறதோ என்ற ஐயத்தையும், தமிழர்கள் என்பதனாலேயே சுட்டுக் கொல்லப்பட்டனரா என்ற ஐயத்தையும் ஒருசேர எழுப்புகிறது.

மியான்மர் நாட்டுத் தூதரை அழைத்துக் கண்டிக்காமலும், அந்நாட்டு அரசிடம் உரிய விளக்கம் கேட்காமலும் இந்திய மத்திய அரசு அமைதி காப்பது வன்மையான கண்டனத்திற்குரியது. ஒருவேளை பாகிஸ்தான் நாட்டில் வடமாநில இளைஞர்கள் கொல்லப்பட்டிருந்தால் மோடி அரசு இப்படி வாய்மூடி அமைதி காத்திருக்குமா என்ற கேள்வி ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் எழுகிறது. குஜராத் மீனவர் ஒருவர் பாகிஸ்தான் கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்டபோது பாஜக அரசும், அதன் தலைவர்களும் எத்தகைய துரிதமாக எதிர்வினையாற்றினர் என்பதை யாரும் மறந்து விடவில்லை.

ஆகவே, மத்தியில் ஆளும் மோடி தலைமை யிலான பாஜக அரசு இனியும் மெத்தனப்போக்கோடு அலட்சியமாக இருக்காமல், தமிழர்களும் இந்த நாட்டின் அரசியலமைப்பை ஏற்று வாழும் குடிமக்கள்தான் என்பதைக் கவனத்தில் கொண்டு, உடனடியாக மியான்மர் நாட்டில் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட இரண்டு தமிழர்களின் படுகொலைக்கு உரிய நீதியைப் பெற்றுத்தர வெளியுறவுத்துறையின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

# தமிழகத்தில் கரோனாவுக்கு 5% பேர் மட்டுமே மருத்துவமனையில் அனுமதி; புதிய கட்டுப்பாடு விதிக்க வாய்ப்பில்லை: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

தமிழகத்தில் கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 5 சதவீதம் பேர் மட்டுமே மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதால் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கவேண்டிய அவசியமில்லை என சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.கோவை மதுக்கரையை அடுத்த குரும்பபாளையத்தில் சிஎஸ்ஆர் நிதி பங்களிப்புடன் ரூ.27 லட்சம் செலவில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலைய கட்டிடத்தை நேற்று திறந்து வைத்த அவர், அங்குள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் வருமுன்காப்போம் திட்ட முகாமை தொடங்கிவைத்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 95 சதவீதம்பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு, சுகாதாரத்துறை அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கும் பெரிதாக பாதிப்பு எதுவும் இல்லை. தற்போது பரவும் தொற்றானது குடும்பத்தில்ஒருவருக்கு வந்தால், அனைவருக்கும் பரவுகிறது.ஆர்டிபிசிஆர் பரிசோதனையில் 10 சதவீதத்துக்கும் மேற்பட்டோருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டாலோ, தொற்றால் பாதிக்கப்படுபவர்களில் 40 சதவீதத்துக்கும் மேல் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டால் மட்டுமே கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

ஆனால் தற்போது 5 சதவீதம்பேர் மட்டுமே தனியார், அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.எனவே,புதியகட்டுப்பாடுகள் விதிக்கவேண்டிய அவசியமில்லை.மதுரை எய்ம்ஸ் மருத்துவ கல்லூரியிலிருந்து, ராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரியில் 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். கட்டிடங்கள் கட்டுவதற்கு வரைபடம் இறுதி செய்யப்பட்டு, ஒப்பந்தம் விடப்பட உள்ளது. கட்டுமான பணிகள் தொடங்க 6 மாதங்கள் ஆகும். கோவை மாவட்டத்துக்கும் ஒரு எய்ம்ஸ் மருத்துவ கல்லூரி வேண்டும் என்றகோரிக்கையை மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறோம். கோவை போன்ற இடங்களில் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை வழங்க கூடுதலாக ஒரு பதிவு மையம் அமைக்கப்படும். ஏழை மக்கள் மற்றும் இந்த காப்பீட்டு திட்டம் குறித்து விழிப்புணர்வு இல்லாதவர்கள், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு காப்பீட்டு திட்டத்தை பயன்படுத்த வேண்டுமெனில், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர், சுகாதாரத்துறை இணை இயக்குநர், துணை இயக்குநர் போன்றவர்கள் அவர்களுக்கு காப்பீட்டு திட்ட அட்டை விரைந்து கிடைக்க உறுதுணையாக இருப்பார்கள்.

அரசு மருத்துவமனைகளில் பச்சிளங் குழந்தைகள் சிகிச்சை பிரிவில் எங்கெல்லாம் கேமராக்கள் இல்லையோ அங்கெல்லாம் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஜீவன் முக்தி 587

## பாதுகாப்பில்லாத தன்மையில் வாழ்வதே ஜீவன் முக்தி

பலபேர் என்னிடம் வந்து கேட்பதுண்டு "ஒன்பது வருஷம் பரிவிராஜக பாத்திரை செய்து எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பீர்கள். ஊர் ஊராகப் போய் பிச்சை எடுத்து சாப்பிடுவது கொடுமையான வாழ்க்கையாச்சே?" என்று.

நான் சொன்னேன் "ஐயா எனக்குத்தான் உங்கள் வாழ்க்கையைப் பார்த்தால் கொடுமையாகத் தெரிகிறது. என் வாழ்க்கை கொடுமையே கிடையாது. அது என்ன ஒரு ஆனந்தமான பாழ்க்கை என்று உங்களுக்குத் தெரியாது.

உங்களுக்கு எப்படி என் வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியவில்லையோ அதுபோல் உங்கள் வாழ்க்கையை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

காலையில் எழுந்திருத்தால் அதே வீடு அதே கார் அதே வீட்டுக்காரர். ஒரே வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு இருக்கிறீர்கள். காலையிலிருந்து இரவுவரை நீங்கள் பேசுகிற வார்த்தைகள்கூட நிலைப்படுத்தப்பட்டிருகிறது என்பதைக் கவனித்திருக்கிறீர்களா?

நீங்கள் காலையில் எழுந்த உடனே என்ன சொல்வீர்களோ அதைத்தான் ஒவ்வொரு நாளும் சொல்வீர்கள். வீட்டிலிருக்கும் அம்மா என்ன சொல்ல வேண்டுமோ அதைத்தான் தினந்தோறும் சொல்வார்கள்.

அதில் ஏதேனும் ஒன்றிரண்டு வார்த்தைகள்தான் புதிதாகச் சேரும் இல்லை நீக்கப்படும். அதுவும் வாரம் இருமுறைதான் புதிய வார்த்தை சேரும் அல்லது நீக்கப்படும்.

அதனால்தான் வீட்டிலிருப்பவர்கள் இப்பொழுதெல்லாம் பேசிக்கொள்வதுகூட இல்லை. தினசரி வாழ்க்கையைப் பார்த்தீர்கள் என்றால் நீங்கள் சொல்கிற வார்த்தைகள்கூட தயார் செய்யப்பட்ட வசனமாகி அச்சடிக்கப்பட்டதாகி விட்டது.



உங்கள் வாழ்க்கையில் கூட தேர்ந்தெடுக்கப்பட்ட வசனங்களைத்தான் பேசுகிறீர்கள். இதற்கு மேலே அதிகம் பேசி என்ன செய்யப் போகிறோம்? அட விடப்பா!" என்றிருப்போம். அது மட்டுமில்லாமல் நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் அவர்கள் என்ன பதில் சொல்வார் என்பதும் உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கும்.

அதனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் "நாம் சொல்லி அவர் பதில் சொல்வதை விட நாமே மனத்தில் சொல்லிக் கொள்ளலாம் ' என்று விட்டுவிடுகிறீர்கள். அதனால் பெரிய கொடுமை பாருங்கள் நீங்கள் பேசுகிற வார்த்தைகளைக்கூட நிரந்தரமானதாகச் செய்துவிட்டீர்கள்: தயார் செய்து விட்டீர்கள். அதில்கூட பாதுகாப்பற்ற நிலை போய்விட்டது.

நான் எப்போதும் பிரம்மச்சாரிகளிடம் சொல்வேன் "புதிது புதிதாகத் தவறு செய்யுங்கள் புதிது புதிதாகச் சண்டை போடுங்கள் வளருவீர்கள் ஆனால் புதிது புதிதாகச் சண்டை போடுகிற அளவிற்குக்கூட நீங்கள் யோசிப்பது இல்லை. ஒரே தவறை பெரிய அளவிலோ சிறிய அளவிலோ செய்வீர்கள். அவ்வளவுதான்.

உங்கள் வாழ்க்கையில் புதிது புதிதாகத் தவறு செய்ய வேண்டும் என்றால்கூட பாதுகாப்பில்லாமல் யோசனை செய்தாக வேண்டும்.

உங்களுடைய வார்த்தைகள்கூட தன்னிச்சையாக இருப்பதில்லை எல்லாமே முன்பே திட்டமிட்டதாக முடிவெடுக்கப்பட்டதாக பாதுகாப்பாக இருக்கின்றன. முழுமையான பாதுகாப்பற்ற தன்மையில் வாழ்வதுதான் "ஜீவன் முக்தி".

## கொடுத்ததே போதும்! எதுவானாலும் என்னிடமிருந்து எடுத்துக்கொள்

"கொடுத்ததே போதும்! எதுவானாலும் என்னிடமிருந்து எடுத்துக் கொள். எனக்காகக் கொடுத்தது போதும்! உனக்காக நான் எதையும் கொடுப்பேன் என்று வாழ ஆரம்பித்துவிட்ட ஒவ்வொருவரும் கோபிகைகளே!

வாழ்க்கையோடு இன்று முடிவு செய்யுங்கள் "வாழ்க்கையே! சுவாசமாக எனக்குள்ளே சென்று வெளியே வருகிற வாழ்க்கையே! ஜீவாதாரமே! இந்த உலகத்திற்கே உயிராக இருக்கிற இந்த உலகத்தை நான் உணர்வதற்கு ஆதார சக்தியாக இருக்கிற வாழ்க்கையே! இன்றிலிருந்து நீ எனக்கு எதுவும் தர வேண்டாம் '.

"என்னுடைய சுவாசமாக மலர்ந்து இருக்கிறாயே இது போதுமானத நீ என் உடலுக்குள்ளே உயிராக உலவுகிறாயே அது போதுமானது.

ஒரு பொருளைத் தொட்டால் என்னால் உணர முடிகிறது. அது போதுமானது. ஒரு பொருளை என்னால் பார்க்க முடிகிறது. அது போதுமானது. ஒரு பொருளை ருசிக்க முடிகிறது. அது போதுமானது.

"வாழ்க்கையே நீ ஏற்கெனவே அளவுக்கு அதிகமாகக் கொடுத்துவிட்டாய். இதற்குமேல் உன்னிடமிருந்து நான் கேட்பதற்கு ஒன்றுமே இல்லை. உன்னிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஒன்றுமே இல்லை நீ எதை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் என்னிடம் இருந்து எடுத்துக்கொள்.

"அனைத்தையும் என்னிடம் இருந்து எடுத்துக்கொள். உனக்காகவே அனைத்தையும் நான் விரித்து வைக்கிறேன் ' எனும் இந்த உணர்வை எடுத்துக்கொண்டுவந்து வாழ ஆரம்பித்தீர்களானால் அதுதான் "ஜீவன் முக்தி".

அந்த வினாடியே உங்களுக்கும் வாழ்க்கைக்கும் இடையே இருக்கிற உணர்வு கிருஷ்ணருக்கும் கோபியருக்கும் இடையிலே இருக்கிற உணர்வாக மாறி விடுகிறது. உங்களின் வாழ்க்கையே ராசலீலையாகத்தான் இருக்கும்.

ஹோலி பண்டிகை என்பது ராச லீலை என்பது ஏதோ சிறிது நேரம்.

கோலாட்டம் அடித்து கும்மியாட்டம் அடித்து கலரைப் பூசிக்கொண்டு ஆடுவது இல்லை. அதை அடையாளமாகச் செய்ய வேண்டும் அவ்வளவுதான். அது ராசலீலை கிடையாது.

வாழ்க்கையே ஞானத்தைத் தாண்டிய ரசமாக மாறுவதுதான் ராசலீலை. உலகம் முழுவதும் பக்தர்கள் ராசலீலையைக் கொண்டாடுகிறார்கள். ஹோலிப்பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள்.

அன்று மட்டும் ராசலீலையைக் கொண்டாடுவது ராசலீலை அல்ல. ஞானத்தைத் தாண்டிய ரசத்தை வாழ்விலே உணர்வதனால் வாழ்க்கையே ராசலீலையாக மாறுவது வாழ்வே ராசலீலையாக மாறுவது வாழ்வே ராசலீலையில் கரைவது வாழ்வே ராசலீலையில் மலர்வது.

இல்லையென்றால் வாழ்க்கைக்கும் நமக்கும் உள்ள உறவு சிசுபாலனுக்கும் சிசுபாலனோடு தங்கியிருந்த பெண்களுக்கும் இருக்கிற உறவு மாதிரிதான்.

வாழ்வுக்கு ஏதாவது தருவது என்பது வாழ்வுக்காகத் தம்மை மலர்த்துவது என்பது வாழ்க்கை எனும் பழத்திற்குள் சாற்றைச் சேர்ப்பதற்கான நீராக வருவதைப் போன்றது.

நீங்கள் தொடர்ந்து வாழ்க்கையில் இருந்து எதையாவது திருடிக்கொண்டே இருப்பது வாழ்க்கை என்கிற பழத்தின் சாற்றைப்பிழிந்து அதிலிருந்து திருடி சேர்த்து வைத்துக்கொள்வதற்குச் சமம். பலர் இருபத்தி நான்கு மணிநேரமும் இப்படியே முயற்சி செய்வீர்கள். வாழ்க்கை என்ன செய்யும்? உங்களுக்குக் கொடுக்கிற மாதிரி கொடுத்துவிட்டு உங்களோடு பொம்மலாட்ட விளையாட்டு விளையாடிக்கொண்டே இருக்கும்.

நீங்கள் வேறு எங்கிருந்து எடுத்துக்கொண்டு வந்தாலும் அதையும் சேர்த்து மொத்தமாக எடுத்துக்கொள்ளும்.

வாழ்க்கை உங்களோடு பொம்மலாட்டம் விளையாட்டு விளையாடுவதற்கு அனுமதிக்காதீர்கள். வாழ்க்கையோடு முழுமையாகத் திறந்து இருங்கள். இதற்கு என்ன அர்த்தம் என்றால் உங்களுடைய உணர்வு முழுவதையும் ஒரே நிலை நோக்கி ஒன்றாக்குங்கள்

எதை நம்புகிறீர்களோ...
அதை மட்டும் பேசுங்கள்
எதை நம்புகிறீர்களோ...
அதை மட்டும் செய்யுங்கள்
எதை நம்புகிறீர்களோ...
அதை மட்டும் வாழுங்கள்.

நம்புதல் என்றால் உங்களுக்குள் அனுபவமாக மாறியவற்றை மட்டும் வாழ்தல். நம்பாத விஷயங்களை வாழ ஆரம்பிப்பது என்பது சமூகக் காரணங்கள் கருதி போலி வாழ்வு வாழ்வது.

நம்பாத விஷயங்களை வாழ ஆரம்பிக்கிறவர் அனுபவமாகாத அனுபவங்களோடு வாழ்பவர் அது உளுத்துப் போன மூங்கில் மாதிரி. உளுத்துப்போன மூங்கில் புல்லாங்குழலாக மட்டும் அல்ல பாடை கட்டக்கூட உபயோகம் ஆகாது.

## புல்லாங்குழலா உளுத்துப்போன மூங்கிலா?

உளுத்துப்போன மூங்கில் உள் உலகத்தில் மட்டும் அல்ல வெளி உலகத்தில் ஜெயிப்பதற்குக்கூட உபயோகம் ஆகாது.

காலியான மூங்கில் புல்லாங்குழலாக உபயோகம் ஆகும். ஆனால் உளுத்துப்போன மூங்கில் பாடை கட்டக்கூட உபயோகம் ஆகாது. காலியான மூங்கில் இறைவன் கையில் புல்லாங்குழலாக இருக்கும். கனமான மூங்கில் பாடை கட்டி பிணம் தூக்க உபயோகம் ஆகும்.

அகங்காரம் இல்லாமல் போகும் பொழுது இறைவன் கையில் புல்லாங்குழலாக மாறிவிடுகிறீர்கள்.

கனமான மூங்கிலாக.. அகங்காரத்தோடு வாழும் பொழுது இந்த உடல் என்ற பிணத்தைத் தூக்கிக்கொண்டு போகிற "பாடை" கட்டுவதற்குத்தான் உபயோகம் ஆக வேண்டியிருக்கும். கடைசியில் உடம்பைத் தூக்கிக்கொண்டு வாழ்வதற்குக்கூட உபயோகம் இல்லாத நிலையில் வீழ்ந்து மாய்கிறீர்கள்.

ஆழ்ந்து புரிந்துகொள்ளுங்கள் ஆழ்ந்து உள்வாங்கிக்கொள்ளுங்கள். இந்த வாழ்க்கையோடு உங்களுக்கு இருக்கிற உறவை நேராக்குங்கள். உங்கள் உடல் வியாதிகள் மறைந்து உள்ளத்தின் வியாதிகள் மறைந்து உணர்வைச் சீரமைக்கும் '. கிராமத்து மக்களிடம் நான் பார்த்து இருக்கிறேன் உணர்வைச் சீரமைத்து வைத்திருப்பார்கள்.

மத்தியபிரதேசம் பக்கத்தில் ஒரு கிராமம் அருமையான ஒரு இடம். அந்தக் கிராமத்தில் இருக்கிற பழக்கம் என்னவென்றால் அந்த மக்கள் கனவில் யாரையாவது பார்த்துத் திட்டிவிட்டால் இல்லை ஏதாவது அவர்களுக்குத் தவறு செய்துவிட்டதாகக் கனவு கண்டால்கூட மறுநாள் அவர்கள் வீட்டிற்குச்சென்று அந்த நபரிடம் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டுவிட்டு வருவார்களாம்.

நமக்கு ஆச்சர்யமாக இருக்கலாம் "கனவில் செய்ததற்கெல்லாம் ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும்? நிஜத்தில் அவர்களுக்குத் தெரியக்கூட தெரியாதே" என்று. அதுபோல் செய்ய வேண்டி இருந்தால் தினம் எத்தனை பேர் காலில் விழ வேண்டி இருக்கும்?

அவர்கள் "நாம் கனவில் ஒரு தீங்கு இழைத்திருந்தாலும்கூட அதற்கும் நம் உணர்வற்ற நிலையில் அவர்கள் மேல் ஒரு வெறுப்பு எப்படியேனும் நினைவுப்பகுதியில் பதிந்துவிடும் என்றும். அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்று நமக்குத் தோன்றும் ' என்று நம்புகிறார்கள்.

நமது உணர்வற்ற நிலையில் ஏதாவது ஒருகோபம் இருக்கும். அதனால்தான் இந்தச்செயலை நாம் செய்கிறோம் ' என்ற மிகத் தெளிவான சத்தியம் அவர்களுக்கு புரிந்திருக்கிறது.

அதனால் உணர்வை நேராக்குவதற்காக அவர்களுடைய உணர்வைச் சீர்செய்து கொள்வதற்காக கனவில் யாரையாவது காயப்படுத்திவிட்டால்கூட அல்லது உடலாலோ மனதாலோ கனவில் ஒருவருக்கு வஞ்சம் செய்துவிட்டாலும்கூட நனவிலே சென்று அவர்களின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்பார்கள்.

அதுதான் நேர்கொண்ட உணர்வு நிமிர்ந்த வாழ்க்கை. பாரதி சொல்கிறார் "நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் திமிர்ந்த ஞானச்செருக்கும் ' என்றுஅது இதுதான்.

ஞானத்தினாலே வருகிற தெளிவு... அதுதான் வாழ்க்கையோடு நமக்கு இருக்க வேண்டிய உறவு... இதைத்தான் ஞானத்தைத் தாண்டிய ரசம் என்று சொல்கிறோம்.

## ராசலீலா தீக்ஷை

கோபியர்களுக்கும் கிருஷ்ணனுக்கும் எதுவும் கொடுக்க வேண்டியதும் வாங்க வேண்டியதும் இல்லை. அவர்கள் ஒரே உணர்வு என்பதை உணர்ந்து விட்டார்கள். ஆனாலும்கூட எளிமையோடு இருந்தார்கள்.

ஒரே உணர்வுதான் என்று உணர்ந்துகொண்டு எப்போதும் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்திருந்தால் அது ராசலீலையாக இருந்திருக்காது போரடிக்கும். கட்டாயமாகப் போரடிக்கும். அதில் ஒன்றும் சந்தேகமே இல்லை.

ஞானம் அடைவது எல்லோருக்கும் ஒன்றுதான் என்றாலும் "வெளிப்பாடு" வேறு வேறாக இருக்கும். புத்தர் நாற்பது வயதிற்குப்பிறகு ஞானம் அடைந்தார். சோர்வான உடல். ராசலீலைக்கான சக்தி வெளிப்பாடு நிகழ்வதற்கு அந்த உடல் தயாராக வேண்டிய நிலையில் இருந்தது.

அவர்களின் உடல் தயாராகிவிடும் பொழுது அந்த உடலின் மூலமாகப் பிறருக்குள் ஞானத்தை மலர்த்துகிற லீலை தொடங்கிவிடும். அவதார புருஷர்களைச் சந்தித்து ஆசிபெறுவதனாலும் தியான சிகிச்சை பெறுவதனாலும் சக்தி தீக்ஷை பெறுவதனாலும் நோய் குணமடைகிறது.

அவர்கள் உடலில் குணமடைதல் எப்படி நிகழ்கிறது? எப்படி இவை எல்லாம் நடக்கிறதென்றால் சின்ன வயதிலேயே ஞானமடைந்து உடல் அதற்காகத் தயாராகும் போதுதான் நிகழும்.

இடி இறங்கி வெளிப்படுவதற்கான ஓஒடிரான்ஸ்பார்மராக உடல் சின்ன வயதிலிருந்து யோகம் தியானம் மூலமாகத் தயாராக இருக்க வேண்டும். ஞான சக்தி உடம்பிற்குள் இடிபோன்று இறங்கும்போது அதைத் தாங்கும் ஒரு சக்தி டிரான்ஸ்பார்மராக உடல் இருக்க வேண்டும். உடலையே மாற்றுகிற மனத்தையே மாற்றுகிற சக்தி டிரான்ஸ்பார்மராக அந்த உடல் இருந்தாக வேண்டும்.

ஞானியின் உடல் ஒரு அனுசக்தி நிலையம் போன்று இருக்க வேண்டும். சிறு வயதிலேயே ஞானமடைந்து தீக்ஷை தருகிற அளவுக்கு சக்தியை வெளிப்படுத்துகிற ஒரு அனுசக்தி நிலையம் போன்று இருக்க வேண்டும்.

(தொடரும்...)

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1005



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## சோமாஸ்கந்த ஈஸ்வரம்
## (நயினை முத்துக்குமாரசுவாமிகள் கோவில்)
## நயினாதீவு, யாழ்ப்பாணம்

*"ஆறாதார நிலைகாட்டி அருமறையின் பொருள்காட்டி*
*பேறாக வென் சிந்தை தனை தேற்றித் திறன் தந்து*
*வேறாகவெனை ஏற்றிடுவாய் பாரத புராணம்*
*கூறாயோ மலர்துங்க சங்கரனின் அடைக்கலமே"*

சுவாமிகளுக்கு ஏற்பட்ட சம்பவம்போன்று, ரமணமகரிஷி வாழ்விலும் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. ரமணமகரிஷி சிறுவனாக இருந்தபொழுது, சரியாகப் படிப்பதில்லை என ரமணருடைய சகோதரர் கடிந்துள்ளார். "இது நல்ல விசயத்தை நாடிச் செல்கிறது. யாரும் தேடவேண்டாம்" என எழுதிவைத்துவிட்டு திருவண்ணா மலைக்குச் சென்றுவிட்டார். ரமண மகரிஷியின் துறவுக்கு சகோதரரின் பேச்சு, ஒரு காரணமாக அமைந்தது.

இவ்வாறான நிலையே சிறுவயதில் நயினாதீவு சாமியாருக்கும் எற்பட்டது. நயினாதீவு சுவாமிகளும் கடையைவிட்டு கால்போன போக்கிலே நடந்து குருவைத் தேடிக் கொண்டிருந்தர். கடையைவிட்டுச் சென்ற முத்துக்குமாரை எங்கு தேடியும் கிடைக்கவில்லை. எந்தக் காரியத்திற்கும் ஒரு காரணம் அமைய வேண்டும். இறைவனை நோக்கிய பயணத்திற்கான ஆரம்பமாக இச்சம்பவம் இடம் பெற்றது. துறவுக்கேற்ற பக்குவநிலை ஏற்படும்பொழுது, சிறுசம்பவங்கள் கூட துறவுக்குக் காரணமாக அமைந்துவிடும்.

அக்காலத்திலே இலங்கையிலிருந்து இந்தியாவிற்கும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் செல்வதில் எந்தக் கட்டுப்பாடுகளும் கடைப்பிடிக்கப்படவில்லை. இக்காரணத்தினால் இருநாடுகளுக்குமிடையிலான தலயாத்திரையில் பலரும் ஈடுபாடு கொண்டு, தரிசனம் செய்துள்ளனர். கடையைவிட்டுப் புறப்பட்ட முத்துக்குமார், இலங்கையிலுள்ள திருத்தலமெங்கும் தேடியலைந்து குருவைத் தேடினார். கிடைக்கவில்லை. இந்தியாசென்று திருத்தலங்களெங்கும் தனது குருவைத் தேடி அலைந்தார். இறுதியில் குருவைக் கண்டு தெளிந்தார்.

குருவிடம் சந்நியாசம் பெற்றார். அவரோடு பல வருடங்கள் தங்கி பக்குவநிலையை எய்தினார். சித்தர்களும், யோகிகளும் திருவண்ணாமலையில் அருணாசலக் குகைகளில் வாழ்வதாகக் கேள்வியுற்று, திருவண்ணாமலை சென்றார். அங்குள்ள குகைகளில் சில வருடங்கள் சமாதிநிட்டையில் சுவாமிகள் அமர்ந்திருந்தார்கள். பின்னர் ரமண மகரிஷியுடன் சிலகாலம் தங்கியிருந்து, பின் இலங்கை திரும்பினார். எல்லாவற்றையும் துறந்தநிலையில், பித்தர்போல ஈழத்துத் திருத்தலங்களெங்கும் சுற்றிச் சுற்றித் திரிந்தார்.

இவ்வாறான நிலையில் 1933 ஆம் வருடம், நயினை நாகபூசணி அம்மன் வருடாந்த உற்சவகாலத்தில் நயினாதீவு சென்றடைந்தார். கோயில்களில் உற்சவம் நடைபெறுங் காலத்தில், சாமியார்கள் வருவது வழக்கம். நீண்ட சடையுடன் காவியுடை தரித்த தோற்றத்தில் காணப்பட்ட நயினாதீவு சுவாமியாரை, எவரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஆலய உற்சவம் முடிந்தபின்னர் ஏனைய துறவிகள் சென்றுவிட, நயினாதீவு சுவாமிகள்மட்டும் அவ்வூரிலேயே தங்கிவிட்டார். இங்குள்ள ஆலயங்களில் தங்கியிருந்த காலத்தில் சுவாமியார், பல அற்புதங்களைக் காட்டியுள்ளார். ஆயினும் சுவாமியின் சிவயோகநிலையை எவரும் அறிந்துகொள்ளவில்லை.

இவ்வேளையில் நயினாதீவிற்கு தாயாரின் ஈமச்சடங்கிலே கலந்துகொள்ளவந்த திரு.க. இராமச்சந்திரா அவர்கள், சுவாமியை குருந்த மரத்தடியில்கண்டு, அவரை தனது ஞானகுருவாக வரித்துக் கொண்டார். பின்னாளில் சுவாமிகளின் வழிகாட்டலில் பகவான் ரமண மகரிஷியைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றார். நயினாதீவிலே தங்கி சுற்றிக்கொண்டு திரிந்த சுவாமிகள் யார் என்பதைத் தெரிந்துகொண்ட மக்கள், அவரை முத்துக்குமார சுவாமிகள் என்றே அழைத்தனர். ஆனால் அயலூரவர்கள் சுவாமியை, நயினாதீவுச் சாமியார் என்றழைத்தனர். ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக்கூடாது என்ற தார்ப்பரியத்தின் அடிப்படையில், சுவாமியின் பெயரைச் சொல்ல அஞ்சிய மக்கள், அவரது ஊரைக் குறிப்பிட்டு அழைத்தனர் என்றே கருதவேண்டும்.

சுவாமிகள் யாழ்ப்பாணத்திற்கு வரும்பொழுது, சிவலிங்கப்புளியடியில் அன்பரொருவர் வீட்டிலே தங்குவது வழக்கம். இங்கு பக்தர்களுக்குத் தரிசனம் கொடுக்கும் சுவாமியார், மக்களுடைய இடர்களைத்தீர்த்து பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். இவ்விடத்திலேயே ஆத்மஜோதி முத்தையா அவர்கள் மற்றும் முதலியார் குல.சபாநாதன் போன்றோர், சிவலிங்கப்புளியடியில் உள்ள வீட்டிலேயே, சுவாமியைத் தரிசனம் செய்துள்ளனர். நயினாதீவுச் சுவாமியாரைப்பற்றி அவரைத் தரிசித்த பலரும் தமது குறிப்புக்களில் குறிப்பிட்டுள்ளார்கள். சுவாமிகளிடம் காணப்பட்ட தெய்வபக்தி, ஞானம், தூய்மை, மன அடக்கம், இன்சொல், அருளோடுகூடியநோக்கு, எந்நேரமும் சிவசிந்தனை, துயருற்றோருக்குத் தேறுதல் சொல்லும் தன்மை என்பன, அவரை மக்கள் சென்றடைய ஒரு காரணமாக அமைந்தது. சுவாமிகள் தவக்கோலம் கொண்டவராக மிக எளிமையுடன் காணப்பட்டுள்ளார்.

சுவாமியின் அன்புள்ளத்திற்கு உதாரணமாக, அவரது பேச்சுக்கள் காணப்படும். தன்னை நாடிவரும் அடியவர்களை, தனது குழந்தைகள்போன்று வாஞ்சையுடன் அழைத்துப் பேசுவது சுவாமிகளின் வழக்கம். யாழ்ப்பாண வழக்கிலே, "மேனை" என்றழைப்பது ஆழ்ந்த அன்பின் அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது. சுவாமிகளும் ஒரு விடயத்தை ஒருவருக்கு விளக்கும்பொழுது, "அப்பிடியில்லை மேனை" என அன்போடு அழைத்து, விளக்கங்களைக் கொடுத்துத் தெளிவேற்படுத்தவார்.

*வளரும்...*



OM SHAKTI ASTROLOGER & PSYCHIC
PALM READING, FACE READING, HOROSCOPE
OVER 25 YEARS OF EXPERIENCE
PANDIT: GURUDEV
9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS
REMOVES BLACK MAGIC, JADOO, VODOO, OBEYA,
BUTTU, JINN & GIVES N100% PROTECTION



SPECIAL PRAYERS FOR FULL MOON & DARK MOON
Solves problems like Health, Love, Marriage, Job, Depression, Family, Husband-wife, Jealousy court etc
SPECIALIST IN BRINGING BACK LOVED ONES
REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION
No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE
100% Guarantee
He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy
PRIVATE & CONFIDENTIAL

ஆந்திர பிரதேஷ் வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit: GURUDEV** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்

- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

100% Guarantee
Private & Confedential

அகோரா சாமியார்களிடம் சென்று மந்திரங்கள் கற்று கொண்ட ஓம் பிரகாஷ்

2681 EGLINTON AVE E, SCARBOROUGH, ON, M1K 2S2
BRIMLEY & EGLINTON, NEXT TO CIBC BANK
4377-888-977

# இவ்வார ராசிபலன்

**08-07-2022 வெள்ளி தொடக்கம் 14-07-2022 வியாழன் வரையும்**


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'



Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377


**மேஷம்:** ஏற்றமும், மாற்றமும் நிறைந்த வாரம். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. வீண் செலவுகள் தவிர்க்கவும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. ஆரோக்கியம் சீராகும். அபார சம்பத்துக்கள் சேரும். இல்லத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் அதிகரிக்கும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். அரசியல்வாதிகள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். ஒரு சிலருக்குக் கௌரவ பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். திருமண பாக்கியம் கைகூடும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை பலப்படும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகள் வசூலாகும். பொருளாதாரம் உயரும். தொட்டது துலங்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப் பாதையை அடி எடுத்து வைப்பீர்கள். தீர்த்த யாத்திரை உண்டு. வழக்குகள் சாதகமாகும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. புதிய எண்ணங்கள் நிறைவேறும். நிதி பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரம் சிறக்கும். பணப்பிரச்சனை தீரும். தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு குறையும். சுயநலம் கூடும். உருண்டு பிரண்டாலும் கிடைக்காத செல்வம் இன்று கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,X

**ரிஷபம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கும் வாரம். அரும்பிய ஆசையும் விரும்பிய காதலும் நிறைவேறும். பூமியால் லாபம் அடைவீர்கள். பிள்ளைகளில் இருந்து வந்து துன்பம் விலகும். பதவி வாய்ப்பு தேடி வரும். பங்குத்தொழில் பெரிய முன்னேற்றத்தைத் தரும். கட்டிடத் தொழில் முன்னேற்றம் தரும். வருமானத்திற்கேற்ற செலவு ஏற்படும். பழைய பாக்கிகள் வசூலாகும். குதூகலமான நிலை காணப்படும். புத்திரர்களால் மேன்மையுண்டு. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். மருத்துவச் செலவுகள் ஏற்பட்டு மறையும். பொருளாதாரத்தில் உயர்வு ஏற்படும். ஆக்கப்பூர்வமான எண்ணம் மனதில் உதயமாகும். பணியாட்களின் ஆதரவு அதிக அளவு பெருகும். பாக்கியங்கள் அதிகரிக்கும். கோபத்தையும், வேகத்தையும் தவிர்த்து லாபத்தை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு உருவாகும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரும். அடுத்த வீட்டார்களின் ஆதரவு கிட்டும். பெருமிதத்தோடு காணப்படுவீர்கள். பிள்ளைகள் தேவைகள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஆடை, அணிகலன் சேர்க்கை உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். பணவரவு திருப்தி தரும். வணிகத்தொழில் லாபம் தரும். திருஷ்டிகள் விலகும். மற்றவர்களால் மேன்மை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,R

**மிதுனம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். பட்டம் தேடி வரும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச்செலவுகள் அதிகரிக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் ஒன்று தாமதமாகக் கூடிய காலம். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உடல்பொலிவு கூடும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். முன்னேற்றங்கள் அதிகரிக்கும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணம் உதயமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். வம்ச விருத்தியாகக் கூடிய காலம். கலகலப்பான வாரமாக அமையும். பெண்களுக்கு யோகம் கூடி வரும். உறவினர் உதவி செய்ய முன் வருவர். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். விளையாட்டுத்துறை லாபம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். அரசமரப் பிரார்த்தனையால் ஆயுள் விருத்தி கிடைக்கும். பணமும், தனமும் பக்குவமாக கிடைக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். தெரியாத நபர்கள் மூலம் உங்களுக்கு ஆதாயம் வரும். மங்களச் செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாலம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,S

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் கூடும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மகான்களின் சந்திப்புக் கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். சுறுசுறுப்பு அதிகமாகும். மாலை நேரத்தில் இனிப்பான செய்தி வரும். வாசனை திரவியத்தில் ஆர்வம் கொண்டவர் நீங்கள். தெரியாத நபர்கள் மூலம் உங்களுக்கு ஆதாயம் வரும். மங்களச் செய்தி வரும். பெருமையாக நிகழ்வுகளை அருமையாகச் சந்திப்பீர்கள். மன சந்தோஷம் கூடும். உடல்நலம் கவனம் தேவை. வாழ்த்துக்கள் வந்து சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வெளிநாட்டுப் பயணம் திருப்தி தரும். பேச்சில் துணிவு ஏற்படும். நிதி நிலைமை சீராகும். அரசுப்பணியில் மாற்றம் வரும். தீய எண்ணங்கள் விலகும். கலைத்தொழில் உயர்வு உண்டு. விவசாயம் விளைச்சல் தரும். அனுகூலமான போக்கு நிலவும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். பிரார்த்தனையால் பலன் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். பணவரவு அதிகரிக்கும். சகோதரியால் நன்மை உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் அதிக மதிப்பெண்கள் எடுப்பார்கள். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். சுபகாரியம் கூடி வரும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூகமான தீர்வு வரும். உடல் உபாதை நீங்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 8,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,W

**சிம்மம்:** சாதகமான சூழ்நிலை அமையும் வாரம். தொலைதூரப் பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபாரத்தில் மந்த நிலை அகலும். சொந்த தொழிலமையும். கவலைகள் அடியோடு விலகும். யோகப் பலன்கள் கிடைக்கும். கிள்ளிக் கிடைக்கும் யோகத்தால் துள்ளிக் குதிப்பீர்கள். புதிய சொத்துக்கள் சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். வெளியூர் பயணம் லாபம் தரும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்தக் காரியம் தடைப்படும். எதிலும் கவனம் தேவை. கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். திடீர் தனவரவுகள் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். இனிய செய்தியால் மனம் மகிழும். சோதனைகள் விலகி, சாதனையான எண்ணம் நிறைவேறும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. உஷ்ண நோய் ஏற்பட்டு மறையும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. நிதிப்பற்றாக்குறை நீங்கும். கலைத்தொழில் லாபம் தரும். பொறுமையுள்ள பெண்களுக்கு பெருமை சேரும் அருமையான காலம். அமைதியாக இருப்பது நல்லது. உடல் உபாதைகள் ஏற்பட்டு மறையும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். போட்டி, பொறாமைகள் விலகும். புத்திரர் வழியில் கவலை ஏற்படலாம். புதிய நட்பை தவிர்க்கவும். பணியில் நிம்மதி குறையும். திடீர் செலவுகள் உண்டாகும். உத்தியோக மாற்றம் உண்டு. காலணிகள் காணாமல் போகும். காதல் எண்ணம் உருவாகும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மறைமுக தொல்லை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,3,4
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Y

**கன்னி:** ஆசைப்பட்ட பொருட்கள் வாங்கும் வாரம். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலதிகாரியின் ஆதரவு உண்டு. கால்நடைகளால் மேன்மை உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. வேண்டாத நபர்கள் விலகிடுவர். விவேகமான காலமாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயம் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நண்பரால் பண விரயம் உண்டு. புதிய சிந்தனைகள் உருவாகும். கலையார்வம் கூடும். கேட்ட இடத்தில் கடன் கிட்டும். காரியத்தடை அகலும். இல்லத்தில் மகிழ்ச்சியுண்டு. போட்டிகள் உருவாகி மறையும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். நல்ல வாய்ப்புக்கள் தேடி வரும். வருமான வரி தொல்லை உண்டு. பொறியியல் துறை லாபம் தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். கடன் பிரச்சனை முற்றிலும் தீரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் கூடும். வெளியூர் பயணம் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் கூடும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப்பொலிவு கூடும். நேரம் காலம் பார்க்காமல் உழைப்பீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாளைய பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V

**துலாம்:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரம் லாபம் தரும். முன் கோபம் தவிர்க்கவம். பயணம் பலன் தரும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்ற இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். உருண்டு பிரண்டாலும் கிடைக்காத செல்வம் இன்று கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். அரசு வழி ஆதாயம் கிட்டும். சகோதரியினால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். எதிரிகள் உதிரியாவார்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். முடியாத விஷயங்களைக் கூட தெளிவாகச் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். கடல் கடந்த பயணம் லாபம் தரும். சுறுசுறுப்பு அதிகமாகும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். கமிஷன் தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்களின் கல்வியில் உற்சாகம் அடைவார்கள். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் கூடும். வியாபாரம் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,L

**விருச்சிகம்:** வறுமைகள் விலகும் வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகளின் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மரியாதை உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை திறன் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை குறையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் கூடும். மரபை மீறிப் பேசிய உறவுகள் மனதாரப் பாராட்டுவார்கள். அணிகலன் சேர்க்கையுண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபசெய்தி வரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். அறிமுகம் இல்லாதவர் மூலம் ஆதாயம் கிடைக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். செல்வமும், புகழும் சேரும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்சு தேவதை, அதிர்ஷ்ட எண்: 8,5,9,3
அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,X

(தொடர்ச்சி ___ பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(___ பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** புதுமைகள் நிறைந்த வாரம். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வேலைப்பளு குறையும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். உடன் பிறப்பால் உதவி உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். சுபகாரியம் கைகூடி வரும். சொத்துச் சேர்க்கை உண்டு. தனித்து நின்று ஜெயித்துக் காட்டுவீர்கள். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். எண்ணிய காரியம் கைக்கூடும். ஏற்றங்கள் அதிகரிக்கும். கட்டுமானப் பணியில் உள்ளவர்களுக்கு கௌரவம் கூடும். சுயத்தொழிலில் கவனம் தேவை. பழையக்கடன் வசூலாகும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். வாகனச் செலவு ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். விருப்பமான தொழிலமையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,R




**மகரம்:** பயணம் லாபம் தரும் வாரம். பக்கத்து வீட்டுப் பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி தேடி வரும். சந்தர்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் பளிச்சிடும். உறவினர் வருகை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பயன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவுகள் தடைப்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கண்ணாடித் தொழில் ஏற்றம் தரும். திருப்பங்கள் ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். கனவு பலிதமாகும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டாகும். தொல்லை தந்தவர் விலகிடுவர். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். சகோதர வழியில் சகாயம் கிட்டும். நடுத்தரமான நன்மைகள் கிடைக்கும் காலம். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். சேமிப்பு உயரும். விவாத முயற்சி வெற்றி பெறும். குடும்பத்தில் குதூகலம் தாண்டவமாகும். ஆசைகள் பூர்த்தியாகும். பெண்களின் கௌரவம் உயரும். இயந்திர பணியில் நிதானம் தேவை. சொல்லில் கவனம் தேவை. ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். இனியச் செய்தியால் மனம் மகிழும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 4,3,2,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும் வாரம். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத் திறமை கூடும். அரசாங்க அனுகூலம் உண்டு. நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். பழையக்கடன் ஒழியும். இடமாற்றம் நன்மை தரும். சாதனைகள் நிகழ்த்தும் காலம். தாய் வழி உறவால் நன்மைகள் உண்டாகும். வியாபாரத்தில் விரயங்கள் கூடும். கடன் தொல்லை குறையும். கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதிகமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். தொழில் வழி தொல்லை குறையும். கஷ்ட காலம் விலகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். பொருளாதார வளர்ச்சி பெருகும். மகிழ்வான நிகழ்வுகளை சந்திப்பீர்கள். கலை ஆர்வம் பெருகும். விபரீதப் போக்கு மாறும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். சொல்லில் கவனம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். பாராட்டுக்கள் தேடி வரும். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு கைமேல் பலன் கிடைக்கும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை தீர்வுக்கு வரும். செயல்திறமை வெளிப்படும். வருமானம் உயரும். காதலில் கண்ணியம் கூடும். நெருக்கடிகள் நீங்கும். அரசியலில் புகழ் சேரும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கர்ஜனையோடு வலம் வருவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,J




**மீனம்:** போட்டிகள் உருவாகி மறையும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். உத்தியோகத் திருப்பம் ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி உருவாகும். கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கக் கூடிய காலம். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் தனவரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அடிப்படை தேவைகள் நிறைவேறும். ஆரோக்கியம் கூடும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. சுபகாரிய செய்தி வரும். தகுதியோடும், மிகுதியோடும் வலம் வரக்கூடிய ஜெயமான காலம். அனுகூலமான போக்கு நிலவி வரும். மன சந்தோஷம் கூடும். சினத்தைத் தவிர்ப்பது நல்லது. புத்தாடை ஆபரணச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். கடனால் பிரச்சனை வரும். வெற்றிகள் குவியும். ஆன்றோர் வாழ்த்துக் கிட்டும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். சாதனை நிகழும் காலம். உடல் உபாதை தீரும். வேற்று மதத்தினரால் உதவிகள் கிட்டும். மாற்று எண்ணங்கள் உதயமாகும். தோற்றம் பொலிவு கூடும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். உறவினர்கள் பாராட்டுக் கிட்டும். பழைய நட்புத் தொல்லை தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 4,5,7,9
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம் (சிகப்பு), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P



# கடந்தவையும் கடப்பவையும் (38)

- உமா மோகன் -

*எட்டியெனும் பட்டம் கொண்ட சாயலனுக்கோ*
*தட்டுப்பாடு ஏதும் இல்லாச் செல்வ வளம்*

*வந்தவரை வரவேற்று வருபவரை வழிபார்த்து*
*எந்தவேளை வந்தபோதும் உணவளித்து உபசரிக்க*

*நன்மனையாள் வாய்த்திருக்க அவள் தயவால் - குரங்கும் கூட*
*இம்மையிலும் மறுமையிலும் பெருவாழ்வு பெற்றிருக்க - என*

*பெருங்கதையில் குறுங்கதையாய் இளங்கோவும் - இதை*
*அடைக்கலச் சிறப்புக்காய் எடுத்து உரைக்க*

*எல்லையில்லா மதிப்புடனே படிக்கின்றோம் பல தடவை - பலருக்குள்ளும்*
*சொல்லவொண்ணா காலகட்ட அடைக்கலக் கதைகள் பல கிடையாகக்*
*கிடக்கின்றன - நிச்சயமாய்*

*பல கதைகள் சிலரிடத்தில் ஒழிந்திருக்கும் - அதில்*
*சில கதைகள் பலருக்குத் தெரிந்திருக்கும்*

*அவ்வகையில் இதுவும் ஒன்று*

*அப்போ,*

*எண்பதுகளின் இறுதிப் பகுதி ஆரம்பம்*
*இன்னும் அங்கு வரவில்லை சீருடை - நன்கு*

*களைத்து ஓடி வருகிறார்கள் இருவர்*
*இறுக்கிக் கட்டிய கிப் சறமும் - இடுப்பில்*

*செருகிய கைக்குண்டுகள் பொம்மலாக வெளித்தெரிய*
*செருப்பும் இல்லாக் காலினராய் - கைகளில்*

*குத்தணவாய் இரண்டு வானைநோக்கிப் பார்த்தவாறு*
*அக்காலத்தில் அவரிடத்து இருந்த அதியுயர்*

*சக்தி வாய்ந்த ஆயுதங்களில் அதுவுமொன்று - எங்கும்*
*நிற்காமல் வந்ததாலோ அக்களைப்பு அவர்களிடம்*

*இளைப்பு ஆற எனவே தட்டுகிறார்*
*கதவை*

*தண்ணீர் என்றார் ஒருவர் - இல்லாள்*
*தண்ணீர் எடுக்க உள்ளே சென்றாள்*

*பரந்த வெளி முற்றத்தின் நடுவினிலே*
*அமைந்த ஒரு வீடு அது - முற்றத்தில்*

*மோட்டார் கார் ஒன்றும் வெறுமையாக*
*கேட்பார் அற்று நிற்பது போல்*

*தண்ணீர் கேட்டவர் அதன் அருகில்*
*தண்ணீருடன் அவ்வீட்டு மனையாள் அவரருகில்*

*பக்கத்து நாய்களும் குரைப்பதில் மும்முரம்*
*சப்பாத்துக் கால்களின் தடதட சத்தம்*

*வீட்டுத்தலைவர் வெளியே பார்க்கிறார்*
*கூட்டாக அணிவகுத்த கூட்டத்தைக் காண்கின்றார்*

*வீட்டுக்குள் நிற்பவர் வெளியே வருவரேல்*
*மாட்டுப்படுவர் சண்டையும் உறுதி என்றதால்*

*தலைவன் குறிப்பு அறிந்தவர் வண்டிக்குட்புகவே*
*தலைவி குரலுக்கு பிள்ளைகளும் வெளியே வரவே*

*கூடி எல்லோரும் வீட்டிற்கு வெளியே நின்றனர் - அவர்களைத்*
*தேடித்தான் வந்தாரோ தெரியாது*

*தடதட சத்தத்தில் வருபவர் விழிகளைப் பார்க்கையில்*
*படபட என்றே அடித்தன நெஞ்சங்கள்*

*வந்தவர் பாசையும் நன்றே தெரிந்ததால்*
*வந்ததில் பெரியவரை வழிமறித்து கதை கொடுக்கிறார் - தலைவர்*

*அப்பாவி அக்குடும்பத்தர் அறிமுகப்படுத்துகிறார்*
*அங்கே நின்ற அத்தனை பேரையும்*

*என் குடும்பம் இது என்றார் - எமையன்றி*
*இங்கு யாரும் இல்லை என்றார்*

*எங்கிருந்து வந்ததோ சங்கடம் சிறிதுமில்லா*
*அங்கவரின் உறுதியான பேச்சு - அங்கு*

*வந்தவர் பலரும் மதலிற்கு மேலாய் - கழுத்தை*
*நீட்டியே பார்க்க ஒருவர் மட்டும்*

*உள்ளே சென்று வண்டிக்கு அருகில்*
*மெள்ள நெருங்கவே பெரியவர் குரல்*

*வா வா என்றிட, போன வழியே*
*மிக விரைவாய் திரும்பினார் - பின்*

*கூடவே தன் சேனையோடு போயினார் - அன்றவர்*
*கூடவோரடி எட்டியே வைத்திருப்பார் ஆயின்*

*எதிர்பாரா அடைக்கலக் கதையொன்று*
*தெரியாமற் போயிருக்கும்...*

**(தொடரும்)**




16

## ஐ.சி.டி (ICD) என் தோழன்

குளிர் மிகுந்த பெரிய அறை, சோதி மயமாய் மின்விளக்குகள். ஆடை முற்றாகக் களையப்பட்டு கோவணத்துண்டுடன் முருகக் கடவுளின் திருக் கோலத்தில் மீண்டும் நான்.

ஏனிப்படிக் கோவணத்துடன் தண்டு கொண்டு இங்குற்றோர் ஆண்டியானாய்...???

என்ற சுந்தராம்பாள் பாடலை இதுபோன்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் திருப்பி சொல்லமுடியாது. கோவணத்தை திருப்பித் திருப்பி சொல்லுவது நாகரிகமும் இல்லை.


ஆனால் என்ன செய்வது? காட்சி அப்பிடி. அந்தக் கேள்விக்கு விடை என் இதயமே நீதான். முருகக் கடவுள் வேலொடு கையை உயர்த்தி அபயமளித்தபடி இருப்பார். ஆனால் நானோ படுத்தபடி அபாயம் இல்லாமல் அபயம் தாருங்கள் என வேண்டியபடி... எனக்கு அபயமளிக்கும் மருத்துவ நிபுணர்கள் நீல அங்கிகளில் மிகக் கம்பீரமாக அழகிய தாதியர்கள் புடைசூழ நிற்கின்றார்கள்.

பொதுவாக ஒரு சத்திர சிகிச்சை மேற்கொள்ளும்போது அதன் தேவைக்கும் தன்மைக்கும் ஏற்ப மயக்க மருந்து (Anesthesia) கொடுப்பார்கள். சிலவேளை தேவைக்கேற்ப அரை மயக்க நிலைக்கு (Sedatation) மருந்தை கொடுப்பார்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் அந்த உடல் பகுதிக்கு மட்டும் (Local Anesthesia) விறைப்பை உண்டாக்குவார்கள்.

பொதுவாக பல்வலி வந்து பல்லுப் பிடுங்குவதற்கு உள்வாயின் முரசுப் பகுதியில் அந்தப் பகுதியை மட்டும் விறைக்க செய்யும் மருந்தை ஊசி மூலம் ஏற்றிய அனுபவம் பலருக்கும் இருக்கும். மகப்பேற்று சத்திரசிகிச்சையில் அந்த வயிற்றுப் பகுதியோடு இடுப்புக்கு கீழ் முற்றாக விறைக்க செய்து சத்திரசிகிச்சை செய்து குழந்தையை வெளியில் எடுப்பார்கள்.

என் இதயமே, எனக்கு என்ன செய்யப் போகிறார்கள்? அதை அதற்கென இருக்கும் விற்பன்னர் (Anesthesiologist) விளங்கப்படுத்தினார்.

என்னை அரைகுறை மயக்கநிலையில் வைத்து அதை செய்யப் போவதாகவும் வெட்டும் பகுதியை விறைக்க செய்வதாகவும் இடது பக்கமாக நெஞ்சின் மேல் பகுதியில் வெட்டி ஒரு பை மாதிரி (Pocket) செய்து அதற்குள் அந்த இயந்திரத்தை (Defibrillator) வைக்கப் போவதாகவும் அவ்வாறு வைக்க முந்தி இதயத்துக்குள் செல்லும் இரத்தக் குழாயின் ஊடாக இரண்டு வயர்களையும் இதயத்தின் இரண்டு (Right Artrium - Ra & Right Ventricle -Rv) அறைகளுக்கும் கொஞ்சம் கொஞ்சமாக அனுப்பி அதன் பின் இந்த இயந்திரத்துடன் (Defibrillator) இணைப்பை ஏற்படுத்தி அதன்பின்னர் அதை அந்த நெஞ்சுப் பைக்குள் செலுத்தி அமத்தி வைப்பதாகவும் தெரியப்படுத்தினார்கள்.



சொல்லுதல் அவர்க்கு எளிது. இப்பிடி என்னைப்போல எத்தினை பேரைப் பார்த்திருப்பினம்...? மருத்துவப் படிப்பென்பது அப்பிடி என்ன லேசுப்பட்ட ஒரு படிப்பா? உடலை வெட்டிப் பிரித்து உயிரைச் சரியாய்ப் பொருத்தி வைப்பது எவ்வளவு பெரிய வேலை?

மருத்துவ விஞ்ஞானத்துக்கும், என்னருகே அப்போது நின்றிருந்த அனைத்து மருத்துவத்துறை மாமனிதர்க்கும் நன்றியோடும் சொல்லாத வணக்கத்தோடும் நான் ஒரு கேள்வியைக் கேட்டேன்.

"நீங்கள் வெட்டும்போது எனக்கு நொந்தால் நான் அதை உங்களுக்கு
எப்பிடித் தெரிவிப்பது?"

ஏனென்றால் ஆடாமல் அசையாமல் கட்டிப் போட்டதுபோல் அந்த ஒடுக்கமான படுக்கையில் என்னை அப்போது வைத்திருந்தார்கள். என் கண்களையும் ஏதோ ஒன்றால் மூடி விடப்போவதாக முன்கூட்டியே சொன்னதாகவும் ஞாபகம்.

என் வாய் கட்டப்படாததால் அந்தக் கேள்வியைக் கேட்டேன். இதயமே, உன்னோடும் இதுபோன்ற இயந்திரங்களோடும் வயர்கள் மூலம் இணைப்பை ஏற்படுத்துவதில் வல்லமை மிகுந்த அந்த தலைமை மருத்துவர் - சத்திரசிகிச்சை நிபுணர்.

"வலது கையை உயர்த்திக் காட்டும்' (Raise Your Right Hand) என்று சிரித்தபடி சொன்னார். ஆஹா அது ஒரு தெய்வீகச் சிரிப்பு. இப்பொழுதும் நினைவில் இருக்கிறது. மயக்குவதில் மன்னவர் அதனை செய்தார்... வெட்டு தொடங்கிவிட்டது. ஊப்ஸ்... நோவு தெரிந்தது. சத்தத்தோடு என் வலது கையை உயர்த்தினேன். மயக்கும் மன்னவர் மீண்டும் அந்த மயக்கமருந்தை சுவாசத்துடன் வழங்கினார்.



அவ்வளவுதான் அதன்பிறகு... அதன் பிறகென்ன... நான் கண் விழித்தபோது பழையபடி ஒரு அறையில்... என் முன்னால் என் துணைவியார் "யாமிருக்கப் பயமேன்" என்பதுபோல் தோன்றினார்.

அவரது திருமுகத்தில் மலர்ச்சி இருந்ததை உணர எனக்கு நேரமெடுத்தது. இதுபோன்று மயக்க மருந்து தந்து அதிலி ருந்து மயக்கம் தெளிந்து மீள எழுவதும் ஒரு அலாதியான அனுபவம்தான். இரண்டு மூன்று முறை இந்த அனுபவம் எனக்கு கிடைத்தது.

*உறங்குவது போலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு*

என்ற குறள் வாழ்க்கை நிலையாமைக்கு வள்ளுவரால் சொல்லப்பட்டது. சாவு என்பதும் ஓர் உறக்கந்தான். இந்த மயக்க மருந்து சிலவேளை ஆளை முடித்துவிடுமா என்றொரு பயமும் உண்டு. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது பழமொழி. ஆனால் இந்த மயக்க மருந்து பொதுவில் ஆபத்தில்லாதது.

எல்லாம் கணக்காக செய்கிறார்கள். வயது, உடல் ஆரோக்கிய நிலைமை, ஒவ்வாமை போன்ற பல்வேறு விடயங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டு தேவையான அளவுக்கே இந்த மயக்க மருந்தை அந்தத்துறைசார்ந்த மருத்துவர்கள் வழங்குகிறார்கள் என்பதால் பயப்படத் தேவையில்லை.

1846இல் முதன் முதலில் இது போன்ற மயக்கமருந்தை பல்லுப் பிடுங்குவதற்காக டாக்டர் வில்லியம் தோமஸ் கிரீன் மோர்ட்டன் (William Thomas Green Morton) உபயோகித்து வெற்றி கண்டார் என்று சொல்லப்படுகிறது. அந்த வெற்றியிலிருந்து நோயாளருக்கு சத்திரசிகிச்சை செய்யும் போது வலி தெரியாமல் இருக்க மயக்க மருந்து பயன்படுத்தப்படுகிறது. இது போன்று மயக்க மருந்தின் பின் தெளிந்து எழுவது மூளைக்கு ஒரு புத்துணர்ச்சி கிடைத்தது போல.

"இன்று புதிதாய்ப் பிறந்தோம்" என்று பாரதி சொன்ன புத்துணர்வு அது என்றும் சொல்லலாம். அளவுக்கதிகமாக மது அல்லது போதை மருந்தை உட்கொண்டோர்க்கும் இதுபோன்ற ஒரு அனுபவம் கிடைக்குமோ தெரியாது.

ஆனால் என் இதயமே, அது எவ்வளவு கெடுதியானது என்பதைத் தெரிந்து கொண்டும் பலர் செய்கிறார்களே. அவர்கள் நோயையும் சாவையும் வலிந்து பெற்றுக் கொள்ளும் மானுடர்கள்...

இதுவே உனக்கும் எனக்கும் ஆன கவலை. மயக்கம் தெளிந்து கண் விழித்தபின் நெஞ்சில் வெட்டிய இடத்தில் அதன்மேல் கனதியான ஒரு கருங்கல் அம்மியை வைத்துக் கட்டி இருக்கிறார்களோ என்று நினைக்கக் கூடிய ஒரு வகை வேதனையையும் உணர்ந்தேன்.

நெஞ்சில் டீவிப்பிரிலேட்டர் (Defibrillator)ஐ வைத்த இடத்தில் அது தோலுக்குள் தசைகளோடு நன்கு அமுங்குவதற்காகவே கல்லு போன்ற ஒரு பாரத்தை அதிலே வைத்திருந்தார்கள். அதோடு பல மணித்தியாலங்களுக்கு அதனை அப்படியே வைத்திருக்க வேண்டும் என்ற ஒரு தண்டனையையும் விதித்தார்கள். அதை அப்படியே வைத்துக்கொண்டு படுத்திருப்பது என்பது பெரும் வேதனையை தந்தது.

என்ன செய்யிறது! இதயமே எல்லாவற்றையும் உனக்காக அனுபவித்தேன்.





# கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

**Reduce your debts upto 80%**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

**55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4**

**Tel: 647-274-2832**
**Fax: 416-332-0914**
www.creditrecoverycanada.com



ஓம் சக்தி துணை

# ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்

## சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்

585 MIDDLEFIELD RD, UNIT 1 & 2, TORONTO (MIDDLEFIELD & FINCH)
TEL: 416 535-6560

அம்மன்
## பிரம்மோற்சவ பெருவிழா 2022

அம்மன் திருவிழா
(22.07.2022 வெள்ளி முதல் 10.08.2022 புதன் வரை)



திருவிழா நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 22.07.2022 | வெள்ளி நண்பகல் 11மணிக்கு கொடியேற்றம் |
| 29.07.2022 | சதுர் சஷ்டி உபசாரபூஜை - வெள்ளி மாலை 7:00 மணிக்கு (64 உபசாரம்) |
| 31.07.2022 | மாம்பழத் திருவிழா - ஞாயிறு காலை 10 மணிக்கு<br>ஆடிப்பூரத் திருவிழா ருதுசாந்தி - மாலை 7:00 மணிக்கு |
| 02.08.2022 | மஞ்சத் திருவிழா - செவ்வாய் மாலை 8 மணிக்கு |
| 04.08.2022 | வேட்டை திருவிழா - வியாழன் மாலை 6 மணிக்கு |
| 05.08.2022 | சப்பரத் திருவிழா - வெள்ளி மாலை 8 மணிக்கு<br>வரலக்சுமி விரதபூஜை - மாலை 6 மணிக்கு |
| 06.08.2022 | தேர்த்திருவிழா - சனி காலை 11:00 மணிக்கு |
| 07.08.2022 | தீர்த்தத் திருவிழா - ஞாயிறு காலை 11 மணிக்கு<br>கொடியிறக்கம் - மாலை 8 மணிக்கு |
| 08.08.2022 | பிராயச்சித்தம் அபிஷேகம் - காலை 9 மணிக்கு<br>திருக்கல்யாண உற்சவம் - மாலை 8 மணிக்கு |
| 09.08.2022 | பூங்காவனம் - செவ்வாய் மாலை 8 மணிக்கு |
| 10.08.2022 | வயிரவர் மடை புதன் மாலை 7 மணிக்கு |



தேர்த்திருவிழா
சனி காலை 11:00 மணி
06.08.2022

என்றும் இறைபணியில்
ஆலய தர்மகர்த்தா

## அனைவரும் வருக – அன்னையின் அருள் பெருக

உங்களை வரவேற்க
நாங்கள் ஆவலோடு இருக்கிறோம்!

# வந்து விட்டது!!

1%

குறைந்த வட்டி விகிதம்
தங்கத்தின் மீது கடன்
Lowest Interest in GTA

# எங்களது புதிய கிளை ஜூலை 4 முதல் உதயம்!

# Pawn Bank Inc.

Your Satisfaction is Our Success

# உடனடி நகைக்கடன்

**இந்த சலுகை: (FINCH & MCCOWAN)**
**1571 SANDHURST CIRCLE #159D,**
**SCARBOROUGH - M1V1V2.**
**மட்டும் பொருந்தும்**

# தொடர்புக்கு: 416-754-7198

முன்னணி நிதி நிறுவனங்களுடன்
இணைந்து பணியாற்றுகிறோம்

**KANAGAAMBIKAI PAWN BROKERS: (BRIMLEY & EGLINTON) 2613 EGLINTON AVE E, TORONTO - M1K2S2. CALL US: 416-269-7198**

# மரண அறிவித்தல்

மலர்வு: 27-01-1978
உதிர்வு: 10-06-2022



## திருமதி. ஜெயதாசன் தங்கேஸ்வரி (சாந்தி)

(புளியங்கூடல்-யாழ்ப்பாணம் (பிறந்த இடம்)
Bømlo, Norway London, United Kingdom)

**யாழ். புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், நோர்வே Bømlo ஐ வசிப்பிடமாகவும், தற்போது பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட தங்கேஸ்வரி ஜெயதாசன் அவர்கள் 10-06-2022 வெள்ளிக்கிழமை அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், கரம்பனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சாம்பசிவம், மீனாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகளும்,

ஜெயதாசன் (ஜெயம்) அவர்களின் அன்பு மனைவியும்,

லக்சிதா, லக்சன், நிவேதிதா ஆகியோரின் அன்புத் தாயாரும்,

சுதந்திரகரன் (கனடா), விவேகானந்தன (பிரான்ஸ்), ஈஸ்வரி (பிரான்ஸ்), ஞானகரன் (ஜேர்மனி), சிறிகரன் (இங்கிலாந்து), ரதி (இலங்கை), இந்திரா (கனடா), ரவி (இங்கிலாந்து), சுதா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

காலஞ்சென்ற இராசையா, மற்றும் மங்கை தம்பதிகளின் மருமகளும்,

காலஞ்சென்ற கண்ணதாசன், புனிதவதி, காலஞ்சென்ற செல்வி, புஸ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சத்தியலோசனி (யசோ, கனடா), சாந்தி, திருச்செல்வம், ஜெயரஜிதா, பிரேமா, ரஞ்சன், சுதன், சியாமினி, பவன் ஆகியோரின் மைத்துனியும்,

சேனாதிராஜா, தவராஜா, வேங்குலன் (பாபு) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் 09-07-2022 சனிக்கிழமை மாலை 12:00 மணி தொடக்கம் 3:00 மணி வரை Angel Funeral Directors ltd (267 Allenby Rd, Southall UB1 2HB, United Kingdom) இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, 11-07-2022 திங்கட்கிழமை காலை 8:00 மணி தொடக்கம் 11:00 மணி வரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் காலை 11:30 மணி தொடக்கம் மாலை 1:00 மணி வரை North East Surrey Crematorium (Cemetery Lodge, Lower Morden Ln, Morden SM4 4NU, United Kingdom) இல் தகனம் செய்யப்படும்.***

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
ஜெயம் - கணவர்: +447521969301
சிறி - சகோதரன்: +447578013488
ரவி - சகோதரன்: +447465838839

-- www.uthayannews.ca என்ற இணையதளத்தில் ஆன்லைனில் பார்க்கலாம் --

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca










26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்




உதயம் 1370 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 8, 2022

# ஸ்காபுறோவில் FRONTLINE COMMUNITY CENTRE நிறுவனம் நடத்திய கனடா தின விழா



ஸ்காபுறோவில் திருமதி விஜயா குலா வின் நிர்வாகத்திலும் பல தொண்டர்களின் கடுமையான ஒத்துழைப்புடனும் வெற்றிகரமாக இயங்கிவரும் **FRONTLINE COMMUNITY CENTRE** நிறுவனம் நடத்திய கனடா தின விழா கடந்த சனிக்கிழமையன்று மார்க்கம் வீதியில் உள்ள **FRONTLINE COMMUNITY CENTRE** தலைமை அலுவலகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி கனடா தின வைபவத்திற்கு ஒன்றாரியோ மாகாண அமைச்சர் றேமன்ட் சோ மாகாண பாராளுமன்ற உறுப்பினரும் முக்கிய அமைச்சு ஒன்றின் பாராளுமன்றச் செயலாளருமான விஜய் தணிகாசலம் ஆகியோர் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

**FRONTLINE COMMUNITY CENTRE** சேவை வழங்கும் நிறுவனத்தில் தொண்டர்களாகவும் அங்கத்தவர்களாகவும் உள்ள பல மூத்தோர்கள் தங்கள் கலைத் திறமைகளையும் பேச்சாற்றலையும் அங்கு பார்வையாளர்கள் முன்பாக சமர்ப்பித்தனர். சில பெண்மணிகள் ஆற்றிய உரைகள் ஆழமான கருத்துக்கள் கொண்டவையாக விளங்கின என்றால் அது மிகையாகாது.

# ‘சாந்தா பஞ்சலிங்கம் போன்று தங்களுக்கு கல்விச் செல்வத்தை ஊட்டிய ஆசிரியப் பெருந்தகைகளை மக்கள் மத்தியில் கௌரவிக்க வேண்டும்’



## ‘சிவமயச் செல்வி’ மீனா தவரட்ணம் அவர்களின் பாராட்ட விழாவில் இங்கிலாந்து போல் சத்தியநேசன் புகழாரம்

கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர், சாந்தா பஞ்சலிங்கம் போன்று தங்களுக்கு கல்விச் செல்வத்தை ஊட்டிய எமது ஆசிரியப் பெருந்தகைகளை மக்கள் மத்தியில் கௌரவிக்க வேண்டும். அத்துடன் அவர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும் என்ற கூற்றை ஒரு வேத வாக்காகக் கொண்டு நாம் காரியங்களை ஆற்ற வேண்டும். அந்த வகையில் இன்றை இந்த விழாவை உலகெங்கும் பல நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த விருந்தினர்கள் மத்தியில் எமது ஊரின் நட்சத்திர ஆசிரியையாக விளங்கிய திருமதி மீனா தவரட்ணம் அவர்களின் பாராட்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்“. இவ்வாறு தெரிவித்தார் இங்கிலாந்து வாழ் திரு போல் சத்தியநேசன்.

(உள்ளே விபரமான செய்தி 18ம் பக்கத்தில்)

# ஸ்காபுறோ 'நாத வீணா மன்றம்’ தனது 10வது ஆண்டு பூர்த்தி விழாவை பெற்றோர். மாணவர்கள் சகிதம் கொண்டாடியது.



ஸ்காபுறோ நகரில் ஆசிரியை ஸ்ரீமதி குகனேஸ்வரி சத்தியமூர்த்தி தலைமையில் இயங்கிவரும் நாதவீணா மன்றம் தனது 10வது ஆண்டு பூர்த்தி விழாவை பெற்றோர். மாணவர்கள் ஆகியோரோடு கடந்த கனடா தினத்தன்று - யூலை 1ம் திகதி- இணைந்து சிறப்பாக கொண்டாடியது.

இந்த விழா ஸ்காபுறோவில் அமைந்துள்ள “இசைக் கலா மன்றத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.

ஆசிரியை குகனேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களின் அழைப்பின் பேரில் பிரதம விருந்தினராக ‘கனடா உதயன்’ நாகமணி லோகேந்திரலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினராக ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி டொலி பேகம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரைகளை ஆற்றியும் மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கியும் கௌரவித்தனர்.

(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)

# பலாலி, காங்கேசன்துறையின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது

## - யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்

இல்லாததை இருப்பது போலவும், முடியாததை முடியும் என்பது போலவும், போலி வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றுவது இலங்கை ஆட்சியாளர்களுக்கு கைவந்த கலை போலுள்ளது.

பலாலி விமானமும் இல்லை, காங்கேசன்துறை கப்பலும் இல்லை, அடுத்து யாழ் கிளிநொச்சி போக்குவரத்தாவது இடம்பெறுமா என்ற ஏக்கத்தில் இரு மாவட்ட மக்களும் உள்ளனர்.

பலாலி விமான சேவை யூலை மாதம் 1ஆம் திகதி முதல் இடம்பெறும் என அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நிமால் சிறிபாலடீசில்வாவும் தெரிவித்தனர். இத்தோடு காங்கேசன் துறை காரைக்கால் கப்பல் சேவைக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கி விட்டது விரைவில் கப்பல் சேவை என்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா. எவையுமே இன்றுவரை இடம்பெறவில்லை.

(உள்ளே விபரமான செய்தி 25ம் பக்கத்தில்)




# கனடாவில் இயங்கிவரும் "புங்குடுதீவு பழைய மாணவர்கள் சங்கம்" நடத்திய வருடாந்த ஒன்றுகூடல் சிறப்பாக நடைபெற்றது



கனடாவில் இயங்கிவரும் “புங்குடுதீவு பழைய மாணவர்கள் சங்கம்“ நடத்திய வருடாந்த ஒன்றுகூடல் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம்- ஸ்காபுறோ ஆகிய நகரங்களுக்கு இடையில் உள்ள “மிலிக்கன் பார்க் “ பூங்காவில் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த வருடங்களிலும் பெருமளவில் மக்கள் கலந்து கொண்ட ஒரு வெற்றிகரமான ஒன்றுகூடலாக இது விளங்கியது என்றே கூறலாம்.

விளையாட்டுப் போட்டிகள். பொழுது போக்கு அம்சங்கள் மதிய மற்றும் இரவு உணவு என அனைத்தும் சிறந்த முறையில் அதிக கவனமெடுத்து நிறைவேற்றப்பட்டன

சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இங்கு கலந்து கொண்டதாக சங்கத்தின் நிர்வாகிகளால் அறிவிக்கப்பட்டது.

